

சீன ஓபனில் பட்டம் வென்றனர் ஜோகோவிச், ஷரபோவா

பக்கம் 22


# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 315 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 21, செவ்வாய் 07.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


07 OCT 2014



ஆசிரியர் தினமான நேற்று, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள், அதிபர்களால் யாழ்.மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்துகொண்டனர்.

(விரிவான தகவல்கள் 2ஆம் பக்கத்தில்)

# ஜனாதிபதியின் வருகையை கூட்டமைப்பு புறக்கணிக்கும்

## வடக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் இன்று உத்தியோகபூர்வ முடிவு; நம்பகரமான தகவல் கசிந்தது

யாழ்ப்பாணம், ஒக்.7
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் வடக்குக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களோ பங்கேற்கப் போவதில்லை என்றும், ஜனாதிபதியின் வடக்கு வருகையை முற்றாகப் புறக்கணிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ முடிவு இன்றைய வடக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி இந்த வார இறுதியில் வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். எதிர்வரும் 12 ஆம் திகதி கிளிநொச்சியிலும், 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் நிகழ்வுகளில் அவர் பங்கெடுக்கவுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 13 ஆம் திகதி வடக்கு மாகாண அபிவிருத்திக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதற்குரிய அழைப்பிதழ்கள் ஜனாதிபதி செயலகத்தால் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பங்கேற்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவெடுக்காதிருந்தனர். இது தொடர்பில் கடந்த 2 ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த விடயம் குறித்து அதில் நீண்ட நேரம் ஆராயப்பட்டபோதும் முடிவேதும் எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில், ஜனாதிபதி பங்கேற்கும் எந்த நிகழ்விலும்

06 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மேலும் ஒரு ரயில் தரிப்பிடம்



யாழ்ப்பாணம், ஒக்.7
பயணிகள் வசதி கருதி, கிளிநொச்சியில் மேலும் ஒரு ரயில் தரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலை ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் முறிகண்டி ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்த ரயில் தரிப்பு நிலையம் அமையவுள்ளது என்றும், தற்போது முதற்கட்டமாக அங்கு பயணிகள் நடைபாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

"யாழ்.பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி விவசாய, பொறியியல் பீடத்துக்கு அண்மையில் இந்த தரிப்பிடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பீடங்களின் மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி இந்த ரயில் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. இந்த தரிப்பிட மேடைக்கான அடிக்கல் ஏற்கனவே நடப்பட்டது. தற்போது இந்த மேடையின் அமைப்புப் பணிகள் யாவும் இந்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளன"- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-17)

## காலநிலை

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

எதிர்வரும் தினங்களில் வங்காள விரிகுடா கடற் பிரதேச பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்க கூடும் என்று காலநிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா இன்று

வடமராட்சி, ஒக்.6
சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்திருவிழா இன்று 7 ஆம் திகதி காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து ஆழ்வார் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் காட்சி வழங்குவார்.

நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் சமுத்திர தீர்த்தத் திருவிழா, பூரண சந்திர கிரகணத்தை முன்னிட்டு இம்முறை வழமையை விடவும் முன்னதாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் நடை பெற்று, பிற்பகல் 2.30 மணிக்கு சுவாமி தீர்த்தமாடப் புறப்பட்டுச் செல்வார். பி.ப. 3.30 மணிக்கு தீர்த்தமாடி முடிந்ததும் பி.ப. 4.30 மணிக்கு மீண்டும் கோயிலுக்குத் திரும்புவார்.


நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பட்டுத் தீர்த்தத் திருவிழா என்று அழைக்கப்படும் கேணித் தீர்த்தத் திருவிழா நடைபெறும். மாலை 6 மணிக்கு கொடி இறக்கத்துடன் பெருந்திருவிழா நிறைவுறும். (ற-173)

## சுவிஸ் செல்ல முயன்ற கோபியின் மனைவி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுப்பு

யாழ்ப்பாணம், ஒக் 07
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயன்றார் என்று கூறப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட கோபியின் மனைவி, புகலிடம் கோரி சுவிஸ் நாட்டுக்கு செல்ல முயன்றபோது பயங்கரவாத

06 ஆம் பக்கம் பார்க்க

### பிழையான தகவல்கள் கொடுத்தாராம்



கொழும்பு, ஒக்.6
வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த 2 பெண்கள், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து திருப்பியனுப்பப்

06 ஆம் பக்கம் பார்க்க

## நீரைப் பரிசோதிப்பதற்கு வடக்கில் ஆய்வு மையம்

### முதன்முறையாக வடமராட்சியில்

யாழ்ப்பாணம்.ஒக்.7
நீர் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆய்வு மையம் வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக வடமராட்சியில் இயங்கவுள்ளது. இந்த ஆய்வு மையம் எதிர்வரும் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண விவசாய மற்றும் கால்நடைகள், நீர்ப்பாசன அமைச்சால் தொண்டமானாறு பகுதியில் இந்த ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நீர் குறித்த ஆய்வுகளை மேற் கொள்வதற்கான ஆய்வு மையம் எதுவும் இதுவரை இல்லை. அதனால் நீரில் மாசு கலந்துள்ளதா என்பது தொடர்பான ஆய்வுகளுக்கு கொழும்பை எதிர்பார்க்கும் நிலை காணப்பட்டது. இந்தநிலையில் தற்போது 5 மில்லியன் ரூபா நிதிச் செலவில், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, நீர் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு மையத்தின் ஊடாகப் பொது மக்கள் நீர் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு முடிவுகளைப் பெறமுடியும். வடக்கு மாகாணத்தில் முதல் தடவையாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வு மையத்தில் தகுதி வாய்ந்த ஆய்வுப் பணியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-14)

## இறம்பொடை நீர்வீழ்ச்சியில் விழுந்து யாழ்.இளைஞர் சாவு



நுவரெலியா, ஒக்.7
நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலை, இறம்பொடை நீர்வீழ்ச்சியில் விழுந்து நேற்று யாழ்ப்பாணம்,

06 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்தை ஜனாதிபதி விமர்சிப்பது வெட்கக்கேடு

### தமிழ்க் கூட்டமைப்பு, வடக்கு சிவில் சமூகம் விமர்சிப்பு

கொழும்பு, ஒக்.7
"இலங்கையில் சர்வதேச தலையீடுகளைத் தவிர்க்க முடியாது. இந்தத் தலையீடுகளுக்கு அரசே வழிவகுத்தது. இங்கு சிங்கள மக்களைப் போல் தமிழ்ப் பேசும் மக்களும் அனைத்து உரிமை

06 ஆம் பக்கம் பார்க்க



புனித ஹஜ் பெருநாள் இன்று நாடு முழுவதும் முஸ்லிம் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு விசேட தொழுகைகள் நடைபெற்றன. நேற்றுக் காலை தொடக்கம் பள்ளிவாசல்களில் விசேட தொழுகைகளும் பெருநாள் குத்பா பிரசங்கங்களும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டனர். இதேசமயம் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்திலும் ஹஜ் பெருநாள் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அகில இலங்கை தவ்ஹீத் ஜமா. ஏறாவூர் கிளை ஏற்பாடு செய்த ஹஜ் பெருநாள் திடல் தொழுகை ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று காலை 6.30 மணிக்கு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம். (ற)

## சப்ரகமுவ பல்கலை விடுதியில் தங்கி இருந்தால் மாணவர் அந்தஸ்து பறிமுதல்

கொழும்பு, ஒக்.7

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஆண்கள் விடுதியில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் பெண்களின் மாணவர் அந்தஸ்து பறிக்கப்படும் என்று பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார். மாணவிகளின் இந்த செயற்பாட்டால் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு பல்கலைக் கழக நிர்வாகம் நேற்றுத் தீர்மானித்தது.

அதன்படி நேற்று மாலை 6 மணியுடன் மாணவர்கள் விடுதியை விட்டுச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்ட போதும் சில மாணவர்கள் விடுதியில் தங்கியிருக்கின்றனர் என்று உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## பிரதமர் அலுவலகத்துள் நுழைய முயன்றவர் கைது

கொழும்பு, ஒக்.7

போலி ஆவணங்களைக் காண்பித்து பிரதமர் காரியாலயத்துக்குள் நுழைய முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றத்தடுப்பு பிரிவினர் இவரை கைது செய்துள்ளனர். குறித்த நபர் வென்னப்புவ லுணாவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

## 1,500 போலி பேஸ்புக் கணக்குகள் முடக்கம்

கொழும்பு, ஒக்.7

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 1,500 போலி பேஸ்புக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என்று இலங்கை கணினி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவிக்கின்றது.

போலிக் கணக்குகள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் பேஸ்புக் நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்படுகின்றன என்றும் ஒன்றியத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய அந்த நிறுவனத்தால் போலி பேஸ்புக் கணக்குகள் முடக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இணையத் தளங்கள் தொடர்பாக இந்த வருடம் 1,800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை கணினி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவித்துள்ளது. அவற்றில் அநேகமானவை போலி பேஸ்புக் கணக்குகளுடன் தொடர்புபட்டு காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

போலி பேஸ்புக் கணக்குகளை வைத்திருப்பவர்கள் தொடர்பில் 0112 691 692 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இராணுவத் தலையீட்டை பாடசாலைகளில் நிறுத்து

## இலங்கை ஆசிரியர் சங்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 7

பாடசாலைகளில் இராணுவ தலையீட்டை நிறுத்த வேண்டும், தமிழிலும் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட வேண்டும், அமைச்சர் பந்துல வால் அதிபர்கள், ஆசிரியர்கள் ஏமாற்றப்படுவதைக் கண்டிக்கிறோம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மதியம் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின்,

"இன்று (நேற்று) ஆசிரியர் தினம். ஆசிரியர்களது உரிமைக்காகப் போராடும் தினம். ஆசிரியர்களுக்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து பதவியுயர்வுகள் இல்லை. வடக்கு மாகாணத்தில் தேசிய இடமாற்றக் கொள்கைகளைப் பின்பற்றாது ஆசிரிய இடமாற்றங்கள் நடக்கின்றன. தற்போது பாடசாலைகளில் இராணுவம் தலையீடு செய்கிறது. ஆசிரியர் தினமான இன்றைய நாளில் நாம் அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். "- என்று தெரிவித்தார்.

அதேவேளை, ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயம், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் நான்கு பேர் அங்கு நின்றிருந்தனர். புலனாய்வாளர்களும் அந்தப் பகுதியில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜோசப் ஸ்ராலின், "எமக்கு எதிராக அரசு என்ன செய்தாலும் அதற்கு நாம் அடங்கிப் போகமாட்டோம்."- என்று தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், அனந்தி சசிதரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ற-4)



ஆர்ப்பாட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டவை:-

வரவு- செலவுத் திட்டத்தில் கல்விக்கான செலவீட்டை அதிகரிக்க வேண்டும்.

அதிபர், ஆசிரியர்களை ஏமாற்றாதே, அதிபர், ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு கடன்களை வழங்க வேண்டும்.

விசேட கல்வி ஆசிரியர்களுக்கான 10 வீத கொடுப்பனவை உடனடியாக வழங்க வேண்டும்.

ஊழல் மற்றும் குற்றச் செயல்கள் பற்றிய முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எங்கே?.

ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவைத் தரத்துக்கு உள்வாங்க வேண்டும்.

குறைந்த சம்பளத்தில் ஆசிரிய உதவியாளர்களின் சேவையைக் கேவலமாக்காதே.

தமிழிலும் சுற்றறிக்கைகள் வேண்டும்,

பாடசாலைகளில் பாதுகாப்புப் படையினரின் தலையீட்டை நிறுத்த வேண்டும்.

பலாலி ஆசிரியர் கலாசாலையை இயங்கவிட வேண்டும்.

நியமனங்களில் அரசியல் தலையீடுகளை நிறுத்த வேண்டும்.

இடமாற்றக்கொள்கையைச் சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதிபர்களுக்கான இடமாற்ற சபையை உருவாக்க வேண்டும்.

பாடசாலைகளில் பணம் அறவிட வேண்டாம்.

பாடசாலைகளில் பணம் அறவிடும் அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள பலாலி ஆசிரியர் கல்லூரியை மீண்டும் இயங்கவிட வேண்டும்.

ஆசிரியர்களுக்கு 5 வருட, 10 மாத கடன்களை வழங்க வேண்டும்.

# சர்வதேச ஆசிரியர் தினம் நேற்று

## சில பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.7

சர்வதேச ஆசிரியர் தினம் வடக்கு மாகாணத்தில் நேற்று சில பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது. எனினும் நேற்று விடுமுறைதினம் என்பதால் பல பாடசாலைகளில் அந்த நிகழ்வு இடம்பெறவில்லை. பிறிதொரு நாளுக்கு அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

விடுமுறை மாத்திரமன்றி நேற்று ஹஜ் பெருநாளாகவும் இருந்ததனால் வடக்கில் பல பாடசாலைகளில் ஆசிரியர் தினம் நேற்றுக் கொண்டாடப்படவில்லை. சில பாடசாலைகளில் 6 ஆம் திகதியன்றே ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதாக முன்னரே தீர்மானிக்கப்பட்டது. எனினும் அன்றைய தினத்தை விடுமுறை தினமாக அரசு அறிவித்தது. அதனால் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. எனினும் முன்னரே தீர்மானிக்கப்பட்டபடி சில பாடசாலைகளில் ஆசிரியர் தினம் நேற்றுச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வடக்கில் 5 மாவட்டங்களிலும் இவ்வாறான நிலையே காணப்பட்டது.

பெரும்பாலும் இன்று செவ்வாய்க்கிழமை பல பாடசாலைகளில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4,108)

## விபத்துகள்

தென்மராட்சி

### இரு விபத்துகளில் இருவர் காயம்

மீசாலை வடக்குப் பகுதியில் ஒரு கிலோமீற்றர் இடைவெளியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் இருவர் காயமடைந்துள்ளனர். மீசாலை புத்தூர் சந்தி, ஏ-9 வீதியில், சைக்கிளில் சென்ற வரை பஸ் மோதியதில், மீசாலை வடக்கைச் சேர்ந்த தம்பிமுத்து தர்மலிங்கம் (வயது-77) என்பவர் காயமடைந்துள்ளார். மீசாலை வடக்கு, வேம்பிராய்ப் பகுதியில் லான்ட்மாஸ்டரும் ஓட்டோவும் விபத்துக்குள்ளானதில், தாவளை இயற்றாலையைச் சேர்ந்த திருநாவுக்கரசு விஜேந்திரன் (வயது -43) என்பவர் காயமடைந்துள்ளார். (ற-9)

திருவையாறு

### மோ.சைக்கிள் விபத்தில் சிறுவன் காயம்

மோட்டார் சைக்கிள் வேலிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சி.நிலக்ஷன் (வயது-16) என்பரே காயமடைந்தவராவார். அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். பக்கத்து வீட்டிலுள்ள சிறுவனை பாடசாலையில் இறக்கி விட்டு வீடு திரும்பும் போதே இந்த விபத்து நடந்துள்ளது. (ற-106)

இறம்பொடை

### பஸ்ஸில் இருந்து விழுந்து மூதாட்டி காயம்

பஸ் நிறுத்தப்படுவதற்கு முன்னர் அதிலிருந்து இறங்க முற்பட்ட வயோதிபப் பெண், கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் பருத்தித்துறை, சிவன் கோயிலடி பஸ் தரிப்பிடத்தில் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் தும்பளையைச் சேர்ந்த கே.அன்னலட்சுமி (வயது-68) என்பவரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-173)

இரத்தினபுரி

### பஸ் விபத்தில் 17 பேர் சாவு

இரத்தினபுரி, இறக்குவானையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 17 பேர் படுகாயமடைந்த நிலையில் கஹவத்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரியில் இருந்து எம்பிலிபிட்டியவுக்குப் பயணித்த பஸ்ஸை கஹவத்தை-கொடக்கவெல வழியில் பயணித்த பஸ் ஒன்று முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ற)



இறம்பொடை

### மாடியில் இருந்து விழுந்து ஒருவர் சாவு

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலன்னாவை பகுதியிலுள்ள இரண்டு மாடி கட்டடத்திலிருந்து, கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. குறித்த நபர் 40 வயதுடையவர் என்றும், இரவு தூங்கி கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கீழே விழுந்து உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த மாடியில் வைத்து மது அருந்தியமைக்கான அடையாளங்கள் இருக்கின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 21 செவ்வாய் (07.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 315

# கூட்டமைப்பைப் பதிவு செய்ய மக்களின் அழுத்தம் வேண்டும்


## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 7

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இதற்குரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியவர்கள் பொதுமக்களே.**

**இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோப்பாய் தொகுதிக் கிளைக் குழுவைத் தெரிவு செய்யும் நிகழ்வு, கூட்டமைப்பின் நீர்வேலிப் பணிமனையில் இடம்பெற்றது.**



இந்த நிகழ்வில் வைத்தே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் முதலமைச்சருடனான சந்திப்பில், முதலமைச்சர் தான் ஆயுதம் தாங்கிய அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட முடியாது என்று தெரிவித்திருந்தார். அதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன். தேர்தலின்போது ஐந்து கட்சிகளும் இணைந்து அழைத்தால் மாத்திரமே வருவேன் என்று தெரிவித்துவிட்டு இப்போது இவ்வாறு சொல்லக் கூடாது. இதனைத் தேர்தலுக்கு முன்பே கூறியிருக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தேன்.

கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தவிர ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் ஒரு கால கட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடின. 1987 ஆம் ஆண்டு ஆயுதங்களை கைவிட்டு இலங்கைத் தேர்தல்கள் திணைக்களத்தில் கட்சிகளாக அனைவரும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இன்றைக்கு 25 வருடங்களுக்கு மேலாக ஒரு ஜனநாயகபூர்வமான கட்சிகளாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

நான் இப்போது நாடாளுமன்றத்தில் மூன்றாவது முறையாக உறுப்பினராக இருக்கின்றேன். 15 வருடங்களாக நாடாளு

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வீடமைப்பு அதிகார சபையின் செயற்திட்டங்கள் யாழில்

யாழ்ப்பாணம்.ஒக்.7

சர்வதேச குடியிருப்பாளர் தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நாடளாவிய ரீதியில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குடியிருப்பின் குரல் எனும் தொனிப்பொருளில் காணிகள் வழங்கப்பட்டவர்களுக்கான உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஜனசெவன 10 இலட்சம் தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கை என்பதற்கு அமையக் காசோலைகள் மற்றும் உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடியிருப்பின் குரல் எனும் தொனிப்பொருளில் யாழ்.மாவட்டத்தில் கடந்த 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிகள் 81 கிராமங்களைச் சேர்ந்த 53 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 5 இலட்சம் வரையான வீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை ரீதியில் போட்டிகள் நடத்தப்பட்டுத் தேசிய ரீதியில்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த வருகையையொட்டி பத்து புதிய இ.போ.ச பஸ்கள்

### வடக்கு டிப்போக்களுக்கு வந்தன

யாழ்ப்பாணம்.ஒக்.7

ஜனாதிபதியின் யாழ். வருகைக்கு முன்னோடியாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்குப் புதிதாக பஸ்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

வடபிராந்தியத்தின் டிப்போக்களுக்குப் 10 புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் உட்பட டிப்போக்களுக்கு 7 பஸ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஆறு பஸ்கள் வந்து சேர்ந்துள்ளன. மற்றைய பஸ் இன்று வந்து சேரும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ்ப்பாண டிப் போவில் உள்ள சில பஸ்கள் ஓட முடியாது பழுதடைந்த நிலையில் உள்ளன.

இந்த நிலையில் தற்போது புதி தாக வந்த பஸ்களை வெளிமாவட்ட மற்றும் உள்ளூர் சேவைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.என்.ரி. மருத்துவர்கள் மாநாடு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஒக்.7

9ஆவது சார்க் காது, மூக்கு, தொண்டை (ஈ.என்.ரி) மருத்துவர்களின் மாநாடு இம்முறை கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பிராந்திய மருத்துவர்கள் சிறந்த தொடர்புகளைப் பேணிச்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் கல்வியை சீர்குலைக்கும் வகையில் செயற்படுகிறார் எஸ்.பி.

### சோஷலிஸ இளைஞர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய செயற்படும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, நாட்டின் கல்வியை சீர்குலைக்கும் வகையில் செயற்படுகின்றார் என்று சாடியுள்ள சோஷலிஸ இளைஞர் சங் கம், அமைச்சர் எஸ்.பி.வாயாடி என்றும் விமர்சித்துள்ளது.

சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது, கருத்து வெளியிடுகையிலேயே மேற்படி சங்கத்தின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க உயர்கல்வி அமைச்சருக்கு எதிராக மேற்படி கருத்துகளை முன்வைத்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ள விவகாரம் பற்றி கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சப்ரகமுவ பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமக்கு இருக்கும் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு கொண்டு

(06 ஆம் பக்கம் பார்க்க)

## துவாரகேஸ்வரன் கைதாகிப் பிணை

யாழ்ப்பாணம், ஒக்.7

பிரபல வர்த்தகரான தியாகராஜா துவாரகேஸ்வரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.-கொழும்பு சேவையில் ஈடுபடும் அவரது சொகுசு பஸ்ஸை யாழ். நல்லூர் செட்டித்தெரு வீதிப் பகுதியில் பயணித்தபோது பொலிஸார் சோதனையிட்டனர். இதன் போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் நேற்றுமுன்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 3 ஆவது முறையாக களமிறங்க முடியாது

### மீறினால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.7

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்றும், இதையும்மீறி அரசமைப்புக்கு சவால் விடுக்கும் வகையில் அவர் களமிறங்குவாரானால் உயர்நீதிமன்றத்தை நாடுவது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சி பரிசீலித்து வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஷ ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

2015 ஜனவரியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்று எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. முன்னாள் பிரதம நீதியரசராகச் செயற்பட்ட சரத் என். சில்வாவும் இந்த் தர்க்கத்தை முன்வைத்துள்ளார். இதையும் மீறி ஜனாதிதி மஹிந்த தேர்தலில் குதிப்பாராயின் உயர்நீதிமன்றத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் போட்டியிடுவதற்கு அரசமைப்பு ரீதியாக எந்தவொரு சிக்கலும் இல்லை என வாதிடும் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், இதற்கு சான்றாக அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை குறிப்பிடுகின்றனர்.

அதாவது, அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தையடுத்து, அரசமைப்பின் 31 ஆவது ஷரத்தின் 2 ஆம் பிரிவு நீக்கப்பட்டுவிட்டது. இந்த சட்டப்பிரிவு தான் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிட முடியாது என வரையறுத்திருந்தது. ஆகவே, அது நீக்கப்பட்டுவிட்டதால் ஜனாதிபதி போட்டியிடுவதற்கு எவ்வித தடங்கலு மில்லை என்றும் ஆளுந்தரப்பினர் சுட்டிக்காட்டுகின் றனர்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்த லில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் களமிறங்குவதற்கு அரசமைப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். டிப்ளோமா மாணவர்கள் வேலைவாய்ப்பில் புறக்கணிப்பு

### தென்பகுதி மாணவர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.7

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியை மூன்று வருடங்களில் பூர்த்தி செய்துள்ள தென்பகுதி மாணவர்கள், பட்டதாரிகள் உள்ளீர்ப்பின்போது இணைக்கப்பட்டு அவர்களுக்கு நிரந்தர வேலைகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் மூன்று வருடங்களில் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நிய

(06 ஆம் பக்கம் பார்க்க)

## "ஐடியல்" அக மகிழ்ந்து வாழ்த்துகிறது



எமது கல்வி நிலைய விஞ்ஞான ஆசிரியர்

**மகாதேவன் முகுந்தன்**

அவர்கள் 06.10.2014 அன்று பிரதீபா பிரபா விருதைப் பெற்றமைக்காக அவரை உளமார அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

53007

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.

681/13 K.K.Sவீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்



**ஐயாத்துரை இராசம்மா**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராசம்மா 05.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரசிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், தனபாலசிங்கம், பத்மாவதி, வரதராசசிங்கம், ராசகுலேந்திரன், செல்வகுலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், புனிதவதி, காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், கமலா மற்றும், றஞ்சி, தையல்நாயகி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சண்முகராசா மற்றும் பரமேஸ்வரி, சவுந்தரேஸ்வரி (மணி) தெட்சணாமூர்த்தி, சற்குணராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 08.10.2014) புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகள் விளாவெளி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
வடலியடைப்பு.

(53018)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

# தற்போதைய அரசின் ஆட்சியில் மக்கள் அடிவாங்க நேரிட்டுள்ளது

## கரு ஜயசூரிய கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.7

இந்த அரசின் ஆட்சியின் கீழ் மக்கள் அடிவாங்க நேரிட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். ஊடக அறிக்கை யொன்றின் மூலமே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது.

"சுதந்திர இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இராஜதந்திரி ஒருவரை தாக்கியமை இதுவே முதல் தடவை யாகும். நாட்டின் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர சேவையில் பெரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

49 ராஜதந்திரிகளில் 35பேர் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள். கிறிஸ் நோனிஸ் தொடர்பில் சில விமர்சனங்கள் இருந்தாலும், நாட்டுக்காக சேவையாற்ற முயற்சித்



தவர். நோனிஸ் மீதான தாக்குதல்கள் குறித்து நியாயமான விசாரணைகள் நடைபெறும் என நம்ப முடியாது. தற்போது தூதுவர், இராஜதந்திர உயர்ஸ்தானிகர் போன்ற பதவிகளை வகிக்க எந்தவொரு கல்வித் தகைமையோ வேறு தகை மைகள் கிடையாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## 180 மீனவர்கள் புயலில் சிக்கினர்?

கொழும்பு, ஒக்.7

இலங்கையின் தென் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்காக சென்ற மீனவர்களுடன் 31 படகுகள் சுழற்காற்றுக்கு சிக்குண்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 180 மீனவர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் அது குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை.

இவ்வாறான சுழற்காற்றுடன் கூடிய வானிலை நிலவுகின்றதா என நாம் வளிமண்டலவியல் திணைக்களத்திடம் வினவியபோது, இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பிலோ அல்லது மியன்மாரை அண்மித்த கடற்பரப்பிலோ அவ்வாறான வானிலை மாற்றமொன்று ஏற்படவில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ற)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**செல்வன் சூ. வேணுசன்**

தாவளை, இயற்றாலை கொடிகாமத்தைச் சேர்ந்த சூரியகுமார் கலைச் செல்வி தம்பதியரின் செல்வப் புதல்வனும், யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையின் மாணவனுமாகிய செல்வன் சூ. **வேணுசன்** அவர்கள் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேன்மேலும் சிறந்து விளங்க முத்துமாரி அம்பாள் துணையை வேண்டி நிற்கின்றோம்.

மேலும் அவரை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துவதோடு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**வாழ்த்துவோர்:**

அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா, மாமாமார், அத்தைமார், சித்தி, சித்தப்பா, அக்கா, அண்ணாமார், மச்சான், மச்சாள்மார்

## மரண அறிவித்தல்

**முத்து பொன்னையா**

(முன்னாள் கிளை முகாமையாளர்- ப.நோ.கூ.ச. சாவகச்சேரி)



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து பொன்னையா நேற்று (06.10.2014) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-எல்லுப்போலை தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியை, யா/மீசாலைவீரசிங்கம் மத்திய கல்லூரி), மயூரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கார்த்திகேசு (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தென்மராட்சி), வேறா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கலைவாணி (சுற்றாடல் உத்தியோகத்தர்), காந்தபாலன் (பொறியியலாளர்), கமலபாலன் (பொறியியல் பீடம், மொறட்டுவ), கோபாலராஜா (பொறியியலாளர்), டொமினிக், சுகன்யா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், வந்தனாவின் அன்புப் பூட்டனும், கணபதிப்பிள்ளையின் (ஓய்வுநிலை இ.போ.ச ஊழியர்) பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற செல்லையா, மற்றும் முத்துப்பிள்ளை, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2014) புதன்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54, அம்மன் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(53013)

தகவல் :
குடும்பத்தினர்.
0212050610

## மரண அறிவித்தல்

**திருமதி இராஜலட்சுமி தனபாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற கனிஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்.)



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் குறுக்கு வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி தனபாலசிங்கம் நேற்று (06.10.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருணாச்சலம் தனபாலசிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சிவகொழுந்து தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம்- இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுரேஷ்குமார் (பொறியியலாளர்USA), சுகன்யா (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதர்சினி (USA), ரமணன் (முகாமைத்துவ உதவியாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், ரட்ணாங்கமி, சுதன் (USA) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.

82/2, குறுக்கு வீதி, நல்லூர் தொ.பே- 0212225356, 0779071505

உதயன் 07.10.2014



# சொந்தக் காலில் நிமிர்ந்து நடக்கும் காலம் விரைவில் தமிழ் மக்களுக்கு

## மாகாண சபை உறுப்பினர் கூறுகிறார்

வவுனியா, ஒக் .7
எமது மக்கள் தமது சொந்தக் காலில் நிமிர்ந்து நடக்கும் காலம் விரைவில் வரும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த பட்டிக்குடியிருப்பு, துவரங்குளம், கற்குளம், மாமடு, முத்துமாரி நகர், கனகராயன்குளம், புத்தூர்சந்தி, மன்னகுளம், கொல்லர் புளியங்குளம், அனந்த புளியங்குளம், ஆகிய கிராம மக்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு உதவிகளை வழங்கினார் மருத்துவர் சி.சிவமோகன்.

இந்த நிகழ்வு நெடுங்கேணி நகர மத்தியில் 400 க்கும் மேற்பட்ட மக்களின் பங்குபற்றலுடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.



இதில் 16 பயனாளிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ஒருமாத வளர்ச்சியடைந்த கோழிக்குஞ்சுகளும், 20 பயனாளிகளுக்கு தலா 3 புசல் விதை நெல்லும், 75 வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு பிரஜைகள் குழுத் தலைவர் க.தேவராசா, நெடுங்கேணி பிரதேச வர்த்தகர் சங்கத் தலைவர் பொ.தேவராசா, வவுனியா தெற்கு கிராம சேவையாளர் தெய்வேந்திரம்பிள்ளை உட்பட கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், வன்னி குறோஸ் சுகாதார நிறுவன கிராமிய மட்ட செயற்குழு உறுப்பினர்கள் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர். (த-421)

# வட்டக்கச்சி கிராமத்துக்கு குடிதண்ணீர்

கிளிநொச்சி, ஒக் 7
கிளிநொச்சி வட்டக்கச்சிக் கிராமத்திற்கான குடிதண்ணீர் வழங்கல் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

வட்டக்கச்சி கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்ற பகுதிகளுக்கு நீர்த்தாங்கி மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. துற்போது நீர்க் குழாய்கள்



பொருத்துழ் வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

வட்டக்கச்சி போன்று அக்கராயனிலும் குடிதண்ணீர் விநியோகத்துக்கான வேலைகள் நிறைவுபெற்றுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கியமாக குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்ற ஜெயபுரம், கல்லாறு, ஆனைவிழுந்தான்குளம், வலைப்பாடு, முழங்காவில், கோணாவில், காந்திக்கிராமம் ஆகியகிராமங்களுக்கும் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் தொடங்கவுள்ளன. (த-18)

# உங்களின் தேவைகளை உரிமையுடன் கேளுங்கள்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கூறுகிறார்

வவுனியா, ஒக் 7
இம்முறை மாகாண சபைத் தேர்தலின்போது வாக்களிப்பது உங்கள் கடமை; வாக்களிப்பது உங்கள் உரிமை" என்ற தாரக மந்திரத்தை எனது தேர்தல் காலப் பிரசுரங்களில் பயன்படுத்தியிருந்தேன்.

நீங்கள் உங்கள் கடமையைச் சிறப்பாக செய்திருந்தீர்கள். அந்தக் கடமையுடன் உங்கள் வேலைமுடியவில்லை. உங்களால் தெரிவு செய்யப்பட்ட எங்களிடம் உங்கள்தேவையை உரிமையுடன்கேளுங்கள் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்திய லிங்கம் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் புதிய வேலர் சின்னக்குளம் மகிழங்குளம் பகுதியில் நடை பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தலின் போது உங்களிடம் வாக்கு கேட்பதற்காக நான் வந்தேன். நான் கேட்டதை நீங்கள் செய்து விட்டீர்கள். இன்று உங்களிடம் வந்துள்ளேன். நீங்கள் கேட்பதைச் செய்வதற்காக. இன்று எமது மக்களின் தேவை நாட்டின் ஏனைய மாகாணங்களின் மக்களின் தேவையை விட வேறானது. 30 வருடப் போரால் அனைத்தையும் இழந்து பூச்சியத்திலிருந்து வாழ்க்கையை நீங்கள் ஆரம்பித்துள்ளீர்கள். இந்தப் பிரதேசம் போர்க் காலத்தில் முன்னரங்கக் காவலரணுக்கு அருகில் அமைந்திருந்தது. 1997 களில் இடம்பெயர்ந்து 15 வருடங்களுக்குப் பின்னர் 2012 இல் மீள்குடியேறியுள்ளீர்கள். எமது மாகாண சபை தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடமாகிறது. இந்த ஒரு வருடத்தில் நாம் என்ன சாதித்தோம் என்று நீங்கள் கேட்கலாம்.

மத்திய அரசானது எமது மாகாண நிர்வாகத்தை உரிய முறையில் இயங்காது தடுக்கப் பல வழிகளிலும் முட்டுக் கட்டை போட்டு வருகின்றது. எனினும் மனம் தளராது குறைந்தளவிலான அதிகாரத்தைக் கொண்டு இயலுமான வரைமக்களுக்கானசேவையை செய்து வருகிறோம்- என்றார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து. வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்துக்கு அமைச்சரால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், அனந்தர் புளியங்குளம் நாகதம்பிரான் ஆலயத்துக்கு கட்டட நிதிக்கான காசோலையும் வழங்கப்பட்டது. (த-421)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய
மாணவி
செல்வி சுதாகரன் விநுஜா
2014இல் நடைபெற்ற தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில்
180 புள்ளிகளைப் பெற்று
பாடசாலை ரீதியில் முதல்நிலையில்
சித்தி பெற்றமையைப் பாராட்டுவதுடன்
அவர் செல்வச்சந்நிதி முருகன் அருளால்
மேன்மேலும் பல சாதனைகள் படைக்க
ஆசிகூறி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
சின்னக்கட்டிப் பெரியம்மா,
பெரியப்பா.
Best Wishes
(C16788)(7.6.3)



அகவை 60 இல் வாழ்த்து



MANAGER
பிள்ளையினார் கிருஷ்ணானந்தன் (முகாமையாளர்)
அன்பு முகமும்
அறிவான பேச்சுக்களும்
மங்காத தெளிவுடன் மனங்குளிரவைத்து
எம்மை வழிநடத்திச் செல்லும்
மூத்த உறுப்பினர்களில் இவரும் ஒருவர்
சிங்கநடையும் சீரான பார்வையும்
பொங்க, நிறைகளுடன் தரணியில்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன் எனும் சமூக
எழுத்தாளராகத் தொடர, பருத்தித்துறை மக்கள்வங்கி
முகாமையாளர் பணியை ... இவரை
அகமகிழ்ந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.
Best wishes
கலைவாணி ச.ச.நிலையம், றேஞ்சஸ் வி.கழகம்,
கொற்றாவத்தை.
(52955)(12.3.6)



யா/அளவெட்டி தெற்கு றோ.க.த.க.பாடசாலை
அன்னையின் வாழ்த்துக்கள்



2014.10.06 திங்கட்கிழமை மகரகம தேசிய
கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற ஆசிரியர்
பிரதீபா பிரபா விருது வங்கும் விழாவில்
"பிரதீபா பிரபா"
விருதினைப் பெற்ற எமது பாடசாலை
ஆசிரியை
திருமதி கற்பகராணி தர்மதாஸ்
அவர்களை பாடசாலை அன்னையின்
சார்பில் வாழ்த்துகின்றோம்.
Congratulations
பாடசாலைச் சமூகம் (46250.12.3.6)
யா/அளவெட்டி தெற்கு, றோ.க.த.க.பாடசாலை.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக உணவு ஸ்தாபனம்
பாடசாலை மாணவர்களிடையே
'பசியற்ற உலகம்' எனும்
தலைப்பில் நடத்திய
அகில இலங்கை ரீதியான
சுவரொட்டி ஓவியப் போட்டியில்
எமது கல்லூரியில்
தரம் 9இல் கல்வி கற்கும் மாணவன்
செல்வன் குமாரதாசன் கதீசன்
முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.
அம்மாணவனை
பாடசாலைச் சமூகத்தினர்
பாராட்டி வாழ்த்துகின்றனர்.
Congratulations
Best Wishes
வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் மத்திய கல்லூரி.
(C/16778)(7.6.3)



மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



தேசிய கல்வி நிறுவகத்தால்
வழங்கப்பட்ட பிரதீபா பிரபா
விருதினை 06.10.2014 திங்கட்கிழமை
பெற்றுக்கொண்ட
எமது கல்வி நிலைய
ஆசிரியர்
வேலுப்பிள்ளை
அன்பழகன் BA,Dip.in Edn.
அவர்கள் மேலும் பல பட்டங்கள்பெற்று
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
அன்பொளி கல்வியக
ஆசிரியர்கள்
யாழ்ப்பாணம்.
Congratulation
(52956)(7.6.3)

# தொடர்ச்சிகள்

## கூட்டமைப்பைப்

மன்றத்தில் இருக்கின்றேன். இப்போது எங்களை ஆயுத குழுவென்று சொல்வது எந்த வகையில் நியாயம். 25 வருடங்களுக்கு முன்னர் ஆயுதங்களைக் கையளித்துவிட்டோம். இப்போது இவ்வாறு முதலமைச்சர் சொல்வது நியாயமற்றது என்பதுடன் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா இங்கிலாந்தில் வழங்கிய ஒரு செவ்வியில், கூட்டமைப்பு பதியப் படத் தேவையில்லையெனத் தெரிவித்திருந்தார். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் நாங்கள் எங்கள் கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கூட்டமைப்பை ஒரு கட்சியாக வைத்திருக்கவேண்டும் என்பதையே விரும்புகின்றோம்.

இது தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டியவர்கள் பொது மக்களாகவே இருக்கின்றார்கள். இது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, மாகாண சபை உறுப்பினர்களையோ தெரிந்தெடுக்கின்ற விடயமல்ல. செல்வநாயகம் காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டம் என்பது இன்னும் முடியவில்லை. இன்னும் இராணுவ ஆக்கிரமிப்புள்ளது. மக்களின் காணிகளை இராணுவம் வைத்திருக்கின்றது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் அனைவரும் ஒருமித்து பயணிக்க வேண்டும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் உதயகுமார் தவிசாளராக இருந்தார். அவர் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எதிர்க்கட்சியான ஈ.பி.டி.பியினைச் சேர்ந்த உறுப்பினர்களுடன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும் இணைந்து பல்வேறுபட்ட பிரச்சினைகளை உருவாக்கினர். அவர் மீதான எந்தக் குற்றச்சாட்டுக்களும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

பின்னர் க.துரைசிங்கம் தவிசாளராக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கும் பல பிரச்சினைகளை ஏற்படுத்திக் கூட்டத்தைக் கூட்ட விடுகின்றார்கள் இல்லை. இன்றைக்கு இந்த நிலைமைதான் காணப்படுகின்றது. இவ்வாறு குழப்பம் விளைவிப்பவர்கள் மீது எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாத சூழலே காணப்படுகின்றது. ஆனால் இவ்வாறு குழப்பம் விளைவிப்பவர்கள் அனைவரையும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகவே பார்க்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆயுட்காலம் முடிவுறும் காலம் நெருங்கிவிட்டது. இனியாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒழுங்கான முறையில் கட்டமைக்கப்பட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் - என்றார்.

இந்த கலந்துரையாடலின் நிறைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோப்பாய் கிளைக்குழ தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக கணபதி பிள்ளை துரைசிங்கம்:, செயலாளராக நவரட்ணம் காண்டி, பொருளாளராக கு.சோதிலிங்கம் தெரிவுசெய்யப்பட்டனர். (த-5)

## ஈ.என்.ரி.

சிகிச்சை முறைகள் தொடர்பாக அறிந்து கொள்ள இது வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது. தலை மற்றும் கழுத்து அறுவைச் சிகிச்சைக் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு விசேட மருத்துவர்களுக்காக இடம்பெறவுள்ளது.

'பன்முகத்தன்மை மத்தியில் சிறப்பு நோக்கி ஒன்றாக' என்ற தொனிப்பொருளில் இவ் வருடத்துக்கான இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சார்க் நாடுகளுக்கிடையே இடம்பெறவுள்ள இம்மாநாட்டின் மூலமாக பல மருத்துவர்கள் ஒன்றிணைந்து தமது அனுபவங்களை, புதிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்.

1998 ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த சார்க் நாடுகளுக்கிடையிலான மருத்துவ மாநாட்டின் மூலம் பிராந்திய மருத்துவர்கள் சிறந்த தொடர்புகளை பேணி தமக்குரிய வேலை வாய்ப்புக்களை, சிகிச்சை முறைகளைப் பரிமாறிக்கொள்ள, அறிந்து கொள்ள முடியும்.

இவ்வகையில் 4 ஆவது காது, மூக்கு, தொண்டை மாநாடு கடந்த 2004 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## மஹிந்த

நாடு பூராகவும் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்குப் புதிதாக பஸ்களை வழங்கும் திட்டத்தின் கீழ் வடக்குக்கு ஒதுக்கப்பட்ட பஸ்கள் ஜனாதிபதியின் வருகைக்கு முன்பாக அவசர அவசரமாக வழங்கப்பட்டுள்ளன. (த-17)

## துவாரகேஸ்வரன்

தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவர் பொலிஸ் தடுப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுத் திங்கள்கிழமை யாழ். நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். அவரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டது. எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4-106-ரி)

## நாட்டின்

வரும் வகையில் கடந்த சில நாட்களாக மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும், அரசோ அல்லது உயர்கல்வி அமைச்சரோ மாணவர்களின் பிரச்சினைகளை கருத்திற்கொள்ளவில்லை.

எமது நாட்டின் கல்வியை சீர்குலைக்கும் வகையிலேயே உயர் கல்வி அமைச்சர் செயற்படுகின்றார். கல்வியை சீர்குலைக்கும் ஒப்பந்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எஸ்.பியிடமே ஒப்படைத்துள்ளார்.

மாணவர்கள் விடயத்தில் உயர் கல்வி அமைச்சர் குரோதத்துடனேயே செயற்படுகின்றார். வதைக்காரர்களாகவே மாணவர்களை அவர் உற்றுநோக்குகின்றார். அத்துடன், மாணவர்களை பழிவாங்கும் நடவடிக்கையிலும் அவர் ஈடுபட்டுள்ளார். அத்துடன், கல்விக்கு அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, அமைச்சர் எஸ்.பி. வாய் [illegible] மாக பிரச்சினையை இழுத்துக்கொள்ளும் நபர்." தேர் தல் என் பதாலேயே பொறுமையாக இருக்கின்றோம். இல்லையேல், இதை விட மாணவர்களைக் கவனிப்போம்." என அவர் அறிவித்துள்ளதன் மூலம் இது நிரூபணமாகின்றது. இதை எஸ்.பியை மட்டும் குறைகூற [illegible] யாது. [illegible] எஸ்.பியை மஹிந்த தான் நியமித்தார். எஸ்.பி. மஹிந்தவின் உத்தரவுக்கமையவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். எனவே, இதற்கு ஜனாதிபதி தான் பொறுப்புகூறவேண்டும்- என்றார்.

## ஜனாதிபதி

பின் எந்தப்பிரிவு தடையாக இருக்கின்றது என்றும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேட்பாளராக களமிறங்கும் பட்சத்தில் ஐக்கிய தேசிய கட்சி எத்தகைய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஷ ராஜபக்ஷவிடம் வினவிய போது,

" ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. சட்டச்சிக்கல் இருக்கின்றது. அதற்கான வியாக்கியானத்தை உயர் நீதிமன்றமே வழங்க வேண்டும். நாம் அவசரப்பட்டு கருத்துகளை முன்வைத்து விட முடியாது. எனினும், இதுவிடயம் சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தை நாடுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பரிசீலித்து வருகின்றது. நாட்டின் சட்டம் யார் கையில் இருக்கின்றது என்பது உங்களுக்கு தெரியும்தானே? ஆகவே, இது குறித்து பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்." என்று கூறினார்.

## வீடமைப்பு

வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு உறுதிகளை வழங்கினர். (த-14-ரி).

## யாழ்.டிப்ளோமா

மனத்தில் உள்ளீர்த்துக்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர் நியமன உள்ளீர்ப்பு இடம்பெற்றது. இதன் போது உயர் தேசிய முகாமைத்துவடிப்ளோமா மற்றும், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் நியமனம் வழங்கப்படுகின்றபோது டிப்ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் நீதிமன்றத்தை நாடியதன் அடிப்படையில், நான்கு வருடக் கற்கை நெறியாக, உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள் ளன. ஆனாலும் உயர் தேசிய முகாமைத்துவடிப்ளோமாவை மூன்று வருடங்களில் பூர்த்தி செய்தவர்கள் இந்த நியமனத்தினுள் உள்வாங்கப்படவில்லை. ஆனால் இதேபோன்று மூன்று வருடங்களில் பூர்த்தி செய்த 22 மாணவர்களுக்குப் பதுளையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியை நான்கு வருடங்கள் தொடர்வதற்கான பதிவுகள் 2005-2006 கல்வியாண்டு, 2006-2007 கல்வியாண்டில் மேற்கொண்டு முறையே முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடை [illegible] நிலையில் இந்தக் கற்கைநெறியா[illegible]னது, 2005 ஆம் ஆண்[illegible]டிலிருந்து 3 வருடங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியப்படுத்தப்பட்டது. அத்துடன் நான்கு வருடங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட அத்தனை பாட அலகுகளும் மாற்றம் எதுவும் இன்றி மூன்று வருடங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அரச துறையில்தொழில் வாய்ப்பொன்றினை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கின்றபோது இந்தக் காலக் குறைப்பானது எந்தவிதமான பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தாது என்ற உறுதி மொழியும் வழங்கப்பட்டது.

ஆனால் நான்கு வருடங்களில் கற்க வேண்டிய பாட அலகுகளை மூன்று வருடங்களில் கற்று மேற்படி கற்கை நெறியினை பூர்த்தி செய்த 40 மாணவர்கள் மாத்திரம், காலத்தை அடிப்படையாகக் கொண்டு தற்போது வழங்கப்பட இருக்கின்ற நியமனத்தில் இருந்து புறந்தள்ளப்பட்டுள்ளமையும் பட்டதாரி பயிலுநர் ஆள்சேர்ப்பு 2012 திட்டத்தின் கீழான உயர் தேசிய முகாமைத்துவ மற்றும் கணக்கியல் மாணவர்களை உள்ளீர்த்தல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தற்போது வழங்கப்பட இருப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் வழங்கப்பட மாட்டாது என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளமையும் மிகுந்த மனவேதனை அளிப்பதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (த-5)

## சர்வதேசத்தை

களையும் பெற்று சுதந்திர மாக வாழவேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் விருப்பம். இதனை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடக்கு சிவில் சமூகமும் தெரிவித்துள்ளன.

"பரிசுத்த பாப்பரசர் இலங்கை வர அழைப்பு விடுக்கும் நோக்கில் இத்தாலி சென்ற ஜனாதிபதி மஹிந்த, அங்கு சர்வதேச சமூகத்தை விமர்சித்துப் பேசியமை வெட்கக்கேடானது" என்றும் அவை கூறியுள்ளன.

இலங்கை விவகாரங்களில் தலை யிடும் உரிமை சர்வதேச சமூகத்திற்குக் கிடையாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

புனித பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸை இலங்கைக்கு விஜயம் செய்யு மாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடும் நோக்கில் வத்திக்கான் சென்ற ஜனாதிபதி மஹிந்த, அங்கு இலங்கை வாழ் மக்களைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அதேவேளை, பாப்பரசரின் இலங்கைப் பயணம் நாட் டின் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் என்றும் ஜனாதிபதி மஹிந்த இதன் போது கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று கருத்துத் தெரிவிக் கும்போது,

இலங்கையில் சர்வதேச தலையீடுகளு[illegible]க்கு மஹிந்த அரசே வழி வகுத்தது. எனவே, சர்வதேச தலையீடுகளைத் தவிர்க்க முடியாது. பரிசுத்த பாப்பரசர் இலங்கை வர அழைப்பு விடுக்கும் நோக்கில் இத்தாலி சென்ற ஜனாதிபதி மஹிந்த. அங்கு சர்வதேச சமூகத்தை விமர்சித்து பேசியமை வெட்கக்கேடானது.

உண்மையைக் கண்டறிய - நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்று செயற்படவேண்டும். இல்லையெனில் அதன் விபரீதம் நாட்டுக்கு ஆபத்தாகும் - என்றார்.

இதேவேளை, துன்பப்படும் தமிழ் மக்களின் குரலாக பரிசுத்த பாப்பரசரின் இலங்கைப் பயணம் அமையும் என்று வடக்கு சிவில் சமூகத் தலைவரும் மன்னார் மறைமாவட்ட ஆயருமான அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் நேற்றுத் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான அறிவுரைகள் எங்கிருந்து வருகின்றதோ அதனை ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான இலங்கை அரசு ஏற்றே ஆக வேண்டும். அதனைவிடுத்து இலங்கை விவகாரங்களில் தலையிடும் உரிமை சர்வதேச சமூகத்திற்குக் கிடையாது என்று உரத்த குரலில் தெரிவிப்பதில் எந்தவிதப் பயனும் நாட்டுக்கு ஏற்படப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அமைதி நிலவ வேண்டும், சிங்கள மக்களைப் போல் தமிழ் பேசும் மக்களும் அனைத்து உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் விருப்பம் எனவும், இதனை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும் மன்னார் ஆயர் கூறினார்.

இதனைவிடுத்து தமிழ் மக்களை அடிமைப்படுத்தி தனது கொடூர ஆட்சியை இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொண்டால் நாடு பேராபத்தைச் சந்திக்கும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ற-சி)

## பிழையான

பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண, குறித்த பெண்கள் இருவரும் போலியான தகவல்களை வழங்கியதால் திருப்பியனுப்பப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

"அவர்களின் ஒரு பெண் கோபியின் மனைவி என்பது தெரிய வந்துள்ளது. இலங்கையில் பயங்கரவாதத்திற்கு புத்துயிர் அளிப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னர் எல்.ரீ.ரி.ஈ அமைப்பில் செயற்பட்டவரே கோபி. அவரது மனைவி புலம்பெயர் அமைப்புக்களின் உதவியுடன், ஏதேனுமொரு விடயத்திற்காக வெளிநாடு செல்வதற்கு தயாராகவிருந்தார். அவரது வாக்குமூலத்திற்கு அமைய, தனது கணவர் அனுராதபுரத்தில் புற்றுநோயினால் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் கோபியின் மரணத் தின் பின்னர் கைதுசெய்யப்பட்ட பெண் என்பது தெரியவந்துள்ளது. அதனை அடுத்து குடிவரவு, குடியகல்வு சட்டங்களுக்கு அமைய, அவருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது. அதே போன்று அந்த விமானத்தில் மற்றுமொரு பெண் சந்தேகத்திற்கி[illegible]ான முறையில் சுவிட்ஸர்லாந்து செல்வதற்கு முயற்சித்திருந்தார். அவர் எல்.ரீ.ரி.ஈ யில் இருந்த பெண். அவர்கள் இருவரும் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் நாம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்."- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-5)

## இறம்பொடை

கொக்குவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நாகராசா விமலேந்திரன் (வயது - 24) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞர் ஆற்றில் தவறி விழுந்து மயக்கமுற்ற நிலையில், கொத்மலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும், அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தனியார் நிறுவனமொன்றில் இரசாயன ஆய்வுகூட பரிசோதகராகக் கடமையாற்றும் இவர், யாழ்ப்பாணத்திலுள்ள சிலருடன் இறம் பொடைக்குச் சுற்றுலா வந்திருந்த நிலையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடைய உடல், கொத் மலை ஆதார வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (ற)

## ஜனாதிபதியின்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்பதில்லை என்று தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும், அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் வருகையில் பங்கெடுக்காமைக்கான காரணத்தை விளக்கி முதலமைச்சரால் அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் தெரியவருகின்றது. (ற-5)

## சுவிஸ் செல்ல

தடுப்புப் பிரிவு பொலிஸார் அவரது பயணத்தை தடை செய்துள்ளனர். வெளிநாடு செல்வதற்கு தடையில்லை என்றும், பயங்கரவாத தடுப்புப் பிரிவு 2 ஆம் மாடியில் கடிதம் வாங்கி வர வேண்டும் என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சிப்பதாகத் தெரிவித்து கோபி என்றழைக்கப்படும் கஜீபன், பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் தேடப்படுவராக அறிவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கோபியின் மனைவி சர்மிளாவை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர். ஏப்ரல் மாத நடுப் பகுதியில், கோபி சுட்டுக் கொல்லப்பட்டார் என்று இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் கோபியின் மனைவி பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் சுவிஸுக்கு, புகலிடம் கோரிச் செல்வதற்கு கோபியின் மனைவி சர்மிளா நடவடிக்கை எடுத்திருந்தார். அவரும் அவரது 7 வயது மகனும், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக செல்ல முற்பட்டனர். அதன்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவு, பொலிஸார் அவரிடம் 3 மணி நேரம் விமான நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டனர். பின்னர், பயங்கரவாத தடுப்புப் பிரிவின் 2 ஆம் மாடியில், வெளிநாடு செல்வதற்கு தடையில்லை என்ற கடிதம் வாங்கி வர வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, சர்மிளாவை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தடுத்து வைத்திருந்த போது, தடுத்து வைத்திருப்பதற்கான கட்டளை பெறப்பட்டிருந்தது. அந்தக் கட்டளையின் மூன்று மாதம் [illegible] முடிவடைந்த பின்னர் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இவர் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் எந்தவொரு தடையுத்தரவும் இதுவரையில் பிறப்பிக்கவில்லை. (ற-5)

## கிளிமஞ்சாரோ மலையை தொட்டார் ஆதிவாசி சிறுமி

உலகிலேயே மிக உயரமான மலையாகத் திகழும் கிளிமஞ்சாரோ மலையில் ஏறி ஆதீவாசி சிறுமியொருத்தி சாதனை படைத்துள்ளார்.




ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள தான்சானியா நாட்டில் மிக உயரமான கிளிமஞ்சாரோ மலை உள்ளது. அது கடல் மட்டத்தில் இருந்து 5 ஆயிரத்து 891 மீற்றர் உயரத்தில் உள்ளது. மலையின் உயரம் 19 ஆயிரத்து 349 அடி ஆகும்.

எந்த மலையுடனும் இணை யாது உலகிலேயே உயரமான மலையாக கிளிமஞ்சாரோ திகழ்கிறது. இந்த மலையில் ஏறி ஜானவி என்ற 12 வயது இந்தியச் சிறுமியொருத்தி சாதனை படைத்துள்ளார். அவர் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஆதிவாசிப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. காந்தி பிறந்த தினத்தன்று மலை உச்சியை அடைந்த அவர் அங்கு மகாத்மா காந்தியின் உருவப் படத்துடன் இந்திய தேசியக் கொடியையும் நட்டார். மிகச் சிறிய வயதில் மலை ஏறி சாதனை படைத்த முதல் சிறுமி ஜானவி என்பது குறிப்பிடத்தக்கது. அவரது சாதனைக்கு பல அமைப்புகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன. (வ)

## மெக்ஸிக்கோவில் மனிதப் புதைகுழி

### காணாமற்போன 43 மாணவரின் எலும்புச் சுவடுகள் என்று சந்தேகம்



மெக்ஸிக்கோவில் பெரிய மனிதப் புதை குழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதில் காணாமற்போன 43 மாணவர்களின் எலும்புச் சுவடுகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மெக்ஸிக்கோவிலுள்ள இகுவாலா இன் மலைப் பிரதேசத்தில் இந்தமனிதப்புதைகுழி கடந்த சனிக் கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதில் கண்டுபிடிக்கப்பட்ட 15 சடலங்கள் சமீபத்தில் பொலிஸாருக்கும் மாணவருக்கும் இடையே மூண்ட மோதலில் காணாமற்போன 43 மாணவர்களினுடையதாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. மேலும் குறித்த புதைகுழி அமைந்திருந்த இகுவாலாவில் வைத்துத்தான் அந்த மாணவர்கள் இறுதியாக அவதானிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கலவரத்தின்போது நேரில் பார்த்த சாட்சிகளின் அடிப்படையில் காணமற்போன மாணவர்கள் கார்கள் மூலம் பொலிஸாரால் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கடந்த வார இறுதியில் ஆசிரியர்கள் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மூண்ட வன்முறையை அடுத்தே குறித்த மாணவர்கள் மர்மமான முறையில் மாயமாகி இருந்தார்கள்.

இந்தநிலையில் கடந்த வார இறுதியில் கலவரத்தின் போது இரு மாணவர்களை சுட்டுக் கொன்ற குற்றத்துக்காக 22 பொலிஸ் அதிகாரிகள் குவெர்ரெரோ மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் அந்தப்பகுதியில் மொத்தம் 6 பொது மக்கள் உயிரிழந்தனர். மெக்ஸிக்கோநகருக்குகிழக்கே 193 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இகுவாலாவில் கடந்த வாரம் மாணவர், பொலிஸார் மற்றும் ஆயுததாரிகள் இடையே மோசமான வன்முறை மூண்டிருந்தது.

மெக்ஸிக்கோவில் கடந்த சில வருடங்களாக பல மனிதப் புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் போதை மருந்து கடத்தல் வன்முறையில் கொல்லப்பட்ட 10 ஆயிரம் பேர்வரை அடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## ஐ.எஸ்ஸு க்கு ஆதரவளிக்கும் பாக்.தலிபான்

பக்தாத், ஒக்.7

ஈராக் மற்றும் சிரியாவில் செயல்படும் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு, பாகிஸ்தானில் உள்ள தெக்ரிக் இ தலிபான் அமைப்பு தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத அமைப்பு தெக்ரிக் இ தலிபான். அல்கொய்தா அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய இந்த அமைப்பு, ஏனைய தீவிரவாத இயக்கங்களுக்கு மனித வெடிகுண்டுத் தாக்குதல் படையினரை அனுப்பி வந்தனர். பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு தெக்ரிக் இ தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சகிதுல்லா சாகித், தங்கள் அமைப்பின் தலைவர் முல்லா பஸ்துல்லாவின் வாழ்த்துச் செய்தியை ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

ஈராக் மற்றும் சிரியாவில் போராடும் ஐ.எஸ்.அமைப்பினரை நாங்கள் சகோதரர்களாக கருதுகிறோம். அவர்களின் வெற்றியால் பெருமை அடைகிறோம். ஐ.எஸ். போராளிகளிடம் இருந்து, முஸ்லிம் தேசம் அதிகம் எதிர்பார்க்கிறது. நாம் உங்களுடன் இருக்கிறோம். முடிந்தளவுக்கு நாம் உங்களுக்கு ஆதரவளிப்போம். நல்ல நோக்கத்துக்காக மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஜிகாதிகள் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அமெ. இராணுவ வீரரின் தலையை துண்டிப்போம்

### மிரட்டுகிறது ஐ.எஸ்.ஐ.எஸ்

ஐ.எஸ்.ஐ.எஸ். பிடியில் பணயக்கைதியாக இருக்கும் அமெரிக்க இராணுவவீரர் ஒருவரைக் கொல்லப் போவதாகத் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக சர்வதேச நாடுகள் நடத்தும் வான்வழித் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தீவிரவாதிகள் தொடர்ந்து தலையைத் துண்டிப்புகளை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்தநிலையில் சமீபத்தில் பிரித்தானிய பணயக்கைதி ஆலன் ஹென்னிங்ஸ் என்பவரின் தலையைத் துண்டித்து தீவிரவாதிகள் வெளியிட்ட காணொலியின் அடுத்ததாக தங்கள் வசமுள்ள மற்றொரு



பணயக்கைதியான அமெரிக்காவைச் சேர்ந்த பீட்டர் கஸ்சிக் என்பவரை அடுத்து கொல்லப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர். முன்னாள் இராணுவ வீரரான பீட்டர் கஸ்சிக், சிரியாவின் இராணுவமுகாமில் சமூக சேவை செய்து வந்தபோது, கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது. (வ)

## தலையைத் துண்டிக்கும் தீவிரவாதியை கொல்லுங்கள்

### பிரிட்டன் பிரதமர் உத்தரவு

பணையக்கைதிகளின் தலைத் துண்டிப்புகளைத் தொடர்ந்து நடத்தும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதியை கொலை செய்யுமாறு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உத்தரவிட்டுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகச் செயற்பட்ட அமெரிக்காவை அச்சுறுத்தும் வகையில், அந்தநாட்டு பிரஜைகளான பத்திரிகை நிருபர்கள் ஜேம்ஸ் போலே, ஸ்டீவன் சாட்லாப், பிரிட்டன் தொண்டு நிறுவன ஊழியர் டேவிட் ஹெய்ன்ஸ் என 3 பேர் தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் சமீபத்தில் ஆலன் ஹென்னிங் படுகொலை செய்யப்பட்ட காணொலி வெளியான 12 மணி நேரத்தில், பிரித்தானியாவின் உளவு அமைப்புகளான எம் 15, எம் 16 மற்றும் ஜி.சி.எச்.கியூ. ஆகியவற்றின் தலைவர்களை, பிரித்தானிய பிரதமர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் :

பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளவர்களின் தலையைத் துண்டித்துக் கொலை செய்து வருகிற ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி ஜானின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அவரைக் கொன்றுவிடவோ கொல்லவோ அல்லது உயிரோடுபிடிக்கவோ உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார். (வ)

## ஹொங்கொங் மாணவர் போராட்டம் வன்முறையாளர்கள் 19 பேர் கைது



பீஜிங், ஒக்.7

ஜனநாயக சீர்திருத்தம் தொடர்பாக ஹொங்கொங்கில் கடந்த சில தினங்களாக மாணவர் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டத்தில், போராட்டக் காரர்கள் மீது வன்முறை நிகழ்த்திய பீஜிங் ஆதரவாளர்கள் சிலரை ஹொங்கொங் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களில் எட்டுப்பேர் ஹொங்கொங்கில் உள்ள வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்கள் மீது நடத்தப்பட்ட வன்முறையைக் காரணம் காட்டி அரசுடன் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையைப் போராட்டக்காரர்கள் ரத்துச் செய்தனர். அதைத் தொடர்ந்து வன்முறையாளர்கள் 19 பேரைக் கைது செய்திருப்பதாக ஹொங்கொங் பொலிஸ் தெரிவித்துள்ளது. (வ)

## அமைதிப் பேச்சுக்கு ஐ.நா.வர்வேற்பு

தென் கொரியா மற்றும் வட கொரியா நாடுகள் அமைதி பேச்சு ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்திருப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையே பனிப் போர் நடைபெற்று வருகிறது. அண்மையில் தென் கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து போர் ஒத்திகையை நடத்தின. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த வட கொரியா, அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்தது. இந்த நிலையில் 17 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு விழாவில் பங்கேற்க வந்த வடகொரியாவின் 3 முக்கிய அதிகாரிகள் தென் கொரியாவின் மூத்த அதிகாரியொருவரைச் சந்தித்துப் பேசினர். அதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே அமைதிப் பேச்சு ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## அமெரிக்கா உருவாக்கியது ஆளில்லா ஆயுதப் படகை

வொஷிங்டன், ஒக்.7

ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் திறனுள்ள ஆளில்லாப் படகை அமெரிக்கக் கடற்படை உருவாக்கியுள்ளது.



அமெரிக்கக் கடற்படையின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவர் ரியர் அட்மிரல் மாத்யூ கிளண்டர் இதுதொடர்பாக ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நேற்றைய தொழில்நுட்பங்களைக் கொண்டு எமது வீரர்கள் நாளைய போர்களில் சண்டையிட முடியாது. அமெரிக்க கடற்படையின் போர்த் திறனை மேம்படுத்தும் தொழில்நுட்பத்தை தொடர்ந்து உருவாக்குகிறோம். நீண்டகால ஆராய்ச்சிக்குப் பின்னர் ஆளில்லா ஆயுதப் படகுத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்க குறைந்த செலவே ஆகும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கிய ஓர் இயந்திரத்தை எந்தப் படகிலும் பொருத்தி அதனை ஆளில்லாப் படகாக ஈடுபடுத்தலாம். அதில் கப்பல்களை அழிக்கும் ஏவுகணை ஆயுதங்கள், அல்லது விமானங்களை அழிக்கும் ஆயுதங்களைப் பொருத்தலாம்.

அந்தப் படகில் பொருத்தியுள்ள ரேடாரிலிருந்து வெளிப்படும் சமிக்ஞைகளைப் ஏனைய் ஆளில்லாப் படகுகள் பின்பற்றி, அவை ஒரு குழாமாகச் செயற்பட முடியும்.

தனித்து அல்லது ஒன்றிணைந்து, தமது ஆயுதங்களைப் பயன்படுத்தும் திறன் அவற்றுக்கு உள்ளது. இதற்கான ஆணையை தொலைவிலிருந்து ஒரு கடற்படை அதிகாரி வழங்க முடியும். இந்த வகையில் ஆளில்லா ஆயுதப் படகுகள் குழு எதிரிக்கப்பலைத் தாக்கி அழிக்க வல்லது.

அதேசமயம், அமெரிக்க போர்க் கப்பலுக்கு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் விதமாகவும் இந்த ஆளில்லா ஆயுதப் படகுக் குழாமைச் செயற்படுத்தலாம் - என்றார்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா, செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுக்காக ஈடுபடுத்தியுள்ள ரோவர் ஆய்வுக்கலனில் பயன்படுத்திய தொழில்நுட்ப அடிப்படையில் இந்த ஆளில்லா ஆயுதப் படகு உருவாக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

# கிணற்றில் கழிவு எண்ணெய் ஊற்றி விசமம்

## சகோதரியுடன் ஏற்பட்ட முரண்பாட்டால்

தமது சகோதரியின் குடும்பத்தினர் தமது காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர் எடுப்பதை விரும்பாத மற்றொரு சகோதரியின் வீட்டுக் கிணற் றுக்கு இரண்டு தடவைகள் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டதால் கிணற்று நீர் எவரும் பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறியுள்ளது. மந்துவில் கிழக்குப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சகோதரி ஒருவரின் காணிக்குள் நிர்மாணிக் கப்பட்ட கிணற்றை மற்றொரு சகோதரியின் குடும்ப மும் பயன்படுத்தி வந்தது. இரு சகோதரி களுக்கு மிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதால் சகோதரியை கிணற்றில் தண்ணீர் எடுக்க விடாமல் காணிச் சொந்தக் காரரான சகோதரி தடுத்துள்ளார்.

அன்றிரவு இனந்தெரியா தோரால் குறிப்பிட்ட கிணற்றுள் கழிவு எண்ணெய் ஊற்றப்பட்டி ருந்ததால் அந்தக் கிணற்று நீரை எவரும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில் காணி உரிமையாளரான சகோதரி 23 ஆயிரத்து 200 ரூபா செலவழித்து கிணற்றைத் துப்புரவு செய்துள்ளார். இரு தினங் களின் பின்னர் மீண்டும் கழிவு எண்ணெய் கிணற்றில் ஊற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்ட பின்னர் கிணறு இறைத்துத் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் எண்ணெய்ப் படிவு நீரில் காணப்பட்டுள்ளது.

குறித்த கிணற்று நீரை பொது சுகாதார பரிசோத கரின் பரி சோதனையின் பின்னரே பயன்படுத் துமாறு அறிவுரை கூறிய பொலிஸார் இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதிதேவி நாகலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிட மாகவும், அளவெட்டி தெற்கு மற்றும் கண்டி மவுசா எஸ்ரேட் ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிதேவி நாகலிங்கம் நேற்று (06.10.2014) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா நாகலிங்கம் (மடுல்கலை, மவுசா பெருந்தோட்டயாக்க தேயிலைத் தொழிற்சாலை, சிரேஷ்ட அதிகாரி), அவர்களின் அன்பு மனைவியும், ராதாலிங்கம் (லண்டன்), விசுவலிங்கம் (கனடா), சாரதாதேவி (கனடா), பூமாதேவி, ரேணுகாதேவி (Norwood Porttree தமிழ் வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயும், தனவதி, லோகாம்பிகை, காலஞ்சென்ற ஆனந்தசிவன் (கனடா) மற்றும் கிருஷ்ணசேகர் (Norwood New Velly தமிழ் வித்தியாலய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மதா, தம்மியா, கௌசியா, லக்தீசன், மோகனதீசன், ஹம்சவாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி புவனேஸ்வரி நடனசபாபதி, காலஞ்சென்றவர்களான செல்வி சீதாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கமலாதேவி, இராஜசிங்கம், ரட்ணமயில் மற்றும் ரட்ணவேல் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் வைத்திலிங்கம், பருவதம் மற்றும் சத்தியபாலதேவி, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி தெற்கு, அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி தம்மளை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வேல்இன்"
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(52967) (12.3.6)

தகவல்:
பூமாதேவி (மகள்)


# கைதடி இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின விழா

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி சாந்தி நிலையத்தில் நடை பெற்று வரும் முதியோர் வார விழா வின் ஐந்தாவது நாளான நேற்று முன்தினம் சமூக சேவையாளர்கள் கௌர விப்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்க ளைச் சேர்ந்த 57 சமூக சேவை யாளர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக் கப்பட்டனர். ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்க ளுக்கு சிறந்த சேவை களை ஆற்றிக் கொண் டிருக்கும் பல சமூக சேவையாளர்களை இனங்கண்டு இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. நிலை யப் பொறுப்பதிகாரி த.கிரு பாகரன் தலை மையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண தொழிற் றுறைத் திணைக் களப் பணிப்பாளர் க.சிவகரன் கலந்து கொண்டார். நிலை யத்தில் 5 வருடங்க ளுக்குமேல்தங்கியுள்ள ஆறு முகம் என்ற முதி யவர் சமூக சேவை யாளர்களுக்கு சான் றிதழ்களை வழங்கி கௌரவித்தார். (வ-9-17)


# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
14.06.1952

விண்ணில்
02.10.2009



## திருமதி உருத்திரன் இரத்தினபூபதி

திதி: சதுர்த்தசி

ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
இன்முகம் காட்டி உற்றாரை அணைத்து
ஊர் நிகழ்வுகளில் இன்றும்
உருமாறா உங்கள் நினைவுகள்
சிந்தையில் நிற்குதம்மா
உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

"பூபதி அகம்"
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(52951)(10)

குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்



## நவநீதம் ஜீவகாந்தன்

நாச்சிமார் கோயிலடியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவநீதம் ஜீவகாந்தன் 04.10.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவநீதம் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம் - சரஸ்வதி தம்பதியரின் மூத்த மருமகனும், யசோதாதேவியின் அனபுக் கணவரும், முகுந்தன், லாவன்னியா ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்பாலனின் அன்பு மாமனாரும், டிவ்யன், அகிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2014) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/7, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்

(52952) (12.3.6)

தகவல்: யசோ (ராணி - மனைவி)
021 222 0658



# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரு சிவகுமாரன்

(பகவான மருந்தகம்-உரிமையாளர்)

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 176/1, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சிவகுமாரன் (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் முத்துக்குமாரு மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் புத்திரனும், சகுந்தலாதேவியின் அன்புக்கணவரும், லகுசியாமா, ஓம்பிரகாஷ், ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன், கமலதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.திருமதி சிவலிங்கம், திரு.திருமதி பால சிங்கம் ஆகியோரின் சம்பந்தியும், தர்மகுமாரி, ரதிகுமாரி, செல்வகுமாரி, புஸ்ப குமாரி, யசோகுமார், விஜயகுமார், காலஞ்சென்ற ஸ்ரீகுமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

176/1, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 7840

(52930) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
(பகவான் மருந்தகம்)



# முதலாம் ஆண்டு நினைவுகள்



பிறப்பு
15.03.1938

இறப்பு
07.10.2013

## சின்னப்பொடி தங்கத்துரை (JP)

(ஓய்வுபெற்ற பரிசோதகர் - இ.போ.ச.சாலை)

பெற்றோர்க்கு நல்பிள்ளையாய்
மனைவிக்கு அன்புத்துணையாய்
பிள்ளைகளுக்கு நல்வழிகாட்டியாய்
தொழிலில் நேர்மையான ஊழியராய்
சமூகத்திற்கு சேவகனாய்
தேசத்தின் விசுவாசியாய் - வாழ்ந்த
எமது அன்புத் தெய்வம் - எமை
விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றபோதும்
தங்கள் நினைவுகளுடன் வாழும்.

"ஆனந்த கானம்"
ஆவரங்கால், புத்தூர்.

மனைவி, பிள்ளைகள்
லிங்கநகர், திருகோணமலை.

(C/16789)(7.6.3)



# மரண அறிவித்தல்

## இராமு சின்னத்தம்பி



சுதுமலை மேற்கு T.C.லேன், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சின்னத்தம்பி நேற்று (6.10.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், பவளத்தின் அன்புக் கணவரும், வசந்தி, வதனா, சிறிதரன் (சிறி), சிறீரஞ்சிதகுமார் (ரஞ்சன்), பிரபாகரன், வனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜியராஜன், யோகராஜா, பாமினி, தவச்செல்வி, தர்ஷி, சுரேந்திரராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜென்சிகா, பிரியங்கா, கஜலக்ஸன், டிலான், டிலூஜன், பிரதீப், கபிஸ், கரிஸ்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிட்டிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 225 5365

(52900) (12.3.6)


சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

# முதியோரை மகிழ்விக்கும் நீர்த்தடாகம் கைதடியில்

கைதடி, ஒக்.7

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முன்பாக ஏ-9வீதியின் மேற்குப் பக்கமாக அலங்கார நீர்த் தடாகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த அலங்கார நீர்த் தடாகம் முதியோர் தினவிழாவை முன்னிட்டு அங்கு அமைக்கப்பட்டுள்ளதுடன் மாலை வேளைகளில் இந்த அலங்கார நீர்த் தடாகத்திலிருந்து நீர் உயரத்துக்குப் பீய்ச்சியடிக்கச் செய்யப்படுவது பார்ப்பதற்கு ரம்மியமாக இருப்பதையும் இந்தக் காட்சியை முதியோர்கள் பலர் ஆற அமர்ந்து பார்த்து ரசிப்பதனையும் அங்கு அவதானிக்க முடிகின்றது.



அத்துடன் முதியோர்தினம் தொடர்பான பதாகைகளும் மேலும் அங்கு மெருகூட்டுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை - முதியோர் தின இறுதி நாள் நிகழ்வை பிரமாண்டமாக கொண்டாடுவதற்காக கைதடி அரச முதியோர் இல்லத்தில் திறந்த வெளி அரங்கம் ஒன்றும் மிகத் துரிதமாக அமைக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சர்வதேச முதியோர் தின விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடம்பெற இருப்பதுடன் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(வ-288)

## புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவருக்கு நிதி உதவி

நெடுந்தீவுப் பாடசாலைகளில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மூன்று மாணவர்களுக்கு நெடுந்தீவு பல நோ. கூ. சங்க வங்கியில் சேமிப்புக் கணக்கில் நிதி வைப்பிலிட்டு சேமிப்புத் புத்தகங்களை பல நோ.கூ. சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் குறித்த மாணவர்களிடம் வழங்கியுள்ளார்.

(வ-7)


## 16ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 01 ☆ 08 ☆ 1934

இறப்பு 07 ☆ 10 ☆ 1998

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மசாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் (லண்டன்)



## ஓடி ஒழிந்தது ஒன்பது ஆண்டுகள்



செல்வி தனுஷா மாதவராஜா
(இரண்டாம் வருடம் - கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம் பழைய மாணவி,
வவுனியா மகளிர் மகா வித்தியாலயம்)

பௌர்ணமி நிலவாய்
22.08.1984

அமாவாசை இருளாய்
07.10.2005

கண்ணை இழந்திருந்தால் காலம்செய் விதியென்போம்
பொன்னை இழந்திருந்தால் போகட்டும் என்றிருப்போம்
உன்னை இழந்திருந்த உலகத்தில் வாழ்வதென்றால்
என்னென்று ஆகுமம்மா ஏனம்மா எமைப் பிரிந்தாய்.

பொன்னையா மாதவராஜா
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.

என்றும் முடிவில்லா நினைவலைகளுடன்
பெற்றோர், தம்பி

(52934)(7.6.3)


# மாடுகளுக்கு காதடையாளமிடல்

வரணி, ஒக்.7

வரணி, குடமியன் பிரதேசத்தில் மாடுகளுக்கு காதடை யாளம் இடும்பணி எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பிரதேச கிராம அலுவலரிடமிருந்தும் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்திடம் இருந்தும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைச் சொந்தக்காரர்கள் இந்த விடயம் தொடர்பில் தமது மாடுகளுக்கு காது அடையாளம் இடப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு குடமியன் கிராம அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை- பிரதேசத்தில் குரங்குகளின் தொல்லை காரணமாக பிரதேசமக்கள் தமது வீடுகள், விவசாய நிலங்களில் ஏற்படும் அழிவுகள் தொடர்பாக முழு விவரங்களையும் தமக்கு அறியத்தருமாறும் இது தொடர்பான எழுத்து மூல விண்ணப்பங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை ஏற்கப்படும் என்றும் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது.

(வ-122)


## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 30 ☆ 08 ☆ 1926

இறப்பு 14 ☆ 10 ☆ 1997

க.குலசேகரம்பிள்ளை J.P

திதி: சதுர்த்தசி

ஐயா!
எதை நீங்கள் நடத்தினீர்களோ அதை நன்றாகவே நடத்தினீர்கள்!
எதை நீங்கள் நடத்த இருந்தீர்களோ அதையும் நன்றாகவே நடத்துகிறோம்.
பாசமுடன் நீங்கள் பழகியதை பத்தினியாள்
பரிந்துரைத்து பாங்குடனே பாராட்ட
பேசரிய பெருமகனே பேணியெமை வளர்த்தீரே
பிள்ளைகள் பெருமையுடன் புகழ் சூட்ட
ஓகோ என்ற வாழ்க்கை நீங்கள் வாழ்ந்து மகிழ
ஆகா என்ற வார்த்தை நாங்கள் ஆழ்ந்து புகழ
பதவிகள் பல வகித்தீர் பல்லோரும் பாராட்ட
உதவிகள் பல புரிந்தீர் ஊரே உவந்தேத்த
விண்ணதிரும் விழுபனையாள் விழாக்களெல்லாம்
கண்ணெதிரே விண்ணில் கண்டு களித்திடவே கருணை வேண்டி அவள்
மண்மகிழ மனம் உருகி வணங்குகிறோம் வாழ்த்துகிறோம் ஐயா!

நி.வி.பழமுதிர்சோலை,
எழுதுமட்டுவாழ தெற்கு,
க.வி.இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.



## 33ஆவது அகவையும் 5ஆம் ஆண்டு நினைவலையும்

அமரர் இரவி பிரசாத் (ராயு)







மண்ணில்
07 . 10 . 1981

விண்ணில்
19 . 09 . 2009

பள்ளி சென்றுவர பாதிவரை வந்து
பார்த்திருந்து - நீ வருவாயென,
வேலை விட்டுவர வீதியோரம் நின்று
பார்த்திருந்து - நீ வருவாயென,
இறுதிப் பயணம் அனுப்பி கண்ணீர்விட்டு
பார்த்திருந்து - ஆண்டுகள் ஐந்து ஆகியும்
ஆசை கொண்ட மனம் ஏனோ!
நீ வருவாயெனக் காத்திருக்கு.

உன் பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா,
சகோதரிகள்.

இ.இரவி, புகையிரத வீதி, கொடிகாமம்.



## நீங்காத நினைவலைகளில்

முதலாம் ஆண்டு



அமரர்
தம்பு தருமரத்தினம்
(றோசர்)

திதி : சதுர்த்தசி

தோற்றம் 05.01.1937
மறைவு 18.09.2013

நான்காம் ஆண்டு



அமரர்
தருமரத்தினம் அருள்மொழிராணி
(சுகுணா)

திதி : துதியை

தோற்றம் 02.12.1947
மறைவு 16.01.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழும் வழியை எமக்குப் புகட்டி
தெய்வத்துள் தெய்வமாய் உறைந்த உங்களை என்றும் எம் இதயக் கோயிலில்
இருத்தி வணங்கும

கிராம சபை ஒழுங்கை,
வித்தகபுரம், கொல்லங்கலட்டி.

அன்புப் பிள்ளைகள்.

(51656) (7.6.3)

# வல்லிபுரம் ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

## ஆர்ப்பரிக்கும் கடலலையில் ஆரோகணிக்கும் மாயவன



### அதிரடியான புதிய அபூர்வ வரவுகள்

★ முதன்முறையாக அமெரிக்காவில் படிக்க உழைக்க ஒரு வருட விசா பெற அருமருந்தன்ன வாய்ப்பு-27 வயதிற்குட்பட்ட எவரும் இணையலாம்.

★ 100 வீத விசா உறுதிப்பாட்டுடன் இத்தாலி சென்றுவர சட்ட ஆலோசனை.

★ UK இல் படிக்க உழைக்க IELTS தேவையில்லையே. ஒரு வாரத்தில் பல்கலை அனுமதியும் ஒரு மாதத்தில் நல்லது கெட்டது எல்லாம் தெரிந்து விடுமே.

★ செ
2வரு

★ நியூசி
ஆஸ்

★ ஐரோ
IELT


**சனி, ஞாயிறு உட்பட எல்லா நாள்களுப**

**திசைகாட்டி பிறைவேற் லிமி**

**175, பருத்தித்துறை வீதி, ஆனைப**

**021 221 9016**

ின் அருள் அனைவருக்கும் கிடைக்க இறைஞ்சுகிறோம்




கன் விசா அதாவது இத்தாலி, நோர்வே, ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு படிக்க உழைக்க
ட 4வருட விசா

லாந்தில் படிக்க IELTS தேவையில்லை.2 வருடத்தில் PR பெற்றால் ஆஸி பறக்கலாம்.
திரேலியா குடும்ப விசா படிமுறைகள் எளிதானது.

ப்பிய நாடான சைப்பிரசில் படிக்க மாதம் 1 லட்சம் வரை உழைக்க 6 இலட்சம் போதுமே.
TS தேவையில்லையே.32 வயது வரை மாணவர்கள் ஏற்கப்படுவர்.

ம் திறந்திருப்போம்.

பந்தி, யாழ்ப்பாணம்.



## பரிசளிப்பு விழா

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும் கரன் ஜுவல்லறி உரிமை யாளரான க.கிருபாகரனும் கலந்து கொள்வர். நிறுவுநர் நினைவுப் பேருரையை வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கில வருகைவிரிவுரையாளர் ச.நவரத்தினம் நிகழ்த்துவார். (வ-ரி)

# மீள் குடியேற்றக் கிராம வீதி அமைக்கப்படுமா?

தென்மராட்சி, ஒக்.7

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றக் கிராமத்துக்கு வீதி அமைக்க தருவிக்கப்பட்ட கற் களும் கிரவலும் வீதி அமைக்கப்படாமல் தனியார் காணி ஒன்றில் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

5வருடங்களாகியும் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். 2010ஆம் ஆண்டு மறவன்புலோ வடக்கு கிராமத்தில் உள்ள பொன்னம் பலம் வீதியை அமைப்பதற்காக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு கற்களும் கிரவலும் தருவிக்கப்பட்டன. அவை தருவிக்கப்பட்டு 5 வருடங்களாகியும் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படாமல் வீதியோரங்களிலும் தனியார் காணி ஒன்றிலும் குவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தனியார் காணியில் பெருமளவு கிரவல் இடப்பட்டுள்ளதால் காணியில் அபிவிருத்தி மேற்கொள்ள முடியவில்லை என்று காணி உரிமையாளரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு பெய்த கடும் மழையால் இந்தக் கிராமத்தைச் சுற்றி வெள்ளம் நின்றதால் இந்தக் கிராம மக்கள் வெளியுலகத் தொடர்புகள் இன்றி பல தினங்கள் தமது வீடுகளில் முடங்கி இருந்துள்ளனர். இந்த வீதியைப் புனரமைக்குமாறு உரிய அதிகாரிகளுடன் பல தடவைகள் நேரில் வலியுறுத்தியதுடன் மனுக்கள் கையளித்திருந்த போதிலும் இது வரை பயன் கிடைக்காததால் எதிர்வரும் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதியிடம் வீதியை புனரமைத்துத் தருமாறு மனுவொன்றைக் கையளிக்கவுள்ளதாக தெரிவித்தனர். (வ-9)

# துர்நாற்றம் வீசும் குளப்பிட்டிச் சந்தி



யாழ்ப்பாணம், ஒக்.7

கொக்குவில், கே.கே.எஸ்.வீதி -குளப்பிட்டி வீதிச் சந்திக்கு அருகில் கழிவுகள் மூடைகளாகக் கொட்டப்படுவதால் அந்தப் பகுதி துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அந்தப் பகுதியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கோழிக் கழிவுகள் உட்பட இறந்த பிராணிகளின் உடல்களையும் மூடைகளில் கட்டி அங்கு வந்து போட்டு விடுவதாகவும் சிலர் தெரிவித்தனர். வீதியின் நடுப்பகுதியிலும் கழிவு மூடைகள் கிடக்கக் காணப்பட்டன.

வியாபாரிகள் உட்பட பொது மக்கள் தமது இடங்களில் சேகரிக்கும் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள் களை அங்கே கொட்டுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன.

இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் அருகிலுள்ள வீடுகளில் மக்கள் அசௌகரியத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

**விற்பனைக்கு**

பொமேரியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 633 0740 (52959) (4.6.3)

**பணிப்பெண் தேவை**

சிறிய குடும்பத்திலுள்ள ஒரு வயதுக் குழந்தையைப் பராமரிப்பதற்கு (தங்கியிருந்து / காலையிலிருந்து மாலை வரை) பணிப்பெண் தேவை.

தொ.பே: 077 228 8243 (52961) (4.6.3)

# ஆசிரியர் தின விழாக்கள்

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலய ஆசிரியர் தின விழா இன்று காலை 8 மணிக்கு வித்தியாலய மண் டபத்தில் நடைபெறும். பாடசாலை சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் தினவிழா வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை திருமதி நா.கந்த சாமி, பிரிவு கிராம அலுவ லர் க.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-9)

♦ ♦ ♦

யாழ். தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் பொ.கமலநாதன் கலந்து கொள்வார். (வ-ரி)

♦ ♦ ♦

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் இன்று ஆசிரிய தின விழாக்கள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள் பாடசாலை சமூகம் ஆகியோர் இணைந்து அதிபர் ஆசிரியர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இதேவேளை வலயத்தின் ஆசிரியர் தின விழா இன்று பிற்பகல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற வுள்ளது. இந்த விழாவில் கடந்த ஒரு வருட காலத்தில் (17.10.2013-6.10.2014) வலய பாடசாலைகளில் கடமையாற்றி இளைப்பாறிய அதிபர்கள்,ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (வ-9)

**ஏலோஹீம் சாணை பிடிக்கும் நிலையம்**



கத்தரிக்கோல், மெசின் (Hair Cutter) என்பன சாணைபிடித்துத் தரப்படும் என்பதனை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

கண்டி வீதி, ஐயா கடைச்சந்தி, மீசாலை.

தொ.பே: 077 906 3096 (52954) (7.6.3)

**மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**



வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலையின் அதிபர்

திருமதி கிருஷ்ணவேணி நந்தபாலன்

அவர்கள் 06.10.2014 "பிரதீபா பிரபா" ஜனாதிபதி விருதைப் பெற்றதையிட்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், மேலும் பல உயர் பதவிகளைப் பெற வேண்டுமென இதயம் கனிந்து வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

வாழ்வில் என்றும் உச்சங்கள் பெற்று வாழிய! வாழிய! பல்லாண்டு.

வாழ்த்துபவர்கள்:

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

வ/சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை/வவுனியா.

**ஹோமியோபதி அக்குபஞ்சர் வைத்திய முறையை படிக்க விரும்புவோர்**

ஹோமியோபதி அக்குபஞ்சர் வைத்திய முறையைப் படிக்க விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் ரூபா 10 தபால் உறையுடன் டாக்டர் எஸ்.என்.கதிர்ச்செல்வன் A/C No, 9215704 என்ற கணக்கு இலக்கத்துக்கு ரூபா 500 வைப்புச் செய்த ரசீதுடன் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

Course Director

National Homoeopathic foundation,

No.160/1, Kandy Road, Aryalai, Jaffna.

**Call: 071 446 2926**

(52899) (12.3.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

முருகதாசன் கலாஜினி தம்பதியரின்

செல்வப் புதல்வி தீபிகா

அவர்களைப் பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் கல்வியில் பல சித்திகளைப் பெற்று முன்னேற மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா

152, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(52960)(7.6.3)

## விசேட பொதுகூட்டம்

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளைமறுதினம் வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் த.யசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்டத்துக்கு பிரதம விருந்தினர்களாக வட மாகாண தொழிற் திணைக்கள பிரதி ஆணை யாளர் க.கணேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம், யாழ்.பொலிஸ் நிலைய தலைமை அத்தியட்சகர் எஸ்.பாலசூரிய மற்றும் உதவிய பொலிஸ் அத் தியட்சகர் மு.ஶ்ரீகஜன், யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.அருந்தவநாதன், ஒன்றியத் தலைவர் ந.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**





வருகின்ற தீபாவளியை முன்னிட்டு ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும் அனைத்து விதமான ஆடைகள், பான்சிப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில் இருந்து அரைவாசி விலைக்கு பெற்றுக்கொள்வதுடன் 7, 8 ஆகிய திகதிகளில் 3000/- ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 221 9393

(52808)(7.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

புலமைப் பரிசில் பரீட்சை - 2014இல் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த



செல்வன் ஜெயக்குமார் டக்ஷன்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | | | |
|---|---|---|---|
| 01. ச.மேருஜன் | - 155 | 06. யோ.டிலானி | - 129 |
| 02.ந.கணேஸ்வரன் | - 150 | 07.பா.சதுர்சியன் | - 119 |
| 03.செ.சலோமி | - 141 | 08.கு.கிருசிகா | - 117 |
| 04.ம.தனுஸ்ராஜ் | - 139 | 09.ந.டிலக்சிகா | - 115 |
| 05.அ.நிலாணி | - 130 | 10.க.துசாலவன் | - 114 |

ஆகிய மாணவர்களையும், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் திருமதி றெஜினா ஜெகதீஸ்வரனையும் ஒத்துழைத்த சக ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பழைய மாணவர் சங்கத்தினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம்.

(52958)(7.6.3)

## சமூக விஞ்ஞான போட்டியில் மூன்றாம் இடம்



தொல்புரம் விக்கினேஸ் வர வித்தியாலயத்தில் தரம்9இல் கல்வி கற்ற செல்வன் பு.சரவணன் தேசிய மட்டசமூகவிஞ்ஞானப் போட்டியில் மூன் றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். (வ)

**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலவச விற்பனை**

*இல்லத்தரசிகளுக்கு ஓர் நற்செய்தி!*




12.5 kg லா(f)ப் சிலிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்து காஸ் குக்கர் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

சிலிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்பவர்களுக்கு பிள்ளையார் உணவகத்தில் 10% கழிவில் உணவு வழங்கப்படும்.



(Gas + Cylinder + Hose + Regulater + Clip) = 7208/=

1 Gas Cooker Free

**தொடர்பு:** 021 222 4449

**பிள்ளையார் இன்**

**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**




ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஓய்வு பெற்ற ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். காலி, பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மஹிந்த சிந்தனை மற்றும் 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்காலநோக்கு ஆகியவற்றில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. (ற)

# நிதி மோசடி என்பது பெரிய விடயம் அல்ல


## இப்படிக் கூறுகின்றது பொதுபல சேனா

கொழும்பு, ஒக்.7

நிதிமோசடி போன்ற விடயங்கள் எல்லாம் ஒன்றும் பெரிய விடயங்கள் கிடையாது என்று தெரிவித்துள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர்.

பொதுபல சேனாவின் பிரதிச் செயலாளர் வெல்லம்பிடியே சுமண தம்ம தேரர் முறைகேடான வகையில் விகாரையொன்றுக்குச் சொந்தமான காணியை விற்பனை செய்து லட்சக்கணக்கிலான பணத்தைச் கொள்ளையிட்டுள்ளார். அது தொடர்பாக அவர் தற்போது நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொதுபல சேனாவின் முக்கியஸ்தர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டது குறித்து இணையத்தள ஊடகங்கள் முக்கியத்துவம்கொடுத்து செய்திகளை வெளியிட்டிருந்தன. வெல்லம்பிடிய சுமண தேரரின் கைது தொடர்பாக ஊடகங்கள் கருத்துக் கேட்டபோது;



ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பின் பிரதிச் செயலாளர் முறைகேடு செய்திருப்பது உண்மை என்று ஏற்றுக் கொண்டுள்ள அவர், பணமோசடி ஒன்றும் பெரிய குற்றம் கிடையாது என்றும்- வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் வெல்லம்பிடிய சுமண தேரரின் நடவடிக்கை காரணமாக தமது அமைப்புக்கு எந்தவித கெட்டபெயரோ, நெருக்கடியோ ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# தேர்தல் நடந்தால் அரசுக்கே பாதிப்பு

## எச்சரிக்கின்றார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஒக்.7

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டியே நடத்தப்பட உள்ளது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு தேர்தல்களை முன் கூட்டியே நடத்த வேண்டிய நியாயமான அவசியம் கிடையாது. தேர்தல் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளமை பற்றி தெரியாது. 2005ஆம் ஆண்டு மற்றும் 2010ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனங்களில் கூறப்பட்ட பல விடயங்கள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. கூட்டமைப்பின் பிரதான கட்சியான



கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இது பற்றி தீர்மானம் எடுக்க வேண்டும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்படும் என்ற உறுதிமொழியின் அடிப்படையில் எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் பரப்புரையில் ஈடுபடுவார்கள். இவ்வாறான ஒரு நிலைமையில் தொடர்ந்தும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நடைமுறைப்படுத்துவதாகத் தர்க்கம் செய்வதில் பயனில்லை.

கூட்டமைப்பின் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தலில் களமிறங்காவிட்டால் அதனை ஒரு பின்னடைவாகவே கருத வேண்டும். எதிர்த் தரப்பினரின் திட்டங்களை முறியடிக்கக் கூடிய வகையில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும்"- என்றுள்ளது. (ற)

# தென்கொரியா சென்றிருந்த விளையாட்டு வீரர்கள் மாயம்

கொழும்பு, ஒக்.7

7ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில் பங்கேற்பதற்காக தென் கொரியாவுக்கு சென்றிருந்த இலங்கை அணியின் வீரர்களில் இருவர் நாடு திரும்பவில்லை என்று தகவல்கள் தெரி விக்கின்றன.

ஹொக்கி அணியின் பிரசன்ன திசநாயக்க மற்றும் கடற்கரை கரப்பந்து வீரர் ஆகியோரையே காணவில்லை என்றும்- அவர்கள் தென்கொரியாவிலேயே தலைமறைவாகியிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் காணாமல் போன கடற்கரை கரப்பந்து வீரரை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# முறையாக வரி செலுத்துவோருக்கு வாகன கொள்வனவில் சலுகை



கொழும்பு, ஒக்.7

வருமான வரியை முறையாக செலுத்தும் இலங்கையர்களுக்கு தீர்வை வரி சலுகையுடன் வாகன வசதியை வழங்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வருடாந்தம் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் தொடர்ச்சியாக ஐந்தாண்டுகள் வருமான வரி செலுத்தியவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கவுள்ளதாக திணைக்களத்தின் பதில் ஆணையாளர் நாயகம் வசந்தி மஞ்சநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் வாகனங்களை கொள்வனவு செய்யும்போது 25 வீதம் வரை வரிச் சலுகை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

# நேனிஸ் வெற்றிடத்துக்கு தல்பாஹேவா நியமனம்

கொழும்பு, ஒக்.7

பிரிட்டனுக்கான இலங்கை தூதுவர் கிறிஸ் நோனிஸ் பதவி விலகியதையடுத்து அவரது வெற்றிடத்துக்கு மாலைதீவின் உதவி உயர்ஸ்தானிகர் சானக்க எச் தல்பாஹேவா நியமிக்கப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கிறிஸ் நோனிஸின் பதவி விலகல் கடிதத்தை வெளிவிவகார அமைச்சு ஏற்றுக் கொண்டது. இதனையடுத்தே பிரிட்டன் தூதரகத்தின் நிர்வாகக் கடமைகளை பொறுப்பேற்குமாறு தல்பாஹேவா, வெளிவிவகார அமைச்சால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன அமெரிக்காவில் வைத்து தன்னை தாக்கினார் என்று குற்றஞ்சாட்டியே கிறிஸ் நோனிஸ் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். (ற)

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.7

சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டதை கண்டித்து நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். பதுளை-கொழும்பு பிரதான வீதியின் பம்பஹின்ன சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சப்ரகமுவ பல்லைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரசிந்து ஜயசிங்க தெரிவிதுள்ளார்.



கோப்புப்படம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை காலவரையரையின்றி மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நேற்றுமுன்தினம் நடவடிக்கை எடுத்தது. மாணவிகள் சிலர் பலவந்தமாக மாணவர் விடுதிக்குள் பிரவேசித்ததால்இந்தநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் சந்தன பீ உடவத்த தெரிவித்துள்ளார். (ற)

# கொழும்பில் இரு தமிழ் பாடசாலைகளை அமைக்க வேண்டும்

## கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஒக்.7

கொழும்பு மாநகரில் மேலதிகமாக இரண்டு தமிழ் தேசிய பாடசாலைகளை உருவாக்கி தருமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினமான நேற்றுக் காலை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவை தொடர்பு கொண்ட மனோ கணேசன் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''வளர்ச்சியடையக்கூடிய வாய்ப்புகள் இருந்தும், இன்னமும் முறையாக வளர்ச்சியடையாத மாகாணசபை பாடசாலைகளை, தேசிய கல்லூரிகளாக சீரமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தின் சில மாகாண சபை பாடசாலைகள், மத்திய அரசால் சுவீகரிக்கப்படுகின்றன.

இவற்றில் தற்போது சிங்கள பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தநிலையில் கொழும்பின் தமிழ் பாடசாலைகளான, கணபதி இந்து மகளிர் வித்தியாலயத்தையும், வடகொழும்பு இந்து கல்லூரியையும் இந்த பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.



தமிழர்கள் கொழும்பில் அதிகம் வாழும் வடக்கு, மத்திய கொழும்பு வலயத்தில் இன்னமும் இரண்டு தேசிய தமிழ் பாடசாலைகளை உருவாக்கி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக உறுதியளித்த, அமைச்சர் இது தொடர்பில் எழுத்து மூல விவரங்களை உடன் அனுப்பி வைக்கும் படியும் கேட்டுக்கொண்டுள்ளார்."- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)











யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் வாணிவிழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும் பிரதி அதிபருமாகிய ச.லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.
கோலாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் மாணவர்களால் மேடையேற்றப்பட்டன. விழாவையொட்டி மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. (வ)



யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்திய வாணிவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமை விசேட பூசை வழிபாடுகளுடன் நடைபெற்றது.
சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சங்க இயக்குநர்கள், பணியாளர்கள், பொதுச் சபை பிரதிநிதிகள் போன்றோர் கலந்துகொண்டனர். (வ-17)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய மானம்பூ உற்சவத்தின் போது ஆலயத்தின் மிகப் பழமை வாய்ந்த குதிரை வாகனம் புனரமைக்கப்பட்டு அதில் கண்ணகியம்மன் கன்னி வாழை வெட்டச் சென்ற வேளை....



வாணிவிழாவை முன்னிட்டு வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், கணக்காளர் இணைந்து விஜயதசமி தினத்தன்று திறந்து வைத்தவேளை...



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை சிறுவர் தின விழாவும் சுற்றாடல் தினமும் இடம்பெற்றன





யாழ் விசன் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் வருடாந்த நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. அந்தப் பாடசாலையின் நிறுவுநரும் இயக்குநருமான திருமதி அருணா சுசீந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்ட நவராத்திரி விழாவில் குறித்த பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், சமய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-ரி)



## இறக்கத்தான் பிறந்தோம்... அதுவரை இரக்கத்தோடு இருப்போம்...

# நயனுக்கு

## தூதுவிடும் நித்தியானந்தா



நடிகை நயன்தாரா மன அமைதி பெறுவதற்காக தமது ஆசிரமத்துக்கு வருமாறு நித்தியானந்தா ஆசிரமம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. ஏற்கனவே நயன்தாரா காதல் விடயங்களில் ஏமாற்றம் அடைந்துள்ளார். அவருக்கு முதல் காதல் தோல்வியில் முடிந்தது. இரண்டாவது காதலும் கைகூடவில்லை. இதனால் இனிமேல் காதலே வேண் டாம் என்ற முடிவில் இருக்கிறார். கதாநாயகர்கள் சிலர் இவருடன் நெருக்கமாக நட்பு வைத்துக் கொள்ள நெருங்கியும் அவர் பிடி கொடுக்கவில்லை. அவருடைய முழு கவனமும் சினிமாவிலேயே இருக்கிறது.

இந்த நிலையில் ஏமாற்றங்களால் விரக்தியில் இருக்கும் நயன்தாராவுக்கு மனஅமைதி கிடைக்க செய்யும் முயற்சியில் நித்தியானந்தா ஆசிரமத்தைச் சேர்ந்த சிலர் ஈடுபட்டு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர்கள் நித்தியானந்தா ஆசிரமத்துக்கு வருமாறு நயன்தாராவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். நிறைய பெண்கள் ஆசிரமத்துக்கு வந்து தியானம், யோகா மூலம் கவலைகளை மறக்கிறார்கள். எனவே நீங்களும் ஆசிரமத்துக்கு வந்து மன அமைதி பெறுங்கள் என்று அழைத்துள்ளனர்.

நயன்தாரா கிறிஸ்தவராக இருந்தாலும் காதலுக்காக இந்து மதத்துக்கு மாறி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்களை ஏமாற்றும்

# 'ரியாலிட்டி ஷோ'

## 7 வருடங்களின் பின்னர் வெளிவந்த உண்மை

இன்றைக்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் 'ரியாலிட்டி ஷோ' நிகழ்ச்சியில் ஏதாவது ஒரு சண்டையை இழுத்து கண்கலங்க நடுவர்கள் வெளியேறுவது அடிக்கடி நடக்கிறது. இந்தச் சண்டைகள் உண்மையா ? இல்லை டி.ஆர்.பிக்காக போலியாக நடத்தப்படுகின்றனவா என்ற கேள்விகள் பார்வையாளர்களுக்கு எழாமல் இல்லை. ஆனால் இவை போலிதான் என்று இதுபோன்ற ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சி சண்டையில் பங்கேற்ற பப்லு என்ற பிரிதிவிராஜ் கூறியுள்ளார். 7 வருடங்களுக்கு முன்பாக, 2007 ஆம் ஆண்டு விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'ஜோடி நம்பர் 1, சீசன் 1' தொடரில் நடிகர் பப்லு என்னும் பிருத்விராஜ் கலந்து கொண்டு நடனமாடினார்.

அந்த நிகழ்ச்சியில் நடுவராக அமர்ந்திருந்த நடிகர் சிம்புவுக்கும், பிருத்விராஜுவுக்கும் இடையில் வாக்குவாதம் வளர்ந்து அது பெரிய அளவிலான வாதமாகி, சிம்பு சட்டென்று 'நான் இனிமேல் இங்கே வர மாட்டேன்..' என்று சொல்லிவிட்டு கண் கலங்கி அழுது! அரங்கத்தைவிட்டு வெளியேறினார்.

இந்த சண்டையின் போது அழுத சிம்பு எனக்கு நடிக்கத் தெரியாது என்று அடிக்கடி கூறினார். அதை இப்போது ரசிகர்கள் கிண்டலடிக்கின்றனர். இதைப் பார்த்த அனைவரும் அடுத்த இரண்டு நாள்களுக்கு இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் 'இது அனைத்துமே முன்னரே திட்டமிட்டு அரங்கேற்றிய நடித்த நடிப்புதான். அதில் உண்மையில்லை' என்று அந்த மேடை நாடகத்தில் நடித்த நடிகர் பிரித்விராஜ் கூறியுள்ளார்.

ஒரு பத்திரிகைக்கு பிருத்விராஜ் அளித்துள்ள பேட்டியில், 'அந்தச் சண்டையை நாங்கள் முன்கூட்டியே திட்டம் போட்டுத்தான் அரங்கேற்றினோம். அது உண்மையான சண்டையில்லை. அந்தப் பாகம் (எபிசோட்) ஒளிபரப்பான இரவு, குறிப்பிட்ட நிகழ்ச்சியின் டி.ஆர்.பி. ரேட்டிங் 27 வரையிலும் உயர்ந்தது. சின்னத்திரை வரலாற்றிலேயே



ஒரே நாளில் இவ்வளவு டி.ஆர்.பி. ரேட்டிங் உயர்ந்த ஒரே ஷோ, அந்த எபிசோடுதான்.

அதில் ஒரு சதவீதம்கூட உண்மையில்லை. சுற்றிலும் 13 வீடியோ கமராக்கள் இருக்கும்போது நடக்கும் சண்டையில் எப்படி உண்மையிருக்கும்...? முழுக்க முழுக்க திட்டமிட்ட ஷோ. நாங்கள் சண்டை போடும்போது 'சண்டை போடாதீங்க' என்று செட்டில யாரும் சொல்ல மாட்டாங்கள். 'லைட் இருக்கு. அங்க நின்று சண்டை போடுங்க.. மைக்கை சரியாக வைத்துக் கொண்டு சண்டை போடுங்க' என்றுதான் சொல்லுவாங்க.

இவைகளில் எங்கே உண்மையிருக்கும் ? நடிப்பதற்கு வந்துவிட்டோம். மக்களை ஈர்க்க ஏதாவது செய்துதான் ஆகவேண்டும், என்று அப்போது நடந்த உண்மையை இப்போது ஏழாண்டுகள் கழித்து சொல்லியிருக்கிறார்.

டி.ஆர்.பி. ரேட்டிங்கை உயர்த்திக் கொண்டு, விளம்பரத்தைப் பெருக்கிக் கொண்ட விஜய் தொலைக்காட்சி மட்டுமல்லாது ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியிலும் இதுபோன்ற அடிதடிகள் அடிக்கடி அரங்கேறுகின்றன. பிரபலங்களை ஒருவரை மோத விட்டு அதை பெரிதாக்கி, அந்த நிகழ்ச்சியை பிரபலப்படுத்த தொடர்ந்து முன்னோட்டம் காண்பிக்கப்பட்டு, தங்களது டி.ஆர்.பியை உயர்த்திக் கொண்டு வியாபார தந்திரங்களை செய்கின்றனர். இனியும் இவர்களை நம்பி ஏமாறாமல் நேயர்கள் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.



## இன்றைய பேஸ்புக் தத்துவம்

பெத்த மகளுக்கும், பரீட்சை வினாத்தாளுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு அது என்ன தெரியுமா? இரண்டையுமே கட்டிக் கொடுக்கின்ற வரைக்கும் ஒரே பதற்றம், தலைவலி தான்......

பெத்த மகனுக்கும், பரீட்சை வினாத்தாளுக்கும் உள்ள ஒற்றுமை என்ன தெரியுமா? இரண்டையும் திருத்தவே முடியாது....

## பேஸ்புக்குக்கு சவால்விட தயாராகும் கூகுள்



பேஸ்புக் நிறுவனமானது சில மாதங்களுக்கு முன்னர் குறுஞ்செய்திகளை அனுப்பக்கூடிய கைத்தொலைபேசி மென் பொருளை வட்ஸ் அப்பிடமிருந்து கொள்வனவு செய்திருந்தது. இந்த நிலையில் கூகுள் நிறுவனமும் இவ்வாறானதொரு மென்பொருளை தானே சுயமாக உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போதுள்ள குறுஞ்செய்தி மென் பொருளை விடவும் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டு வரும் இந்தப் புதிய மென்பொருள் அடுத்த வருடம் சோதனைக்காக வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ரிலாக்ஸா வாசியுங்க

நேற்று நான் என் மனைவியை முழங்காலில் நிற்க வைத்தேன் !
உண்மையாகவா , எப்படி?
அவள் என்னை அடிக்க வரும்போது நான் கட்டிலுக்கு அடியிலே போய் ஒளிந்து கொண்டேன்!

என்ன அம்மா உன் கணவர் காணாமற் போய் இருபது நாளாகிவிட்டது என்று சொல்கின்றாய். ஏன் இவ் வளவு நாள் கழித்து வந்து முறைப்பாடு செய்கிறாய் ?
இன்றைக்குத்தான் அவரோட சம்பள நாள்.

கணவன், கோயில்ல கடவுளிடம் என்ன, வரம் கேட்டாய் ?
மனைவி, அடுத்த ஜென்மத்திலும் நீங்கள் தான் என் கணவராக வர வேண்டும் என்று வரம் கேட்டேன். அது சரி நீங்கள் என்ன வரம் கேட்டீங்க ?
கணவன், எனக்கு அடுத்த ஜென்மம் என்ற ஒன்று வேண்டாம் என்று வேண்டிக் கொண்டேன்.

ஐயோ! மனதைத் தளர விடாதீங்க, கண் கலங்காதீங்க, கவலைப்படாதீங்க மாமா, உங்கள் மகளை நான் கண் கலங்காம பார்த்துக் கொள்கின்றேன்.
அட! நீங்க வேற மாப்பிள்ளை! நான் கவலைப்படுவது எல்லாம், பாவம்.. உங்களுக்காகத்தான்..!
ம்ம்ம்...நாங்கள் தப்பிச் சோம்... நீங்க...என்னபாடுபடப் போறீங்களோ...



# அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்கள் பயனுடையவையா?

## ஆராய வேண்டும் என்கிறார் ஒட்டுசுட்டான் பிரதிப் பிரதேச செயலர்

ஒட்டுசுட்டான், ஒக். 7

எமது பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் திட்டங்கள் மக்களுக்குப் பயன்படுகிறதா, உரிய பயனாளிகளைச் சென்றடைகிறதா என்பதனை ஆராய்வது பிரதேச செயலர் என்ற வகையில் எனது கடமையாகும் எனக் கடந்த 26 ஆம் திகதி கற்சிலைமடு பெருங் கருவேப்பமுறிப்புக் குளத்தின் அருகாமையில் சேவா லங்காவினால் நிறைவேற்றப்பட்ட உதவித் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் போது ஒட்டுசுட்டான் பிரதிப் பிரதேச செயலர் எஸ்.குருபரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கணிசமான உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி வருகின்றன. ஆனால் தெரிந்தோ தெரியாமலோ சில தவறுகளும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் பிரதேச செயலர் என்ற வகையில் திட்டத்தின் மூலம் உரியவர்களுக்குப் பயன் கிடைக்கப் பெறுகிறதா? எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் முன்னேறி வருகின்றனர்? போன்றவற்றை ஆராய்வது எனது கடமையாகும்.

சேவா லங்காவினால் 1.5 கோடி ரூபா நிதியீட்டினால் நடத்தப்படும் பண்ணையானது சில தடங்கல்கள் காரணமாக இயக்காது தற்போது கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குக் கையளிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இந்தக் கால்நடைப் பண்ணை மூலம் இந்தப் பிரதேசத்தில் 26 குடும்பங்களுக்கு நல்லின கறவை பசுக்கள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டன.

ஆனால் அவைகளில் உள்ள குறைபாடுகள் பற்றி எமக்கு முறைப்பாடு செய்துள்ளனர். பயன் பெறமுடியாத நிலை மற்றும் இனப்பெருக்கம் இல்லாத நிலையில் கால்நடைகள் இறக்குமதி செய்யப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

இதனால் பயனாளிகளை நாம் இங்கு அழைத்து வந்துள்ளோம். அவர்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். 1.5 கோடி ரூபா நிதியீட்டில் இந்தத் திட்டத்தை நடத்தி வருகிறீர்கள்.

இதற்கான வரவு-செலவுகளை எமக்கும் மக்களுக்கும் நீங்கள் தெரியப்படுத்தவேண்டும்.

தற்போது 7 கால்நடைகள் கொள்வனவு செய்யப்பட்டு பண்ணையில் விடப்பட்டுள்ளன. ஆனால் அவைகளால் எவ்வித பயனையும் அடைய முடியாதுள்ளது. மாறாக ஒரு கூலியாளை வைத்துப் பராமரித்து வருகின்றனர்.

ஆனால் அந்தக் கூலியாளுக்கு சம்பளம் கொடுக்க முடியாதுள்ளது. அவை பால் எடுக்கக் கூடியதாக இருந்தால் அதன் மூலம் வருவாயைப் பெற்று அவருக்கான சம்பளத்தைக் கொடுக்க முடியும். அதுவும் ஒரு கறவை மாட்டை ரூபா 75 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளீர்கள். ஆனால் அவை விலை கூடியவை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் 4 கால்நடைகள் கொள்வனவு செய்துள்ளீர்கள். இவற்றைக் கிராம அபிவிருத்திச் சங்கம் ஏற்க மறுக்கின்றது. காரணம் விலை அதிகம்.

திட்டங்கள் மூலம் மக்கள் பயனடையவேண்டும். அவர்கள் வாழ்வாதாரம் மேலோங்க வேண்டும்-என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய சேவா லங்கா நிறுவன திட்டப் பணிப்பாளர் திருமதி அன்றோஸ் தெரிவிக்கையில்,

சேவாலங்கா நிறுவனமானது ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு மாதாந்தம் உலர் உணவு முதல் தற்காலிக வீட்டுத் திட்டங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் எனப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதனை விட ஒன்றரைக் கோடி நிதியீட்டத்தின் மூலம் கால்நடைப் பண்ணை ஒன்றை நிறுவி அதன் மூலம் நல்லின கறவையினங்களை 26 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம்.

இந்தப் பண்ணை மூலம் பால் உற்பத்திகளை மேற்கொள்ள 50 பேருக்குப் பயிற்சி அளித்தது மட்டுமன்றி யுவதிகளுக்கான சுய தொழில் வாய்ப்பினையும் பெற்றுக் கொடுத்தோம்.

இந்தக் கறவையினங்களைக் கால்நடை மருத்துவர்களின் பரிந்துரையுடன் நிபுணத்துவமுள்ளவர்களின் ஆலோசனைப்படியே தென்னிலங்கையில் இருந்து கொண்டு வந்தோம்.

ஆனால் பிரதிப் பிரதேச செயலர் சிறிதளவேனும் நன்றி கூறாது குறைகளை எம் மீது சுமத்தி உள்ளார்- என்றார். (த-500)

## பசுப் பாலைச் சந்தைப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

ஒட்டுசுட்டான், ஒக்.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய கிராமங்களான சமளங்குளம், ஒலுமடு, அம்பகாமம், புலுமச்சினாறு குளம் மக்கள் பசுப் பாலைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்களுக்காகப் பால் சபை விரி வாக்க உத்தியோகத்தர் வா.தயாபரனின் ஏற்பாட்டில் பாற் கொள்வனவு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பாலைச் சந்தைப்படுத்தவும், நல்ல விலை யைப் பெறவும் முடிவதாகக் கால்நடை பண்ணையாளர் சங்கத் தலைவர்கள் தெரிவித் தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,



புலுமச்சினாறுகுளம் மற்றும் அம்பகாமம் கிராமத்திலுள்ள கால் நடைப்பண்ணைகளில் இருந்து பெறப்படும் பாலை விற்பனை செய்ய முடியாத நிலை இருந்து வந்தது.

ஒட்டு சுட்டான் பிரதேச பாற் சபை விரிவாக்க உத்தியோகத்தர் வா.தயாபரன் கொள்வனவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு அதற்கான கொள்கலன்களையும் வழங்கினார். இதனால் பாலை இலகுவாக விற்பனை செய்ய முடிவதுடன் நிர்ணய விலையும் கிடைப்பதால் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு அது உதவியாக அமைந்துள்ளது- என்றனர். (த-500)

## கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுவர் வன்முறைகள் அதிகரிப்பு

### செ.பத்மநாதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன என்று தெரிவித்துள்ளார் கிளிநொச்சி, செஞ்சோலை இல்லத்தின் நிறுவுனர் செ.பத்மநாதன் கடந்த வியாழக்கிழமை அந்த இல்லத்தில் நடை பெற்ற சிறுவர் தினம், வாணி விழா, மாணவர் மன்றம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



"சிறுவர்கள் தினம் கொண்டாடுவதுடன் அவர்களின் உரிமைகளை மறந்துவிடுகின்றோம். சிறுவர்களை எப்படி பராமரிப்பது வழிநடத்துவது என்பதை மறந்துவிடுகின்றோம்.

அண்மைக்காலமாக சிறுவர்களுக்கு எதிரான வன் முறைகள் அதிகரித்து வருகின்றன. இது கவலைக்குரிய விடயம். மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் பாடசாலைகளில், தனியார் கல்வி நிலையங்களில், வீதிகளில் அதிகரித்துச் செல்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர்களுக்கெதிரான வன்முறை அதிகரித்துச் செல்வதில் கவனம் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் எல்லோரும் உள்ளோம்''- என்று அவர் தெரிவித்தார். இந்தநிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தி யோகத்தர் எம்.முத்துக்குமாரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ற-18)

## வியாபார உரிமத்தை பெறாதோர் மீது நடவடிக்கை

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தில் வியாபார உரிமம் பெறாத வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கரைச்சிப் பிரதேச சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள கிளிநொச்சிப் பொதுச் சந்தை வளாகத்தில் நடப்பாண்டுக்கான வியாபார உரிமம் செலுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது இருபதுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் இதுவரை வியாபார உரிமம் செலுத்தாத நிலையில் அவர்களுக்கான எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அதனை அடுத்துப் பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஏனைய மின் கட்டண நிலுவை, நில வாடகைப் பணம் என்பன செலுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

(த-55)



அமைச்சர் ரிசாத் திறந்து வைக்கிறார்

## உப அஞ்சல் அலுவலகம் வவுனிக்குளத்தில் திறப்பு

முல்லைத்தீவு, ஒக்.7

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்துக் குட்பட்ட வவுனிக்குளத்தில் உப அஞ்சல் அலுவலக புதிய கட்டடம் கடந்த 5 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

போர் காரணமாக முன்னர் இயங்கி வந்த அஞ்சலகம் அழிவடைந்த நிலையில் அஞ்சல் திணைக்களத்தின் நிதியுதவியின் கீழ் இந்தப் புதிய அஞ்சலகக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இதனை அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் அழைப்பின் பேரில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் இணைப்பாளர் கனகரட்ணம், வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்பாளர் ஐ.எஸ்.எம்.முகைதீன், அஞ்சல் திணைக்கள பணிப்பாளர், அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாங்குளம் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-421)

## பன்னாட்டுப் பறவைகளுடைய தங்குமிடம் அழிக்கப்படுகிறது

### கோரைக்குளம் சதுப்பு நிலம் குறித்து சுற்றாடல் அமைப்புகள் குற்றச்சாட்டு

மன்னார், ஒக்.7

வலசை போகும் பன்நாட்டுப் பறவைகளின் பிரதானமான தங்குமிடங்களில் ஒன்றான மன்னார் பிரதேச செயலப் பிரிவுக்கு உட்பட்ட கோரைக்குளம் சதுப்பு நிலப் பிரதேசத்திலுள்ள கடற்தாவரங்கள் அகற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களால், அந்த ஈரநிலப்பகுதி மற்றும் களப்புக் கடல் சுற்றாடல் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளன என்று சுற்றாடல் அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

வலசை போகும் பறவைகளின் பிரதானமான தங்குமிடமொன்றாகவும் இனப் பெருக்க நிலையமொன்றாகவுமுள்ள இந்த ஈரநிலப் பிரதேசம் பறவைகளை கண்காணித்து ஆய்வுகளை மேற்கொள்ளும் மையமொன்றாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அந்த அமைப்புகள் தெரிவிக்கின்றன.



இந்த நாட்டுக்குள் பன்னாட்டுப் பறவைகள் உள்நுளையும் பிரதானமான வலயங்களில் ஒன்றான இந்த ஈரநிலப்பகுதி மற்றும் களப்புக் கடல் சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் பேரழிவைத் தடுத்து நிறுத்திவிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அந்த அமைப்புகள் தெரிவிக்கின்றன. (ற-22)

## வீரசிங்கம் மண்டபத்துக்கு புதிதாக அலங்கார வளைவு

ஜனாதிபதி மஹிந்தவின் வரவுக்காக இந்திய சிற்ப கலைஞர்களால் அமைப்பு



யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு இந்திய சிற்பக் கலைஞர்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மண்டபத்தின் நுழைவாயிலில் புதிய அலங்கார வளைவு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தஅலங்காரவளைவுஅமைக்கும் பணியில் இந்திய சிற்பக் கலைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்கென பத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 13ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி தலைமையில் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தநிலையில்வடக்குமாகாண ஆளுநர் செயலகத்தின் நிதியுதவியுடன் வீரசிங்கம் மண்டபம் மெருகூட்டி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் ஜனாதிபதியின் யாழ். பயணத்தை முன்னிட்டு யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்துக்கு வெள்ளை பூசப்பட்டு வருகின்றது.

துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகே யாழ். பொலிஸ் நிலையத்துக்கு இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுப் பணிகள் நிறைவுறும் நிலையில் உள்ளன.

இதேவேளை, மண்டபத்துக்கு முன்பாகவுள்ள முற்றவெளிப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தக்கூடிய வகையில் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் கூட்டத்தில் பங்கேற்கும் அரச அதிகாரி களின் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் இந்தப் பகுதியில் நிறுத்தப்பட வுள்ளதாகக் கூறப்படுகிறது. (த-17)

# துன்னாலையில் குழுச் சண்டை

## 7 பேருக்குக் கடும் காயங்கள் பொலிஸாரால் 7 பேர் கைது

கரவெட்டி, ஒக் 7

துன்னாலையில் இரு குழுக்களுக்கிடையில் கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்த கடுமையான மோதலில் இதுவரை 7 பேர் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நேற்றும் நேற்று முன் தினமும் நடத்தப்பட்ட தேடுதல்களில் வாள்கள், பொல்லுகள், கோடரிகள் என பெருந்தொகையான ஆயுதங்களைப்பொலிஸார்கைப்பற்றியிருப்பதாகவும் நேற்று அப்பகுதியில் எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை யாயினும் அப்பகுதி தீவிர கண்காணிப்பில் உள்ளாக்கப்பட்டதாகவும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். இது வரை ஏழு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் சுமார் 40 சந்தேக நபர்களைத் தாங்கள் வலை வீசித் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை துன்னாலைப் பகுதியில் ஆலயம் ஒன்றில் வாணி விழா பூசை வழிபாடுகள் தொடர்பில் இரு தரப்பினர்களுக்கு இடையில் எழுந்த முரண்பாடும் வாக்குவாதமுமே மோதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள ஆட்டுப்பட்டிக் கொலனி மற்றும் துன்னாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர் குழுக்களே முதலில் கடந்த சனிக்கிழமை மோதலில் ஈடுபட்டதாகவும். இதன்போது சிலர் காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிய வருகின்றது.

எனினும் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்திருந்தனர். இதன் தொடர்சியாகவே கடந்த ஞாயிற்றுக் கிழமை பெரும் மோதல் ஒன்று இடம்பெற்றது.

வடமராட்சியில் இருந்து சாவகச்சேரி செல்லும் வீதியில் தாமரைக்குளச் சந்திக்கு அண்மையில் வீதியில் கத்திகள், வாள்கள், பொல்லுகள், சோடாப் போத்தல்களுடன் கூடிய இளைஞர் குழுவினர் தமக்கிடையே மிகக் கடுமையாக மோதிக் கொண்டனர். சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றபோதும் நிலைமையைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. இதனை அடுத்து உதவிக்கு ராணுவம் வரவழைக்கப்பட்டே நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடிந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். நேற்று மதியம் அப்பகுதியில்ராணுவம்பாதுகாப்புரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சுமார் 40 க்கும் மேற்பட்டோர் தேடப்பட்டு வருவதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

இம்மோதல் சம்பவம் காரணமாக அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகின்றது. (த-109)

## போலித் தங்கம் விற்க முயன்ற 4 பேர் மறியலில்

யாழ்ப்பாணம், ஒக் 7

போலித் தங்கம் விற்பனை செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை நாவற்குழிப் பகுதியில் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் உள்ள புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், 3 கிலோ ஈயம் மற்றும் 2 கிலோ தங்க முலாம் பூசப்பட்ட நகைகளை விற்பனை செய்ய முயன்ற 4 பேர் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த 4 பேரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தியபோது, அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (த-106)

## சட்டவிரோத மீன்பிடியை அனுமதிக்கவே முடியாது

அடித்துக் கூறினார் அமைச்சர் டெனீஸ்வரன்




யாழ்ப்பாணம்.ஒக்.7

வடக்கு மாகாணத்தில் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்ட எந்தத் தொழில் முறைகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அனுமதிக்கப்பட்ட தொழில் முறைகளில் மீனவர்கள் தொழிலை மேற்கொள்வதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் கடல்வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என வடமாகாண மீன் பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 23 மீனவர்கள் இழுவைப் படகு மீன்பிடியை அனுமதிக்கக் கோரி நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இழுவைப் படகுத் தொழிலைத் தடை செய்துள்ளமையால் வல்வெட்டித்துறை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 160 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதற்குச் சாதகமான பதில் கிடைக்காவிடில் எதிர்வரும் 9 ஆம் திகதி மாகாண சபைக்கு முன்பாகப் போராட்டம் இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில்டெனீஸ்வரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, 23 மீனவர்களும் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையை அனுமதிக்கக் கோரியுள்ளனர். இதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது. வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் கடல் வளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்த மீன்பிடி முறைக்கு அனுமதி வழங்கப்பட்டால் எதிர்காலத்தில் கடல் வளம் பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரிடும். அத்துடன் குறித்த மீனவர்கள் சங்கத்தில் பதிவு இல்லாமல் தன்னிச்சையாகத் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் வசதியான மீனவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த பிரதேசத்தில் அதிகமானவர்கள் இந்த மீன்பிடி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கடல் வளத்தைத் தென்னிலங்கை மீனவர்களும், இந்திய மீனவர்களும் அழிக்கின்றனர் என மீனவர்கள் குறை கூறும் நிலையில் வடபகுதி மீனவர்களே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் எவ்வாறு கடல் வளத்தைப் பாதுகாக்க முடியும்.

தலைவர் வே.பிரபாகரன் பிறந்த இடத்திலேயே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகக் குறித்த மீனவர்கள் தெரிவிக்கும் நிலையில் அவருடைய காலத்தில் இருந்தே கடல் வளத்தைப் பாதுகாக்கும் வகையில் இழுவைப் படகு மீன்பிடிக்கு அனுமதி இல்லை. அவர் கூட இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார். எனவே அவரது வழியில் எமது செயற்பாடுகள் நடைபெறும். தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசிடமிருந்தோ வெளிநாட்டுத் தூதரகங்களுடன் இணைந்தோ, புலம்பெயர் மக்களின் உதவிகளுடனோ வசதி குறைந்த மீனவர்களுக்குத் தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

என்வே குறித்த மீனவர்கள் மாற்றுத்தொழில் முறையை மேற்கொள்வதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். 2009 ஆம் ஆண்டில் இருந்து இழுவைப் படகு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கு மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்கி அனுமதிக்கப்பட்ட தொழில்முறைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (த-14-5-108)

## பெற்ற தாய் அநாதையாக திரிவதை பொறுக்க முடியாத மகளின் முடிவு

பெற்ற தாய் வீதியில் அநாதையாகத் திரிவதைத் தாங்க முடியாத மகளான 5 பிள்ளைகளின் தாயார் தூக்கில் தொங்கித் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டபோது பிள்ளைகளினால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பரமேஸ்வரன் விமலா தேவி (வயது-46) என்ற 5 பிள்ளைகளின் தாயாரே நேற்றுத் திங்கட்கிழமை காலை இவ்வாறு தூக்கில் தொங்கி தற்கொலை செய்வதற்கு முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

8 பிள்ளைகளைப் பெற்ற 85 வயதுடைய தாயாரை ஏனைய பிள்ளைகள் கவனிக்கவில்லை. தற்கொலைக்கு முயன்றவரான மகளுடனேயே அவர் இருந்துள்ளார். பின்னர் ஏதோ காரணத்துக்காக வீதியில் அநாதையாகத் திரிய முயன்றுள்ளார். தாயார் இவ்வாறு அநாதையாகத் திரிவதை எண்ணிக் கவலை கொண்டிருந்த மகளான இவர் நேற்று திங்கட்கிழமை வீட்டு அறைக்குள் தூக்கு மாட்டிக்கொண்டார்.

இதனைக் கண்ட பிள்ளைகள் தாயாரைக் காப்பாற்றி யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-106)

## வீதிகளில் பஸ் தரிப்பிடம் அமைக்க மாகாண சபை அனுமதீ அவசியம்

யாழ்ப்பாணம், ஒக் 7

வடக்கு மாகாணத்தில் வீதிகளில் ஞாபகார்த்தமாக பஸ் தரிப்பிடங்களை அமைப்ப தற்கு இனிவருங்காலங்களில்உள்ளுராட்சிசபைகள் ஊடகமாகாண சபையில் அனுமதிபெற வேண்டும். அனுமதி பெறாது தரிப்பிடங்களை அமைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக உறவினர்கள் மற்றும் சனசமூக நிலையங்களால் குறிக்கப்பட்ட இடங்களில் பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன. இவர்களால்அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடங்கள் மூடிய தரிப்பிடங்களாக அமைக்கப்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் சமூகச் சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் வீதிப் புனரமைப்புக்கள் தற்போது பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் வீதியின் அருகாகவே பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன: இதன் காரணமாக போக்குவரத்தின்போது பயணிகள் விபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும். இவற்றைத் தவிர்க்கும் வகையில் மாகாண சபையின் கீழ் மாற்று நடவடிக்கையாகப் பொருத்தமான நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக ஞாபகர்த்தமாக பஸ் தரிப்பிடங்களை அமைக்க முன்வருவோர் அந்தந்தப் பிரதேச சபைகளின் அனுமதியைப் பெற்று மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சிடம் அனுமதி பெறவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் தாமதிக்காமல் அனுமதிகள் உடனே வழங்கப்படும். எதிர்வரும் 11 ஆம் திகதியிலிருந்து இதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சபையில் அனுமதி பெறப்படும்-என்றார். (த-14)

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944

விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222

செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## ஆரம்பித்து விட்டார் ஜனாதிபதி ஆயத்தமில்லை எதிர்த்தரப்பு

ஊவா மாகாண சபை தேர்தல் முடிந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களில் அரசியல் கட்சிகள் தமது கவனத்தைத் திருப்பியிருக்கும் நிலையில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை போட்டிக்கு நிறுத்தும் விடயம் மீண்டும் தலைதூக்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பொதுவில் இப்போது நடைமுறையில் இருந்து வரும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் உட்பட வேறு சிலவும் அதிக அக்கறை கொண்டிருப்பது தெரிகின்றது.

ஆட்சியில் உள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியைச் சேர்ந்தவர்களிலும் இந்த விதமான கொள்கையுடையவர்கள் இருக்கக்கூடும். ஆனால் அவர்களின் தலைவரான ஜனாதிபதியும் அவரோடு ஒத்த முதுநிலை தலைவர்களும் நிறைவேற்று அதிகா ரத்தை சற்றும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதனால் கட்சியிலுள்ள ஏனையவர்கள் இந்த விடயத் தில் பெட்டிப் பாம்புகளாய் அடங்கிப் போய் இருக்கிறார்கள்.

உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்தவர்களே ஐ.தே.கட்சியினர்தான். அந்த முறையானது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கவில்லை. தனிநபர் ஒருவர் எதேச்சதிகாரியாகச் செயற்படுவதற்கு வழிகோலுகிறது என்று அனுபவரீதியாக உணர்ந்ததன் வாயிலாக அந்தக் கட்சியே இப்போது அந்த அதிகாரத்தை ஒழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு பதவிக்கு வந்தவர்களான முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்கவோ, அவருக்குப் பின்னர் வந்த இன்றைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷவோ அந்த கொள்கையை அப்படியே குப்பைக் கூடைக்குள் போட்டு விட்டு அந்த அதிகாரத்தின் மூலம் கிடைக்கும் தனி மனித பயன்களை அனுபவிக்கலானார்கள். இன்னும் சொல்வதானால், இப்போதைய ஜனாதிபதியானவர் இரண்டு தடவைகள் என்ன எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் வகையில் அரசமைப்பில் 18 ஆவது திருத்தம் ஒன்றை புகுத்தி நிறைவேற்று அதிகாரங்களை மேலும் பலப்படுத்திக் கொண்டுள்ளார். அதனால் 17 ஆவது திருத்தத்தின் மூலம் இருந்து வந்த பல சாதகமான நல்ல அம்சங்களும் தவிடு பொடியாகிவிட்டதென்கிறார்கள் அரசியல் அறிஞர்கள்.

எனவேதான் நிறைவேற்று அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் ஒழித்து விட்டு நாட்டில் நல்லாட்சியைத் தோற்றுவிக்கக் கூடிய ஒருவரை தேர்தல் களத்தில் இறக்குவதற்கு சிலர் முயன்று வருகிறார்கள். இந்த விடயத்தில் ஐ.தே. கட்சி முன்னிலை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்சியின் தலைவர் தாமே போட்டியில் நிற்கப் போவதாக அறிவித்து அந்த வகையில் கட்சிக்குள் இருந்து வந்த முரண்பாடுகள் சிலவற்றையும் களைய முற்பட்டார். அந்த முயற்சி ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஓரளவு கை கொடுத்திருந்தாலும், முழுமையான வெற்றிக்கு அறிகுறியாக அமையவில்லை. மேலும், கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல் அந்தக் கட்சிக்குள்ளேயே வேறு போட்டா போட்டிகளும் முரண்பாடுகளும் தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலைமையில் தான் மீண்டும் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது பற்றிய செய்தி விறுவிறுப்படைந்துள்ளது. அதற்கான சில முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கருத்தையே லண்டனில் வைத்து தம்மைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்னாள் ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருப்பதாக செய் திகள் கூறுகின்றன. இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளாரா என்பதும் இன்னமும் தெரியவரவில்லை. எதிர்க்கட்சிகள் பொதுவேட்பாளர் ஒருவர் பற்றி ஒரு முடிவுக்கு வருகிறார்களோ இல்லையோ, ஜனாதிபதி ராஜபக்ஷவோ தமது பரப்புரைகளை ஏற்கனவே மும்முரமாக ஆரம்பித்து விட்டார். இந்தமுறை அவரது முழுக் கவனமும் இதுவரை அதாவது போர் முடிவுற்றதன் பின்னர் நாட்டுக்கு தாம் செய்துள்ள பணிகளை, குறிப்பாக அபிவிருத்திப் பணிகளையே மக்கள் முன் வைத்து வாக்கு கேட்கப் போகிறார் என்பது விளங்குகின்றது. அந்த வகையில் தான் அடுத்த சில தினங்களில் வடக்கு மாகாணத் துக்கும் வருகிறார். பல பணிகளை ஆரம் பித்து வைக்கிறார். முப்பது வருடங்களுக்குப் பின்னர் ரயிலும் யாழ்ப்பாணம் வருகிறது. அமைச்சர்கள் பட்டாளங்களும் வரப் போகின்றன. இதே பாணியில் ஏனைய பகுதிகளுக்கும் இந்தப் பரப்புரை விஸ்தரிக்கப்படும். ஆக, வரும் ஜனாதிபதித் தேர் தலில் எதிர்க்கட்சிகள் ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்து அறிவிக்கும் முன்னர் ஜனாதிபதி தனது பரப் புரை மூலம் தமது வெற்றிக்கான கள நிலைமைகளை தயார்படுத்தி முடித்து விடுவார் போல் இருக்கிறது. பார்க்கப்போனால் இது ஓர் ஆமை-முயல் ஓட்டப் போட்டி போல் இருக்கப்போகிறது. ஆமை யார்? முயல் யார்? என்பது பின்னர் தெரியவரும்.

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்துக்கட்ட வேண்டும்

பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட பேராசிரியர் நவரத்ன பண்டாரவின் ஒரு பார்வை

ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்ததையடுத்து, ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவர வுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவையே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டுமாயினும் அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதியொருவர் தமது பதவிக் காலத்தில் முதல் நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பின்னர் வேண்டுமானால் முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்த இயலுமென்ற வாய்ப்பொன்றையும் அரசமைப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இது அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி தமக்கு வெற்றி வாய்ப்புக்கான சூழல் நிலவும் வேளை யில் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பாகக் கொள்ளத்தக்கது.

ஊவா மாகாணசபைத் தேர்தலின் பின்னர் அரசின் ஆதரவாளர்கள் மனோரீதியான தோல்வி மனப்பான் மைக்கு உள்ளாகாத விதத்தில் வெகு விரைவாக ஜனா திபதித் தேர்தலை நடத்திவிட வேண்டுமென அரசு எண் ணுவதாகத் தோன்றுகிறது. ஒப்பீட்டளவில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசு வெற்றியீட்டியுள்ள போதிலும், ஒட்டு மொத்தத்தில் அரசின் வாக்கு வங்கி வீழ்ச்சி கண்டுள்ளமை தெளிவாகப் புலப்படுகிறது. எனவே நாட்டின் ஏனைய மாகாண சபைகளில் ஈட்டிய வெற்றியைப் பின்னணியாக்கி ஜனாதி பதித் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதற்கு அரசு தயாராகின்றது. அதுவுமன்றி அந்தத் தேர்தலுக்குத் தம்மைத் தயார் படுத்துவதற்கு எதிர்க் கட்சிகளுக்குக் கால அவகாசம் வழங்காத விதத்தில் குறுகிய கால அறிவிப் பொன்றின் மூலம் திடீர்த் தேர்தலொன்றை நடத்துவதே அரசின் நோக்கமெனத் தெரிகிறது.

அத்தகைய திடீர் ஜனாதிபதித் தேர்தலை நடத்து வதன்மூலம் செலவிடப்பட நேரும் பெருந்தொகை நிதி பொதுமக்களுக்கு மேலதிக சுமையாக அமைய நேரிடும். அதுவுமன்றி அத்தகைய தேர்தல் ஜுரம் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் சீர்குலைய வழிவகுக்கும். ஊவா மாகாண சபைத் தேர்தலின்போது அரச அதிகாரம், வளங்கள், அரச ஆதரவுத் தரப்பினரின் வன்முறைச் செயற்பாடுகள் பெருமளவில் அரசுக்கு ஆதரவு தேடும் விதத்தில் பயன்படுத்துப்பட்டதாக கடும் குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள் வெளிவந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவை யாவும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட வாய்ப்புண்டு.

இந்த நாட்டில் தேர்தல் என்பது ஜனநாயகத்தின் பெறுமதியை நாசமாக்கும், பொது மக்களது இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகவே இருந்து வருகிறது. பொதுமக்களைப் பொறுத்தவரை தேர்தல் என்பது வேண்டாத ஒன்றாக அமைந்துவரும் அதேவேளை, அரச தரப்பு அரசியல்வாதிகள் அதைத் தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாகவும், எதிர்க்கட்சியினர் எப்படியாவது அதிகாரத்தைப் கைப்பற்றிக் கொள்வதற்கான முயற்சியாகவும் நோக்குகின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்து தற்போது சமூகத்தில் தீவிர மடைந்துள்ளது. உலகின் ஏனைய நாடுகளிலுள்ள ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கும், எமது நாட்டிலுள்ள முறைமைக்கு நிறையவே வேறுபாடுகள் உள்ளன. இந்த நடைமுறையை எமது நாட்டில் அறி முகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். அபிவிருத்தியை வலுவாக்க நிறைவேற்று அதிகாரம் அவசியமெனக் கூறிவந்தார்.

அந்த வகையில் அபிவிருத்திக்கு முதலிடம் ஜனநாயகத்துக்கு அடுத்த இடமும் வழங்கும் வகையிலான அவரது போக்கு முதலாளித்துவக் கோணப் பார்வையாகும்.

ஆனால் அபிவிருத்தி என்ற பெயரில் ஜனநாயக வாதத் தைப் பின் தள்ளுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றல்ல.

இந்த நடைமுறையை இல்லாதொழிக் கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான பொ.ஐ.முன்னணி வாக்குறுதி வழங்கியிருந்தது. அதன் அடிப்படையிலேயே பொ.ஐ.முன்னணியால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் இவ்விதமே கூறி வந்ததுண்டு. இன்று ஐ.தே.கட்சியும் கூட தாம் பதவிக்கு வந்தால் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை ஒழிப்போம் எனக்கூறி வருகின்றது. ஆயினும் இந்த விடயத்தில் சகல அரசியல் கட்சிகளுமே நாட்டு மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றன.

இந்த நடைமுறை நிறைவேற்று ஜனாதிபதி யொருவருக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்கும் ஒரு நடைமுறையே. இதன் காரணமாக ஒரு தடவை இத்த கையை அதிகாரங்களை ஈட்டிக்கொள்ளும் தலைவரொருவர் ஒருபோதும் அவற்றைக் கைவிட விரும்புவதில்லை.

எதேச்சதிகார அரச அதிகாரத்துக்குப் பதிலாக பொது மக்களது கூட்டாட்சி நடைமுறையை ஏற்படுத்தும் நோக்கிலேயே பிரஞ்சுப் புரட்சி முன்னெடுக்கப் பட்டது. மிதவாத ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை இதன் மூலமே உறுதி செய்ய இயலுமென நம்பப்பட்டது. சட்டத்தைச் சக்திமிக்கதாக நடைமுறைப்படுத்தாவிட்டால், நாட்டில் அரச அதிகாரங்கள் பரவலாக்கப்படாவிட்டால் அந்த நாட்டில் ஜனநாயகம் செயற்படவில்லை என்பதே அர்த்தமாகுமென அவ்வேளை யில் குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்று இந்த நாட்டின் அரசமைப்பு மூலம் அதிகாரங்கள் ஒன்று திரட்டப்பட்டு ஒரு தனி மனிதரின் கைகளில் கையளிக்கப்பட்டுள்ளன.

இன்று இந்த நாட்டின் சட்டங்கள் வலுவிழுந்துள்ளன. அரச அதிகாரிகள் அதிகாரமற்றுப் போயுள்ளனர். அரசமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் உரிய வகையில் நிறைவேற்றப் படுவதில்லை. எனவே தற்போதைய அரசமைப்பு மாற்றி அமைக்கப்படல் வேண்டும். நிறைவேற்று அதிகாரம், அரச மைப்பு, நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து முன்னெடுக்கப்படும் நிலை இந்த நாட்டில் உருவாக்கப்பட் டுள்ளது. இந்த நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறையை ஒழிப்பதற்கான கோரிக்கையை செயற்படுத்துவது பிரச்சினைக்குரிய தொன்றே.

1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது நாட்டின் அச்சுறுத்தல், வன்முறை போன்ற செயற் பாடுகளுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் தன்னிச்சையான செயற்பாடுகளை விமர்சித்தே எதிர்க்கட்சிகளின் கொள்கைப் பிரகடனம் அமைந்திருந் தது. இன்றும் கூட அத்தகைய விமர்சனங்களும், எதிர்ப்புக்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெறவுள்ள சந்தர்ப்ப மொன்றிலேயே நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க வேண்டுமென்ற கருத்து முன்வைப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பலர் கருதுவதே இதற்கான காரணம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர் அதிகார ஒழிப்புக் குறித்து சிறிதேனும் அக்கறை காட்டமாட்டார் என்பது வரலாறு கற்றுத் தந்த பாடமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் எதிரணி சார்பான பொது வேட்பாளர் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதான வாக்குறுதியுடனேயே களத்தில் இறங்கியமை நாமறிந்ததொன்றே. இடம்பெற்ற அதிகார இழுபறிகளை நோக்கும்போது இந்த ஜனாதிபதி ஆட்சி நடைமுறை இலங்கைக்குப் பொருத்தமானது தானா என்ற பிரச்சினை எழுகிறது. பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த நடைமுறையூடாக அதிகாரங் களைப் பகிர்ந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதால் அந்த நாடுகளில் இந்த நடைமுறை வெற்றிகரமாக செயற்படுத்தப் படுகிறது. ஏன் இந்தியாவில் கூட அண்மையில் தமிழ் நாடு முதலமைச்சர் சொத்து சேர்ப்பு வழக்கில் குற்றவாளி யெனத் தீர்ப்பளிக்கும் திறன் இந்திய நீதி மன்றுக்கு வாய்த்திருந்தது. ஆனால் இலங்கையில் இது பின்னடைவு நிலையிலேயே உள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தில் புத்திஜீவிகள் சமூகமே தீவிர அக்கறை காட்டுகிறது. சாதாரண பொதுமக்கள் தரப்பினரோ நாட்டை நிர்வகிக்கத் தக்கதொரு தலைவர் குறித்தே அக்கறை காட்டுகிறார்கள். அந்தளவுக்கு அவர்களது அரசியல் அறிவு ஒரே இடத்தில் ஸ்தம்பித்துப் போயுள்ளது.

அவர்களுக்கு அரசியல் நடை முறையின் நன்மை தீமைகுறித்து தெளிவுபெறவைக்கும் அரசியல் விவாதங்களோ, செயலமர்வுகளோ இடம்பெறுவதில்லை. ஆனால் நாட்டின் பொதுமக்கள் ஜனாதிபதி ஆட்சி நடைமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதில் இன்று ஓரளவு தெளிவு பெற்றுள்ளனர். ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நடைமுறையை அத்தகைய அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஒருவர் மூலம் எவ்வாறு ஒழிக்க முடியும் என்பதில் தான் பிரச்சினையே உள்ளது.

தேர்தல் வேளையில் நாட்டை நிர்வகிக்கத் தக்கதொரு தலைவர் அவசியமே என்ற மனநிலையில் வாக்காளர்கள் செயற்படுவதற்குக் காரணம் நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே ஆகும்.

ஆனால் வெளிநாட்டுச் சக்திகள், மேலாதிக்க வாதம் என்பன இன்று இந்த நாட்டின் எதிரிகளாக ஆகியுள்ளதாக சிங்களச் சமூகத்தினர் கருதுகின்றனர். இதனாலேயே நாட்டைப் பாதுகாக்க நிறைவேற்று அதிகாரம் கொண்டதொரு தலைமைத்துவம் அவசியம் என்ற நம்பிக்கை சிங்கள மக்களது மனங்களில் வளர்க்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிப்தி நடைமுறையை ஒழிப்பதற்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்ட வேட்பாளருக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 40 லட்ச வாக்குகள் கிட்டின. அது குறித்து நாட்டின் சாதாரண பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டால், அதற்கான ஆதரவு பெருமளவில் அதிகரிக்க வாய்ப்புண்டு.

எஸ்.ராஜாராம்

# மாற்றம் வருமா?

ஸ்கொட்லாந்து காட்டிய வழியில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தத் தயாராகிறது நியூஸிலாந்து. பிரிட்டனிலிருந்து பிரிந்து தனி சுதந்திர நாடாக வேண்டுமா, பிரிட்டனுடனேயே தொடர வேண்டுமா என ஸ்கொட் லாந்து வாக்கெடுப்பு நடத்தியது.
அதே பிரிட்டனின் அடையாளத்தை தனது தேசியக் கொடியிலிருந்து பிரிக்க வேண்டுமா? கூடாதா? என வாக்கெடுப்பு நடத்தவுள்ளது நியூஸிலாந்து. அந்தவகையில், இந்த இரண்டு வாக்கெடுப்புக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. ஊழல் குறைந்த நாடுகளுள் ஒன்று, கிரிக்கெட் விளையாடும் நாடுகளுள் ஒன்று என்று மட்டுமே பரவலாக அறியப்பட்ட நியூஸிலாந்தும் ஒரு காலத்தில் பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தில் இருந்த நாடுதான். பிரிட்டனின் ஆதிக்கத்துக்குட் பட்டதில் இருந்து கடந்த 122 ஆண்டுகளாக நியூஸிலாந்து நாட்டு தேசியக் கொடியில் பிரிட்டனின் யூனியன் ஜாக் அடையாளம் இன்றுவரை தொடர்கிறது. பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னரும் பிரிட்டனின் காலனி நாடு என்ற தோற்றத்தைத்தான் இந்தக் கொடி பிரதிபலிக்கிறது. நவீன நியூஸிலாந்தை பிரதிபலிக்கவில்லை என ஒரு தரப்பு மக்கள் கருதுகின்றனர்.
சுதந்திரமான நியூஸிலாந்தைப் பிரதிபலிக்கும் வகையில் கொடியை மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்து சுமார் 10 ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இருப்பினும், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜான் கீ இந்த விடயத்தை கையிலெடுத்த பின்னர் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக அந்நாட்டுப் பிரதமராக கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொறுப்பேற்றதுமே, மீண்டும் இந்த விவகாரம் குறித்துப் பேசினார் ஜான் கீ. 122 ஆண்டுகளாக நம் நாட்டுக் கொடியில் இடம் பெற்றுள்ள பிரிட்டனின் யூனியன் ஜாக் அடையாளம் தொடர வேண்டுமா என்ற விடயத்தில் மக்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.




இதற்காக அடுத்த ஆண்டு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஜான் கீ அறிவித்தார். கறுப்பு நிற பின்னணியில் வெள்ளை நிற இலைகளுடன் கூடிய கொடியை ஜான் கீ பரிந்துரை செய்கிறார். இதையே இப்போதைய நியூஸிலாந்து விளையாட்டு அணிகள் பயன்படுத்துகின்றன.
இதுபோல மேலும் பல வடிவமைப்புகளும் தயாராக இருக்கின்றன. புதிய கொடியை வடிவமைப்பதற்காக போட்டியே நடத்தப்பட்டுள்ளது.
ஒரு சுதந்திர நாடு தனக்கு ஏற்றாற்போல தேசியக் கொடியை வடிவமைப்பதில் என்ன பிரச்சினை இருக்கப்போகிறது என்று தோன்றலாம்.
ஆனால், பிரிட்டனின் அடையாளத்தை ஏன் எதிர்க்க வேண்டும்? ஏன் தொடர வேண்டும் எனப் பல்வேறு கருத்துப் பிரதிவாதங்கள் ஸ்கொட்லாந்தைப் போலவே இங்கும் உள்ளன. நியூஸிலாந்தின் தேசியக் கொடி, ஆஸ்திரேலியாவின் தேசியக் கொடி போன்றே இருக்கிறது. இது பலரை குழப்பமடையச் செய்கிறது. 1984ஆம் ஆண்டு, அப்போதைய ஆஸ்திரேலிய பிரதமர் பாப் ஹாகே ஒட்டாவா நகருக்குச் சென்றபோது, கொடிக் குழப்பத்தால் ஆஸ்திரேலிய கொடிக்குப் பதிலாக நியூஸிலாந்து கொடி காட்டப்பட்டு வரவேற்கப்பட்டார்.
இப்போதைய கொடி நியூஸிலாந்தின் பாரம்பரியத்தைப் புறக்கணிக்கிறது என்பது எதிர்ப்பாளர்களின் வாதம். ஐக்கிய பிரிட்டனுடனான நியூஸிலாந்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவை இந்தக் கொடி பிரதிபலிக்கிறது. பல போர்களில் நியூஸிலாந்து நாட்டு வீரர்கள் இந்தக் கொடியின் கீழ்த்தான் போரிட்டு, உயிர் துறந்துள்ளனர் என்பது கொடி தொடர வேண்டும் என்ற ஆதரவாளர்களின் வாதம். தேசியக் கொடியை மாற்றி அமைக்க வேண்டுமா என இதற்கு முன்னர் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் கொடி அப்படியே தொடர வேண்டும் என்பதே பெரும்பான்மை கருத்தாக இருந்துள்ளது.
இருப்பினும் இப்போது கொடியை மாற்றுவதில் நாட்டின் பிரதமரே உறுதியாக இருப்பதால் கருத்து வாக்கெடுப்பில் முடிவு மாறக்கூடும்.
மேலும், பிரிட்டனின் காலனி ஆதிக்க அடையாளத்தை நீக்கும் வகையில், கனடா தனது தேசியக் கொடியில் பிரிட்டனின் யூனியன் ஜாக் அடையாளத்தை எடுத்துவிட்டு கொடியை மாற்றி வடிவமைத்துள்ளதை முன்னுதாரணமாகக் காட்டுகிறார் ஜான் கீ. சுமார் 45 லட்சம் மக்கள் தொகை கொண்ட நியூஸிலாந்து ஒரு கருத்து வாக்கெடுப்புக்குத் தயாராகிறது: மாற்றத்துக்கான நேரம் வந்துவிட்டதாக அந்நாட்டு ஊடகங்களும் கருத்துத் தெரிவிக்கின்றன. ஸ்கொட்லாந்து வாக்கெடுப்பில் பிரிட்டன் வென்றது. ஆனால், நியூஸிலாந்து வாக்கெடுப்பில் பிரிட்டன் வெல்லுமா என்பது கேள்விக்குறியே!

# மதுவை மறப்போம்! மனிதராயிருப்போம்

மிருசுவில் தமிழ்தாசன்

இந்த மண்ணில் வாழும் சகல ஜீவராசிகளுக்கும் ஐந்தறிவைக் கொடுத்த இறைவன் ஏனோ உங்கள் மானிடப் பிறவிக்கு மட்டும் ஆறு அறிவைக் கொடுத்திருக்கின்றான். எனவே, மனிதனாகப் பிறந்தவன் ஏனைய உயிரினங்களுடன் ஒப்பிடும் பொழுது உயர்ந்தவனாகவே காணப்படுகின்றான். மனித இனத்துக்கென்று மேலதிகமாகத் தரப்பட்ட இந்த ஆறாம் அறிவையே பகுத்தறிவு என்கிறோம். விலங்குகள் மற்றும் உயிரினங்களைவிட மனிதன் மேலானவன் என்று எங்களுக்குள்ளேயே பெருமை பீற்றிக் கொள்கின்றோம். ஆனால் நாங்கள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் எத்தனை பேர் மனிதர்களாக வாழ்கின்றார்கள் என்னும் கேள்வி எழுந்தால் அதற்கு விடையளிப்பது மிகவும் கடினமானதொரு விடயமாகத் தானிருக்கும். "மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான். ஆனால் மனிதனாக வாழ மட்டும் மனிதனுக்குத் தெரியவில்லை" என்றொரு அருமையான திரைப்படப் பாடல் வரிகள் மூலம் மேற்படி வினாவுக்கு விடை பகரலாம்.
**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்- வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".**
மனிதன் ஒன்றும் அந்தளவுக்கு உயர்ந்து தெய்வமாக வேண்டாம். மனிதன் மனிதனாக வாழ்ந்தாலே போதும். நாம் இப்போதும் கற்காலத்தில் வாழவில்லை. பொற்காலத்திலே வாழ்கின்றோம். கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்பவைகளுடன் விஞ்ஞானம் ஏற்படுத்தித் தந்த தொழில்நுட்ப வசதிகளென்று சகல துறைகளிலும் உயர்ந்தே நிற்கின்றோம். இருந்தும் அந்த உயர்ச்சி எங்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியைத் தருகின்றதா என்பது இங்கே ஒரு முக்கிய கேள்வியை எழுப்புகின்றது. இவைகளுக்குப் பதில் தேட வேண்டிய தேவை பொதுவாக எங்கள் அனைவருக்கும் இருக்கின்றது.
மனிதன் இந்தப் பூமியில் பிறந்தது தர்மம் செய்வதற்கே என்று ஆன்றோர்கள் கூறிவிட்டுச் சென்றுள்ளனர். ஆனால் இப்போதைய எமது காலப் பகுதியில் அவன் அறம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை பாவம் செய்யாதிருந்தாலே போதுமென்று சொல்ல வைக்க வேண்டியளவுக்கு நிலைமை ஆகிவிட்டது. பாவங்கள் செய்யாமல் யாருமில்லை. ஏதோ ஒரு வகையில் தெரிந்தோ, தெரியாமலோ பாவங்களைச் செய்து கொண்டு தானிருக்கின்றோம். இதற்குக் காரணங்களுமில்லாமல் இல்லை.
கொலை, களவு, கள், காமம், சூது என்ற இந்த ஐந்து செயல்களையும் பஞ்சமா பாதகங்கள் என்று எமது முன்னோர்கள் வகுத்திருக்கின்றனர். இந்த ஐந்து கொடிய பாவங்களை வகைப்படுத்திப் பார்ப்போமானால் முதலிடத்தை வகிக்க வேண்டியது கள். இது மதுபானத்தைக் குறிப்பது.
மதியை மயக்குமிந்த மதுபானத்தை ஒருவன் அருந்தி விட்டானென்றால் அடுத்துவரும் பாவங்கள் அனைத்தையும் அஞ்சாது கூசாது செய்தே முடிப்பான். மது என்னும் இந்தக் கொடிய அரக்கன் உட் சென்றதும் மனிதன் தனது சுய உணர்வை இழக்கின்றான். எனவே பஞ்சமா பாதகங்களைச் செய்வதற்கு இந்த மதுவே அடிப்படைக் காரணமாகின்றது என்று அடித்துச் சொல்லலாம்.
எமது தமிழ்க் கலாசார விழுமியங்கள் ஓங்கி உயர்ந்து வாழ்ந்த எமது யாழ்.மண்ணில், உலகம் முழுவதும் எம்மைப் பார்த்து வியந்து பாராட்டிய தமிழ் மண்ணில் நடந்தேறிக் கொண்டிருக்கும் கலாசார சீர்கேடுகளுக்கெல்லாம் மூல காரணம் என்ன? நிச்சயமாக மதுவே காரணம்.
தற்போதைய கால கட்டத்தில் எமது யாழ். மண்ணின் வாழ்வியலைப் பற்றிச் சற்று ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமாயிருக்கும். தேநீர்க் கடைகள் மற்றும் உணவகங்களுக்குப் போட்டியாக மதுபானக் கடைகள் காலையிலே திறக்கப்படும். அதற்குரிய நேரம் காலை ஒன்பது மணியாயிருந்தாலும் சில கடைகள் சற்று நேரத்துடனேயே திறக்கப்படுவதும் கண்கூடு. வேளைக்கே வந்து காத்திருக்கும் வாடிக்கையாளர்கள் நீயோ, நானோ என முந்தி ஏராளமாகக் காசைக் கொடுத்து அந்த மதுவை வாங்கிப் பருகுவது சிலருக்கு மிக ஆனந்தமானதொன்று. அதிகமான பணத்தைச் செலவு செய்து அந்த மதுவை வாங்கி ருசித்து ரசித்துப் பருகுகின்றார்களோ என்றால் அதுவுமில்லை. வாயைச் சுளித்துக் கோணலாக்கி கண்களை மூடி மிகவும் சிரமப்பட்டே பருகுவார்கள். இதில் என்னதான் சந்தோஷத்தை அனுபவிக்கின்றார்களோ அந்தப் பரம்பொருளுக்கே வெளிச்சம்.
மது என்னும் அந்தப் பஞ்சமா பாதகச் செயலை ஆரம்பித்து விட்டால் அடுத்தவை அனைத்தும் ஒழுங்காகவே நடக்கும். காலையில் தினசரியைப் புரட்டினால் கலாசார சீரழிவுகள் பற்றிய செய்திகளே ஏனைய செய்திகளை ஓரங்கட்டிவிட்டு உங்கள் பார்வைக்குள் வந்துவிழும். இவை போன்ற செய்திகள் பிரசுரமாவது ஒன்றும் புதுமையல்ல. இவைகள் பிரசுரிக்கப்படாவிட்டால் தான் புதுமை. "என்னப்பா அடிதடி வெட்டுக் கொத்து ஒண்டையும் காணயில்லையே" என்று ஆச்சரியப்படுகின்றோம்.
அந்தளவு மது அரக்கனின் லீலைகளினால் சமூகம் மெல்ல மெல்ல அழிந்து கொண்டே போகின்றது. மதுப்பழகத்துக்கு அடிமையாகும் ஒருவன் தனக்கு மட்டுமல்ல, தன்னுடைய குடும்பத்துக்கு மாத்திரமல்லாது முழுச் சமூகத்தையுமே சீரழிக்கின்றான். இன்றைய நவநாகரிக யுகத்தில் மாணவர் முதல் இளைஞர்கள், வயது வந்தவர்கள் அனைவருக்குமே வயது வேறுபாடின்றி மது ஒரு அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. இன்று தன்னிடம் பணவசதியிருக்கும்போது மது அருந்தும் ஒருவன், நாளை பணவசதியில்லையென்றவுடன் அடுத்தவனிடம் கடன்படுகின்றான். முடியாதவிடத்து யாரையோ ஏமாற்றித் தனது காரியத்தை நிறைவேற்றிக் கொள்கின்றான். அதுவும் முடியாவிட்டால் திருடியாவது மது அருந்தியே ஆவான். அந்த அடிமைக்கு விடுதலையில்லை.
மதுப் பழக்கத்தில் ஊறிப்போன ஒருவன் தான் மது அருந்துவதற்கு ஏதேதோ காரணங்களைக் கூறுவான். பொழுது போக்குக்காக, மகிழ்ச்சிக்காக, தீராத் கவலையை மறப்பதற்காக, நோயின் உபாதையைக் கட்டுப்படுத்துவதற்காக என்று ஏதேதோ சொல்லி மழுப்புவான். இவைகளெல்லாம் வெறும் மாயைகள். உண்மை என்னவென்றால் இந்தக்கொடிய பழக்கத்தை அவ்வளவு எளிதில் மறக்கவோ துறக்கவோ முடிவதில்லை. எனவே அவன் என்ன செய்வான் பாவம்! இப்படியே வாயில் வந்தவைகளைச் சொல்லித் தன்னையேதான் ஏமாற்றிக்கொள்கின்றான். வேறுவழிதான் என்ன?
மதுப் பழக்கத்துக்கு ஆளாகியிருக்கும் ஒருவனை சமூகத்தில் யாருமே விரும்புவது இல்லை. பெற்றோர், சகோதரர், உற்றார், உறவுகள், கட்டிய மனைவி, பிள்ளைகள் ஏன்? மொத்தச் சமூகத்தாலும் ஒதுக்கப்பட்டவன் ஆகின்றான். விவரமறிந்த எந்தப் பெண்ணும் இவனை விரும்பவோ காதலிக்கவோ மாட்டாள். எனவே அவன் சமுதாயத்தால் நிராகரிக்கப்பட்ட ஒருவனாகவே வாழவேண்டியுள்ளது. அப்படி எத்தனை காலம் தான் வாழலாம். இறுதியில் தற்கொலையில் கூட முடியலாம்.
இத்தனை கெடுதிகளைக் கொண்ட மது எமக்குத்தேவைதானா? எமது பகுத்தறிவுக்கு வேலை கொடுத்து இந்தப் பொல்லாத பழக்கத்து ஆளாகாமல் சமூகத்தில் நல்லதொரு பிரசையாக வாழ வேண்டியது எமது இளையவர்களின் மிகப் பெரிய தேவையாகின்றது. அதேபோல இந்தப் பழக்கத்துக்கு ஏற்கனவே ஆளாகி இதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புபவர்கள் உண்மையை உணர்ந்து தப்பித்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து மனதார விடுபட விரும்புபவர்கள், உண்மையிலேயே இதைப் பழகியமைக்காக உளம் நொந்து வருந்துபவர்களுக்கு எத்தனையோ உளவழிச் சிகிச்சை நிலையங்களிருக்கின்றன. சிகிச்சை நிலையங்களிருக்கின்றன. இவைகளெல்லாவற்றையும்விட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் போதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், உளவழி ஆலோசனைகள் வழங்கி அவர்களை அரவணைத்து ஒரு புதிய வாழ்க்கையைக் கொடுப்பதற்காக இருக்கவே இருக்கின்றது 'குருந்தகம்' என்னும் நிலையம். உங்கள் இருண்ட வாழ்க்கைக்கு ஒளியூட்ட உங்கள் மனங்களில் மாற்றங்கள் பிறக்கட்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறுவீர்கள். எண்ணிய காரியங்களைத் திறமையாகச் செய்து முடிப்பீர்கள். பண வரவும் இருக்கும். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும்.



**இடபம்**: தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். பழைய மிகுதிகள் கிடைப்பதில் தாமதமாக இருந்தாலும் பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.



**மிதுனம்**: அயலில் உள்ளோரிடம் கவனமாகப் பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது. சில முக்கியமான காரியங்களை கூடுதலாக கவனம் செலுத்துவதன் மூலமும் அதிக உழைப்பினாலும் செய்து முடிப்பீர்கள்.



**கடகம்**: சொன்ன சொல்லை எப்பாடுபட்டும் காப்பாற்றுவீர்கள். தைரியமாக எதையும் செய்யத் தூண்டுவர். உங்களது செயல் களால் உங்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபடுவீர்கள்.



**சிங்கம்**: பூர்வீக சொத்துக்கள் மூலம் வருமானம் இருக்கும். எதைப்பற்றியும் கவலைப்படாமல் தொழில், வியாபாரத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கலின்றி எதையும் செய்து முடிப்பார்கள்.



**கன்னி**: ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். உங்களது பொருள்களின் மீது கவனம் தேவை. சாதுரியமான செயல்களால் லாபம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு சிறப்பாகச் செய்வீர்கள். பெரியவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



**துலாம்**: தடங்கல் இன்றி எல்லாக் காரியத்தையும் முடிப் பீர்கள். எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாகக் கிடைக்கும். ஒதுங்கி இருந்தால் கூட வலுக்கட்டாயமாக எதிலாவது ஈடுபட சுற்றமும், நட்பும் தூண்டுவார்கள். கவனமாக அதை தவிர்ப்பது நல்லது.



**விருச்சிகம்**: எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வீண் அலைச்சல், செலவு ஏற்படலாம். பயணங்களின்போது எச்சரிக்கை தேவை. புதிய முயற்சிகள் காலதாமதமாக முடியும், உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கும்.



**தனுசு**: குடும்பத்தில் அமைதி ஏற்பட குடும்ப உறுப்பினர்களிடம் நிதானமாகப் பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது. அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மை தரும். வீண் அலைச்சலும், செலவும் உண்டாகலாம். கவனம் தேவை.



**மகரம்**: எதிலும் தடை, தாமதம் உண்டாகலாம். கவனம் தேவை. கவலைகளை வெளிக்காட்டாமல் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பார்த்த காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.



**கும்பம்**: முக்கிய நபர்களின் நட்புக் கிடைப்பதுடன் அவர்களால் நன்மை யும் உண்டாகும். அடுத்தவரைப் பற்றி எந்தப் பேச்சும் பேசாமல் இருப் பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக எதையும் செய்வது நல்லது.



**மீனம்**: வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை இருக்கும். ஒரு நல்ல குறிக்கோளுக்காக புண்ணிய பயணம் செய்ய வேண்டி இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். அடுத்தவரைப் பற்றி எந்தப் பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது.

## நாளை

**புரட்டாதி-22 புதன்கிழமை | 08.10.2014**

திதி: பூரணை மா.05.12 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
மு.ப.10.25 வரை

சுபநேரம்:04.32-06.02 வரை
இராகுகாலம்:12.02-01.32 வரை
பூரணை விரதம், போயா


# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தியானம் எம்மை பக்குவ நிலைக்கு கொண்டு வருகிறது

இயற்கை கூப்பிடும் குரலுக்குநாங்கள்பதில்சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். வெளியில் ஒலி கேட்டால் நாங்கள் அதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். ஏதாவது நடந்தால் நாங்கள் அதைப் பார்த்துத் தான் ஆகவேண்டும். நாங்கள் குரங்குகளைப் போல இருக்கிறோம். குரங்குகள் எதையும் தெரிந்து கொள்ள ஆவல் உள்ளவை. இதை நாங்கள் இன்புறுவது என்கிறோம். நாங்கள் உலகத்தை அனுபவித்து இன்புறுகிறோம் என்று சொல்கிறோம். இன்புறாமல் எம்மால் இருக்க முடியாது. அப்படி செய்யும்படி இயற்கை எம்மைத் தூண்டுகிறது. ஒரு மதுரமான ஒலியை நான் கேட்கிறேன். கேட்பதோ கேட்காமல்இருப்பதோ எமதுவிருப்பத்தில் உள்ளது போல எண்ணுகிறோம். இயற்கை, துயரின் ஆழத்துக்குப்போ என்று சொல்கிறது. ஒரு நொடியில்நான்துயர் அடைகிறேன். எமது புலன்களின் இன்பத்தைப் பற்றியும் எமது உடைமைகள் பற்றியும் பேசுகிறோம். என்னைப் பற்றி ஒருவன் இவர் மிகுந்த அறிவாளி என்று நினைக்கிறான். இன்னொருவன் இவர் ஒரு முட்டாள் என்று நினைக்கிறான். ஒன்றும் அறியாமல் இந்தச் சீரழிவு இந்த அடிமைத்தனம் என்ற இருட்டறையில் நாங்கள் தலையோடு தலையை மோதிக் கொள்கிறோம். இவை எல்லாவற்றையும் தவிர்க்கும் சக்தி யைக் கொடுப்பது தான் தியானம். நாங்கள் கடவுளைப்பற்றித்தியானம்செய்ய ஆரம்பிக்கிறோம். தியானத்தினால் தான் இவற்றை நிறுத்த வேண்டும். பிரார்த்தனைகள், மலர்கள், உருவங்கள், கோவில்கள், தீபாராதனைகள் போன்ற சடங்குகள் மனத்தைப் பக்குவ நிலைக்கு கொண்டு வருகின்றன. ஆனால் அந்தப் பக்குவ நிலை மனித ஆன்மாவில் தான் உள்ளது. வேறு எங்கும் இல்லை. தியானத்தின் சக்தியால் ஆன்மா ஆழத்தில் இருந்த தனது அறிவை தானாகவே அடைகிறது. இறுதியில் தியானத்தின் சக்தி எம்மை எம்முடைய உடலிலிருந்து பிரிக்கிறது. தான் என்றும் பரிபூரணமாகவும் சுதந்திரமாகவும் உள்ளதை ஆன்மா அறிகிறது. இனித் துன்பம் இல்லை.

# உயிர் வாழத் தேவையான ஒட்சிசனை உறிஞ்சும் பொருள்



உயிர் வாழத் தேவையான ஒட்சிசனைச்சேமித்துதேவைப் படும்போது பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான புதிய வகை பொருளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தெற்கு டென்மார்க் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதுகுறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு தற்போது தங்களது இலக்கை எட்டியுள்ளனர்.

இதுகுறித்து அந்த விஞ்ஞானிகள் கூறியதாவது:

படிகத்தன்மை கொண்ட அந்தப் பொருளின் அணுக்களில் ஒட்சிசன் நிரப்பப்பட்டு தேவைப்படும் போது அதில் உள்ள ஒட்சிசனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒரு தேக்கரண்டி அளவுள்ள இந்த பொருள் ஓர் அறையில் உள்ள மொத்த ஒட்சிசனையும் உறிஞ்சும் என்று விஞ்ஞானிகள் கூறினர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 7 | 1 | 9 | 5 | 2 | 8 | 4 |
| 9 | 5 | 8 | 4 | 7 | 2 | 1 | 6 | 3 |
| 1 | 4 | 2 | 6 | 8 | 3 | 7 | 9 | 5 |
| 7 | 1 | 3 | 9 | 2 | 6 | 5 | 4 | 8 |
| 8 | 2 | 5 | 3 | 1 | 4 | 9 | 7 | 6 |
| 4 | 9 | 6 | 8 | 5 | 7 | 3 | 1 | 2 |
| 2 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 | 3 | 7 |
| 5 | 3 | 4 | 7 | 6 | 9 | 8 | 2 | 1 |
| 6 | 7 | 1 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | 9 | 4 | | |
| | | 8 | | 5 | 1 | | 9 | 3 |
| 5 | | | | 3 | | 2 | 1 | |
| 8 | 6 | | | | | | 4 | |
| 9 | | 3 | | 1 | | 6 | | 8 |
| | 7 | | | | | | 2 | 9 |
| | 3 | 6 | | 9 | | | | 4 |
| 7 | 4 | | | 8 | | 1 | | |
| | | 5 | 1 | | 6 | | | |

## உடனடி வேலை வாய்ப்பு

### சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை

எமது நிறுவனத்தினால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடுவதற்கு ஆண்/பெண் தொழிலாளருக்கான வெற்றிடம் உள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களுக்கு தொழிலாளர் தேவை.

சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலை செய்வதற்கு 45 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி பெயர், வேலை செய்ய விரும்பும் மாவட்டம், நற்சான்றிதழ் பத்திரம், கற்ற கல்வி தகைமை என்பனவற்றை குறிப்பிடவும்

விண்ணப்பங்கள் 20.10.2014 ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி

மனித வள முகாமையாளர்
கிளீன்வெல்(பிறைவேட்) லிமிட்டெட்
இல 154, 1ஆம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்.

## கிளி. நீதிமன்ற நேற்றைய வழக்குகள் நவ.10 இல்

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சி நீதிவான் நீதி மன்றத்தில் நேற்று நடைபெற இருந்த வழக்குகள் பொது விடுமுறை என்பதால் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறி வித்துள்ளார். குறித்த வழக்குகள் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என்று நேற்றைய உதய னில் தவறு தலாக பிரசுரமாகியிருந்தது. (வ-18)

## விவசாயக் குழுக்கூட்டம்

கிளிநொச்சி, ஒக்.7

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. கிளிநொச்சி அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட் டத்தில் காலபோக நீர்ப்பாசன அட்டவணை விடயங்கள் வெளி யிடப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (வ-18)

### மணமகள்தேவை

இஸ்லாம், 55 வயது, தொழில்புரியும் (பெயின்டர்) தாரம் இழந்த ஒருவருக்கு வடமாகாணம்/மலையகத்தில் உள்ள மணமகள் தேவை. விதவைகளும் தொடர்பு கொள்ளலாம். சாதி, மதம் பார்க்கப் படமாட்டாது. தொடர்பு : 0713648210

### A/L 2004 ALUMNI வழங்கும் புலமைப்பரிசில் 2015
### St John's College - Jaffna

நேற்றைய (06.10.2014) உதயனில் 05ஆம் பக்கத்தில் வெளியான ST.John's College இன் மேற்படி விளம்பரம் தொடர்பாக A/L 2014 Alumni என தலைப்பில் தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. அதனைத் திருத்தி A/L 2004 Alumni என வாசித்து புலமைப் பரிசில் பெறவிரும்புவோர் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

A/L 2004 ALUMNI FUND
St JOHN'S COLLEGE
JAFFNA.

மேலதிக விவரங்களுக்கு:
077 656 9601
இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சை - 2014
பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்த மாணவச் செல்வங்களான



| சி.வசிஷ்ரா | சூ.வேணுசன் | பா.டிபானன் | உ.தரணிகா | தி.கிரிதரன் | வே.ஜிந்துசா |
|---|---|---|---|---|---|
| 181 | 178 | 171 | 165 | 165 | 164 |

இவர்களுடன் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றமாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| 1. த.அபிசன் | - 146 | 7. இ. கோபிரம்மியா | - 130 |
| 2. இ. தசாயினன் | - 145 | 8. ப. விதுர்சன் | - 126 |
| 3. பா. சுலக்சன் | - 141 | 9. ம. சுபேதிகா | - 126 |
| 4. சி.பானுசன் | - 137 | 10. ஜே. லதாங்கன் | - 111 |
| 5. சி. கிருஷன் | - 135 | 11. தி. விதுர்ஷா | - 103 |
| 6. து. அக்சனா | - 130 | 12. கா.பவிதா | - 101 |

ஆகியோரையும் இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

பாடசாலைச் சமூகம்
(5297)(10) யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை

## சாரணர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். மாவட்ட பாட சாலைகளிலுள்ள ஜனா திபதி விருது பெற்ற சாரணர்கள், பிரதம ஆணையாளர், விருது பெற்ற சாரணர்கள், திரி சாரணர்கள், சிரேஷ்ட சாரணர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோபால் லேன், வண் ணார்பண்ணையில் அமைந்துள்ள சார ணர் தலைமைக் காரி யாலயத்தில் ஒன்று கூடும்படியாழ். மாவட்ட சாரணர் ஆணையா ளர் செ.தேவறஞ்சன் கேட்டுள்ளார். (ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்



செல்வன்
சதீஸ்குமார் பிரசாந்

எமது பாடசாலையில் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தி மாவட்ட நிலையில் 12ஆவது இடத்தையும், தென்மராட்சி வலயத்தில் 2ஆம் இடத்தையும் பெற்று எமது பாடசாலைச் சமூகத்துக்கு பெருமை தேடித் தந்த மாணவனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வலயமட்டச் சித்தி பெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| செல்வி. ம. மிதுஷிகா | - 154 புள்ளிகள் |
| செல்வன் கு. விஜயசாந் | - 142 புள்ளிகள் |
| செல்வன் க. லக்ஷன் | - 139 புள்ளிகள் |
| செல்வன் சி. நேருஜன் | - 138 புள்ளிகள் |
| செல்வன் ச. லவேந்திரன் | - 116 புள்ளிகள் |
| செல்வி ப. நிந்தியா | - 089 புள்ளிகள் |

Best Wishes

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செபமாலை பீற்றர் பியன்வெனு
(Trained (maths), B.A)

நேற்று (06.10.2014) தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற சிறந்த ஆசிரியருக்கான

பிரதீபா பிரபா

விருதினைப் பெற்ற எமது கல்லூரியின் பகுதித்தலைவரும், கணிதபாட இணைப்பாளரும் ஆகிய செபமாலை பீற்றர் பியன்வெனு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், எதிர்காலத்தில் சேவையில் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

(52968 12.3.6)

Best Wishes

ஆசிரியர் கழகம்,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

### கடைக்கட்டடம் விற்பனைக்கு

புத்தூர் நவக்கிரி பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய தொடராக வுள்ள மூன்று கடைக்கட்டடம் உடன் விற்பனைக்கு.

தொடர்பு-071834908

(52965)

### நியூ வீணாகானம் இசைமன்றம்

வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், கீபோட், கிற்றார் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்பு- 0776238467
16/2 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(52969)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி ஜெகந்தன் கவின்சியா


2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளைப் பெற்று பாட சாலையில் முதல் மாணவியாக சித்தி யடைந்த அச்சுவேலி ஆரம்ப பாட சாலை மாணவி செல்வி ஜெகந்தன் கவின்சியா அவர்களை பாராட்டி வாழ்த்து வதுடன் இவரின் கல்வி வளர்ச்சியில் பங்கு கொண்ட யா/கொடிகாமம் திரு நாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், அச்சுவேலி ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இவர் மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டுமென இறைவனை வேண்டகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: அம்மப்பா-சி.சபாரத்தினம்(J.P),
அம்மம்மா-பிறேமவதி
மாமா- புவிதாஸ் (பிரான்ஸ்), அத்தை-தமயந்தி,
அப்பா-அம்மா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

மகேந்திரநாதன் சந்திரமோகன்
கரணவாய்-கரவெட்டி.

திருமதி அருணா சந்திரமோகன்
புலோலி கிழக்கு-பருத்தித்துறை.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 29.09.2014 இல் நடைபெற்ற பேரா தனைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலே "கலைமாணி" பட்டத்தைப் பெற்றுக் கொண்ட திரு. மகேந்திரநாதன் சந்திரமோகன், திருமதி அருணா சந்திரமோகன் ஆகியோர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அவர் களைப் பாராட்டி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பொறியியலாளர்கள்,
தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், நிதி உதவியாளர்,
பணியாளர்கள்.

ALVAI
SUNDA CONSULTANT
ENGINEERS AND CONTRACTORS.

## தேவை

**1.மேற்பார்வையாளர் (Supervisor)**

35 வயதுக்கு உட்பட்ட சிங்களம் பேசத் தெரிந்த சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்.

**2.விற்பனைப் பிரதிநிதிகள்**

75 வீதம் பொருட்கள் விற்பனை செய்ப வர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ரூபா 15000/= உம்,125 வீதம் பொருட்கள் விற்பனை செய்பவர்களுக்கு ரூபா 25000/= உம், அத்துடன் தரகுக்கட்டணமும் வழங்கப்படும்.

★உணவு, இருப்பிடம் இலவசம்.
★ஆண், பெண் இருபாலாரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

சுஜித் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

0212270586

(சி/16795)

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

வ.சுகாருஷா - 166    ர.றோஜன்-158

எமது பாடசாலையில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் 100புள்ளிகளுக்கு மேல் பெற்ற 12 மாண வர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை உயர்வடையச் செய்த அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். பாடசாலையின் வளர்சியில் தம்மை அர்ப்பணித்து உழைக்கும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்தின வாழத்துக்களை கூறி நிற்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம்-

**காணி விற்பனைக்கு**

களவாவோடை ஏழாலையில் 6 பரப்புக் காணி, வீடு, பயிர் என்பவற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு-0773036850

# வரணி உப தபாலகத்தை தரமுயர்த்தக் கோரிக்கை

வரணி. ஒக்.3

வரணி உப தபாலகம் தரம் உயர்த்தப்பட்டு தபாலகமாக ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. கடந்த 28 ஆம் திகதி வரணிப் பிரதேசத்துக்கு பயணம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் பிரதேச மக்களினால் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வரணி உபதபாலகம் 1974 ஆம் ஆண்டு அஞ்சலகமாக தர உயர்த்த தபால் தலைமையகம் வேண்டிய நடவடிக்கை எடுத்திருந்தது. இருந்தும் தகுதியான பாதுகாப்பான கட்டட வசதிகள் அச்சமயம் கிடைக்காதபடியால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதே ஆண்டு கைதடி உப அஞ்சலகமும் தரமுயர்த்தப்பட்டு இன்று தபாலகமாக இயங்குகின்றது.

பிந்திய கால கட்டத்தில் போர்ச் சூழல், இடப்பெயர்வு போன்ற காரணிகளால் குறித்த உப அஞ்சலகம் போதிய வருமானமின்மை காரணமாகத் தரம் உயர்த்தும் நடவடிக்கைகள் சாத்தியம் பெறவில்லை. இந்த நிலையிலேயே வரணிப் பகுதிக்குப் பயணம் செய்த அமைச்சரிடம் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. உரிய அதிகாரிகளிடம் இது தொடர்பில் தொடர்புகொண்டு ஆவன செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார்.

வரணிப் பிரதேசம் 11 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடி மக்கள் வசிக்கும் பிரதேசமாகும். உபதபாலகங்களில் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பொது மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய அஞ்சல் அலுவலகங்களை நாட வேண்டிய நிலையில் உள்ளனர்.

அண்மையில் கூட பிரதேச பொது நிறுவனம் ஒன்று இவ் உப அஞ்சல் அலுவலகத்தை தரமுயர்த்தி ஆவன செய்ய வேண்டி தபால் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுக்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ள நிலையில் வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் தனது ஒத்துழைப்பை வழங்கிச் சிபார்சை வழங்கி உதவுமாறு புத்திஜீவிகள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-122)

# ஜே.வி.பி. உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு. ஒக்.7

ஊவா மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவரும் நேற்று ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜே.வி.பி. சார்பில் பதுளை மாவட்டத்தில் 14,161 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட சமந்த வித்தியாரத்ன மற்றும் மொனராகலை மாவட்டத்தில் 5,785 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்ட ஆர்.எம். ஜயவர்த்தன ஆகியோர் ஊவா மாகாண ஆளுநர் நந்த மெத்திவ் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண உறுப்பினர்கள் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இன்று சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவுள்ளனர். சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெறவுள்ளது. ஹரின் பெர்ணான்டோ எம்.பி. உட்பட ஐ.தேகவில் ஊவா மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட 13 உறுப்பினரும் இன்று சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஊவா மாகாண முதலமைச்சராக ஷசீந்திர ராஜபக்ஷ கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் மேற்கொண்டார். அத்துடன், அரசின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய மாகாண சபை உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். ஆனால், மாகாண அமைச்சர்கள் அன்றைய தினம் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவில்லை. மாகாண அமைச்சுப் பதவிகளை வழங்கிவிட்டால், தவிசாளர் மற்றும் உதவித் தவிசாளர் பதவிகளை வழங்குவதில் எதிர்க்கட்சியினர் குழப்பத்தை ஏற்படுத்திவிடுவர் என்பதைக் கருத்திற்கொண்டே, அமைச்சுப் பதவிகளை வழங்குவதை அரசு தவிர்த்துள்ளது.

ஊவா மாகாண சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது அமைச்சுப் பதவிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(12)

## மரண அறிவித்தல்

### தங்கவேலு லோகநாதன்



அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலு லோகநாதன் அவர்கள் நேற்று (06.10.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கவேலு புஸ்பம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தனேஸ்வரியின் அன்புக் கணவரும், தரணீதன் (T.O - கட்டடங்கள் திணைக்களம், மன்னார்), மிதுலன், கௌரிதன்(கண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்; நாகேஸ்வரி (கனடா), இந்திராணி, தங்கேஸ்வரி, மகாலட்சுமி, இரத்தினகோபால், விவேகானந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் மகேஸ்வரன் கமலேஸ்வரி, மோகனேஸ்வரி (யாழ்.தினக்குரல்), அமரர் கோமேஸ்வரி, மற்றும் கயல்விழி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.01.1947
உதிர்வு 15.09.2013

அமரர்
### வீரலட்சுமி கந்தையா

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்க விட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா

இல.1203, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/குமுழமுனை மகா வித்தியாலயம்





ம.கமலகாந்தன் [அதிபர்]
செல்வி க.வசந்தமலர் [ஆசிரியர்]

எமது பாடசாலை அதிபர் ம.கமலகாந்தன், ஆசிரியை செல்வி வசந்தமலர் ஆகியோர் இவ்வருடம் 06.10.2014 தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற சிறந்த அதிபர், ஆசிரியருக்கான கல்வி அமைச்சால் வழங்கப்படுகின்ற உயர் விருதான

**பிரதீபா பிரபா**

விருதினைப் பெற்றமையை இட்டு பெரும் மகிழ்வடைகின்றோம்.
மேலும் பல பட்டங்கள் பெற்று கல்விப்பணி தொடர்ந்து சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரி கழகம்,
மு/குமுழமுனை மகாவித்தியாலயம்

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

## கண்ணீர் அஞ்சலி

### தங்கவேலு லோகநாதன்

(யாழ். இரும்பக பணியாளர்)



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சிறி சிவராம் றேடஸ்
248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



### முத்துக்குமாரு சிவகுமாரன்

(பகவான் மருந்தகம் உரிமையாளர்)

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பாள் வெதுப்பகம்
ஆனைப்பந்தி.
உரிமையாளரும்
ஊழியர்களும்

## மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் இல.141, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணத்தில் தற்போது வசித்துவருபவருமான

### பிலிப்பையா ஜெனிபேட்

கடந்த 30.09.2014 அன்று யாழ் மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா அவர்கள் முன்னிலையில் யாழ் மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக சத்திய பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார். இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்.

திரு திருமதி அருமைநாதன் நிர்மலாதேவி தம்பதியரின் மகனும் முதுகலைமாணி க.கஜன் அவர்களின் மாணவனுமாகிய சண்முகப்பிரியன் அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்



காலம் : 08.10.2014 பி.ப 2.00 மணி
இடம் : இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபைக் கலையரங்கு
அரங்கின் தலைவர் : செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

அரங்கின் அணிசெய்யும் கலைஞர்கள்
பாட்டு : கலைக்குரிசில் த.றொபேட்
வயலின் : சுருதிவேந்தன் அ.ஜெயராமன்
மிருதங்கம் : செல்வன் அ.சண்முகப்பிரியன்
கடம் : கலாவித்தகர் நா.மாதவன்
கஞ்சிரா : கலைமாணி நா.சிவசுந்தரசர்மா
முகர்சிங்: கலாவித்தகர் சி.செந்தூரன்
தம்புரா : இசைமாணி க.ரஜீவன்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# 20 லயன்ஸ் கழகங்கள் இணைந்து யாழில் பல்வேறு நலத்திட்டங்கள்

தென்மராட்சி, ஓக்.7

யாழ். மாவட்டத்தில் உள்ள 20 லயன்ஸ் கழகங்கள் இணைந்து எதிர்வரும் தீபாவளி தினத்தன்று கைதடி சாந்தி நிலையம், புத்தூர் வாதரவத்தை கிராமம் ஆகிய இடங்களில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளைச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத் தலைவர்களான லயன் சுந்தரேஸ்வரன் மற்றும் லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

தீபாவளி தினத்தன்று காலை 9 மணிக்குச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் இக்னேஷியல் கமிலஸ் தலைமையில் கைதடி சாந்தி நிலையத்துக்குச் செல்லும் குழுவினர் அங்குள்ள முதியோர்களுக்கு உதவிப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் வழங்குவர். அத்துடன் முதியோர்களுடன் இணைந்து கலை நிகழ்வுகளை நடத்தி முதியோர்களுக்கு மதிய உணவுகளையும் வழங்குவர்.

அங்கிருந்து புறப்படும் லயன்ஸ்கழக குழுவினர் புத்தூர் வாதரவத்தைக் கிராமத்துக்கு சென்று அங்குள்ள மூன்று முன்பள்ளிச் சிறார்கள், புத்தூர் விக்னேஸ்வரா வித்தியாலய தரம் 1 மாணவர்கள் என 75 பேருக்கும், விளையாட்டு கழகங்களுக்கும் விளையாட்டுப் பொருள்களை வழங்குவர். மேலும் அங்கு வசிக்கும் குடும்பங்களுக்கு 300 தென்னங்கன்றுகளையும், 300 முருங்கைக் கன்றுகளையும் வழங்கவுள்ளதாக மாவட்டத் தலைவர் லயன் சுந்தரேஸ்வரன் தெரிவித்தார். (த-9)

## மணியகாரன் பாடசாலையில் சரஸ்வதி சிலை

கரணவாய், ஓக். 7

கரணவாய் மணியகாரன் தோட்டப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை நேற்றுமுன்தினம் வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரால் திறந்துவைக்கப்பட்டது. வித்தியாலயத்தின் பழைய மாணவனும் பிரபல தொழிலதிபருமான ந.ரவிச்சந்திரனால் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் புதிதாகப் பாடசாலையில் சரஸ்வதி சிலை நிர்மாணிக்கப்பட்டது. இந்தச் சிலையே கடந்த வியாழக்கிழமை கல்விப் பணிப்பாளரால் திறந்துவைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சிநந்தகுமார் , கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா, வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம் மற்றும் உடுப்பிட்டிப் பிரதேச சபைப் பொறுப்பதிகாரி திருமதி செல்வமகாலட்சுமி சிவம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-108)

## பொதுமக்களுக்கான அறிவித்தல்



இப்புகைப்படத்தில் காணப்படும் **892502390V** என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவரும், பருத்தியோலை, கந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரியில் வசிப்பவருமாகிய **தயாபரன் தினேஸ்** (வாடிக்கையாளர் சேவை - கணனி வடிவமைப்புப் பிரிவு) என்பவர் தற்போது எமது நிறுவனத்தில் இல்லை என்பதையும், அவருடன் ஏற்படுத்திக்கொள்ளும் எந்தவொரு பணி உடன்படிக்கைகளுக்கோ / கொடுக்கல் வாங்கல்களுக்கோ / பேச்சு வார்த்தைகளுக்கோ, எந்த நபருக்கும் / அமைப்புக்கும் / கூட்டாண்மைக்கும் நாங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பானவர்கள் இல்லை என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

**கரிகணன்(தனியார்) நிறுவனம்.**
இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து மயில்வாகனப் பத்தர்

(முன்னாள் ''ஆச்சாரிஸ்'' நகைமாளிகை உரிமையாளர்)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு, 18 அரசடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மயில்வாகனப் பத்தர் நேற்று (06.10.2014) திங்கட்கிழமை மதியம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து-தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இராசலட்சுமி, பேரானந்தம் ஆகியோரின் மூத்த சகோதரரும், நகுலேஸ்வரன், நகுலேஸ்வரி, மங்களேஸ்வரி (கனடா), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும், சுந்தரலிங்கம் (கனடா), ஜீவராஜா ஆகியோரின் மாமனும், ராஜ்காந்த், தனுஷ்காந்த், அனுஷ்காந்த், ஜனார்த்தனி கேசவன், நிதர்சினி, மயூரன் (கனடா), சௌமியா (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும், திஷானனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.10.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 021 222 0673
0777 523859

(53012)(10)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### குமாரசாமி திவாகரன்

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி திவாகரன்(பிரசன்னா) அவர்கள் நேற்று முன்தினம் (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும் கிருஸ்ணமூர்த்தி-திருக்கேதீஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுபாசினியின் அன்புக்கணவரும் றகீஸின் பாசமிகு தந்தையும் திலீபன், தினேஸ், திலக்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-வள்ளிப்பிள்ளை மற்றும் வேலாயுதபிள்ளை-கமலாம்பிகை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.10.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்
(கச்சாய் அம்மன் கோவிலடி)

T.P : 0776102609

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினி ஆறுமுகம் (பூரணம்)

(காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் விநாசித்தம்பி ஆறுமுகம்
சிவசக்தி ஸ்டோர்ஸ் குளியாப்பிட்டி அவர்களின் அன்பு மனைவியார்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 12ஆம் வட்டாரம், யாழ்ப் பாணம், குளியாப்பிட்டி, கொழும்பு, கனடா ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினி ஆறுமுகம்(பூரணம்) நேற்று (06.10.2014) கனடாவில் காலமானார்

அன்னார் புங்குடுதீவு சின்னையா-கனகாம்பிகை தம்பதியரின் ஏக புதல்வியும் விநாசித்தம்பி- கண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ராஜலட்சுமி கலைநேசன் (ஈஸ்வரன்ஸ் டோர்ஸ் குயின் டென்ஸ் ஸ்டோர்ஸ் குளியாப்பிட்டி), கோபாலகிருஷ்ணன் (கனடா), இராதாகிருஷ்ணன் (கனடா), காலஞ்சென்ற தில்லைநேசன் (சிவசக்தி ஸ்டோர்ஸ் குளியாப்பிட்டி), விஜயலட்சுமி (கொழும்பு), சிவநேசன்(நியூ சிவசக்தி ஸ்டோர்ஸ் குளியாப்பிட்டி), நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், க.மகாலிங்கம்(முன்னாள் மாகாண திறை சேரி செயலாளர்) கு.விக்னேஸ்வரன் (மின் அத்தியட்சகர்- இ.மி.ச), கிரிதரன் (கனடா), நாளினி(குளியாப்பிட்டி), அருள்மொழி (கனடா), விஜயரோகினி (கனடா), ரஜனி(கொழும்பு), தரணி(குளியாப்பிட்டி), ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயராஜசிங்கம்(பிரான்ஸ்), காலஞ்சென்ற புலேந்திரன் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற சௌந்தரராஜா (கிளி யாழ். கபே திருமலை), கோணேஸ்வரன் (முகாமைத்துவ ஆலோசகர்), சண்முகராஜா (திருமலை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் பசுபதிப்பிள்ளை, காராளபிள்ளை சிவக்கொழுந்து நாகம்மா சோமசுந்தரம் மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும். ஜெகா ஜெயபிரகாஷ் (முகாமையாளர் Nation Trust Bank-யாழ்), லக்ஷிகா சங்கர் கிரிஷ் சுவானா வாணி (கனடா), டானியா சஞ்சீவ் நிலானி (கனடா), அசோக் பிருத்வி (கொழும்பு), ஜெயலக்ஷன் கிருஷிகஜெனனி டிலருஜன்(கொழும்பு), கரிவர் சன் புவிகேசன் சஸ்வினி (குளியாப்பிட்டி) அபினாஷ் அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.கோணேஸ்வரன்-சகோதரர்-071 4418539
க.மகாலிங்கம்- மருமகன்- 94777732892

(53017) (10)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வுபெறும்

# உயர்திரு. சுப்பிரமணியம் மகேஸ்வரன் (Special Trd in English) அவர்களின்

# சேவைநலன் பாராட்டு

### ஆசியுரை

சுப்பிரமணியம் மகேஸ்வரன் ஆசிரியர் அவர்கள் ஓய்வுபெறுவதையிட்டு வெளியாகும் பாராட்டு இதழிற்கு ஆசியுரை கூறுவதில் அகமகிழ்வடைகின்றேன். மகேஸ்வரன் அவர்கள் ஆங்கிலத்தில் மிகவும் புலமைமிக்கவர் என்பதை மாணவர்களினூடாக அறிந்துள்ளேன். அவரது உடல் நலம் சிறப்புற்று ஓய்வுகாலம் சிறப்படைய எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றேன்.

**லோஹா சமஸ்த்தா சுகினோபவந்து**
**சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்**
**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்.**

### அதிபரின் உள்ளத்திலிருந்து

எமது கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக இணைந்த சுப்பிரமணியம் மகேஸ்வரன் அவர்கள் சக ஆசிரியர் களுடன் நண்பராக பழகுபவர். மாணவர்கள் ஆங் கில அறிவைப் பெறவேண்டும் என்ற ஆதங்கம் உடையவர். ஆங்கிலதினப் போட்டிகளில் நாட கத்தை மிகவும் அற்புதமாகப் பழக்கி மேடையேற்றி யவர். ஆசிரியருக்கு வேண்டிய பண்புகளை தன தாக்கிக் கொண்டு மாணவர்களின் கல்வியை மேம் படுத்திய சிறந்த ஆசிரியர். ஆங்கில இலக்கியத்தை தனக்கென உரிய பாணியில் சிறப்பாக கற்பித்தவர். இவரது ஓய்வு எமது கல்லூரிக்கு பேரிழப்பாகும். இவர் தனது உடல் நலத்தைக் கருத்திற் கொண்டுஓய்வினை உரிய காலத்திற்கு முன்னர் பெறுவத னால் அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறை வனைப் பிரார்த் திக்கின்றேன்.

**அதிபர். வே. ஞானகாந்தன்.**

### ஆங்கிலப்புலமையில் விற்பன்னன்

சு.மகேஸ்வரன் அவர்கள் நான் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் எமது கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டவர். ஆங்கிலப் புலமையிலும் கற்பித்தலிலும் யாழ். மண்ணில் அவருக்கு நிகர் அவரே என்பதால் அவர் எமது கல்லூரிக்கு கிடைத் தமையைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

கற்பித்தலில் மட்டுமன்றி கல்லூரியின் ஆங்கில மன்ற செயற்பாடுகள் மற்றும் ஆங்கிலதின நிகழ்வுகளில் மாணவர்களைத் திறம்படப்பயிற்றுவித்து வந்தவர். ஆங்கில மொழியின் பிரயோகம் தொடர்பான சந்தேகங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவ்வப் போது உதவிவந்துள்ளார். ஓய்வுகாலத்தில் நல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மாணவர் சமுதாயத்திற்கு தனது ஆங்கிலப் புலமையை வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு, ஓய்வு காலம் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**அ.அகிலதாஸ் (முன்னாள் அதிபர்)**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர் நல்லூர்க் கோட்டம்**



Best Wishes

முதல் நியமனத் திகதி 16.04.1984

**சேவை விவரம்**

| | |
|---|---|
| மு/தேவிபுரம் அ.த.க. பாடசாலை | 23.04.1984-20.09.1988 |
| மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் | 21.09.1988-16.01.1990 |
| போலாவலன ஆசிரியர் கலாசாலை | 17.01.1990-18.02.1991 |
| மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் | 19.02.1991-28.05.1991 |
| யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை | 29.05.1991-19.10.1991 |
| பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி | 20.10.1991-31.12.1993 |
| யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை | 01.01.1994-30.09.1995 |
| யாழ்.இந்துக்கல்லூரி | 01.10.1995-02.06.2011 |
| யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | 03.06.2011-01.06.2014 |

### ஆங்கிலப்பேராசான்

சுப்பிரமணியம் மகேஸ்வரன் அவர்கள் ஆசிரியர் சேவையில் 1984 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். தேசியப்பாடசாலையான யாழ். இந்துக்கல்லூரியில் புகழ்பூத்த ஓர் ஆங்கில ஆசிரியராக ஆறு ஆண்டு காலம் சேவையாற்றி எமது கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். அவரை பாராட்ட கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெருமையாகக் கருதுகின்றேன்.

எமது கல்லூரியில் நடைபெறும் ஆங்கிலம் தொடர்பான சுற்றறிக்கை, கழக நிகழ்வு, மாணவர் பேச்சு, நாடகம், கவிதை, கட்டுரை போன்ற எந்த நிகழ்விற்கும் அவரின் உதவியை நாடும் போது மனச் சந்தோசத்துடனும், ஆர்வத்துடனும் உதவி செய்யும் நல்ல மனப் பாங்கை அவரிடத்தில் காணக் கூடியதாக உள்ளது. தனது திறமை மாணவர்களைச் சென்றடைய வேண்டும் அவர்கள் அதன் மூலம் மிளிர வேண்டும் என்பதில் மிக அக்கறை உள்ளவர். ஆசிரியர் கழகத்தில் அங்கத்தவராக சேர்ந்தது முதல் தனது உடல் சுகயீனத்தைக் கருத்தில் கொள்ளாது ஆசிரியர் கழகத்திற்கு தேவையான உதவிகளை வழங்குவதில் அவருக்கு நிகர் அவரே தான் என்றால் மிகையாகாது. ஓய்வுகாலத்தில் தனது உடல்நலத்தைப் பேணி ஆரோக்கியமாகவும், சிறப்பாகவும் வாழ ஆசிரியர் கழகம் இறைவனை இறைஞ்சுகின்றது.

**ஜெ.குமாரதேவன் (தலைவர்)**
**ஆசிரியர் கழகம்.**

Best Wishes

### An efficent Teacher

I have great pleasure in forwarding a message in appreciation the services rendered by Mr.S. Maheswaran in the field of English. Mr. Maheswaran as a vetaran teacher he dedicated himself to train the students to participate in the English Language Day Competitions.
He is instrumental in moulding many students in the field of English. He always persuades other staff to do their duties perfectly and had good relationship with other staff.
we thank him for the great Service he had done to Kokuvil Hindu College within a Short period I wish him a well earned retired Life

Mrs. S.Jayalingam
(Retired English Teacher)
Kokuvil Hindu College.

**ஆசிரியர் கழகம்- யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(C/16786)(10.6.3)

---

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வுபெறும்

# உயர்திரு. பேராயிரம்பிள்ளை இளமுருகன் (B.Sc. Dip.in Edu) அவர்களின்

# சேவைநலன் பாராட்டு

### ஆசியுரை

பே.இளமுருகன் ஆசிரியர் அவர்களின் சேவைநலன் பாராட்டு இதழிற்கு ஆசியுரை கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இளமுருகன் ஆசிரியர் அவர்கள் அனைவருடனும் அன்பாகப் பழகும் நற்பண்பு மிக்கவர். அத்துடன் இளமைத்துடிப்புடன் மாணவர்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துவதில் வல்லவர். அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதங்களைப் பணிந்து ஆசிகூறி அமைகின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்**
**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்**


### துணிச்சல் மிக்க ஆசிரியர்

விஞ்ஞானப்பட்டதாரியான பே. இளமுருகன் அவர்கள் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர் இடைநிலைவகுப்புக்களில் விஞ்ஞானம், சுகாதாரம், தொழிநுட்பம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்துள்ளார். மாணவர்களிடத்தில் ஒழுக்கம் கட்டுப்பாடு என்பற்றை நெறிப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர். தவறுகளைத் துணிவுடனும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலும் எடுத்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்.

என்னுடைய காலத்தில் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் வடபுறமாக உள்ள காணியில் பாடசாலைத் தோட்டம் அமைக்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தபோது மிகச்சிறப்பாக நிலத்தை ஒப்பமாக்கி அதனை விவசாயத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைத்தார்.

அவரது ஓய்வுக்காலம் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**அ. அகிலதாஸ். (முன்னாள் அதிபர்)**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்.**
**நல்லூர்க் கோட்டம்.**



முதல் நியமனத் திகதி:
05.08.1984

**சேவை விவரம்**

நு/லிந்துல சரஸ்வதி த.வித்தி.
10.09.1984-29.03.1990
யா/ஏழாலை மகா வித்தியாலயம்
30.03.1990-24.03.1991
யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி
25.03.1991-31.12.2002
யா/கோண்டாவில் றோ.க.த. பாடசாலை
01.01.2003-08.05.2005
யா/பரஞ்சோதி த.வித்தி
04.05.2005-01.01.2008
யா/சந்திரோதய வித்தியாலயம் உரும்பிராய்
02.01.2008-24.01.2008
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
25.01.2008-13.09.2014

Best Wishes

### துடிப்பான ஆசிரியர்

Best Wishes

இளமுருகன் அவர்கள் ஆசிரியர் சேவையில் 1984 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரியாக இணைந்து கொண்டார். அவரது பாடத்துறைக்கேற்ப இடைநிலைக்கல்விக்கு உரிய மாணவர்களிற்கு கற்பித்தார். வகுப்பறையில் ஒழுக்கம், கட்டுப்பாடுகளை மேற்கொண்டு மாணவர் கல்வியை மேம்படுத்தினார். அன்றியும் விளையாட்டுத்துறையில் அவருக்கு நல்ல ஈடுபாடு உண்டு என்பதை இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது மாணவர் அணிநடை சான்றாக அமைந்திருந்தது.

க.பொ.த. சாதாரணதர மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை கூட்டுமுகமாக நாடளாவிய ரீதியில் வே.தேவசேனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் கருத்தரங்கின் யாழ். மாவட்ட இணைப்பாளராக இருந்து எமது கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு இலவச பரீட்சைக் கையேடுகள், கடந்தகால பொதுப்பரீட்சை வினாவிடைகள் சகல மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு முன் நின்று உழைத்தவர். அவர் பாடசாலை நிர்வாகத்திற்கு அதீத ஒத்துழைப்பை வழங்கி உரிய காலத்திற்கு முன்னராக ஓய்வு பெறுகின்றார்.

அவரது ஓய்வு காலம் சிறப்பாகவும் முன்னேற்றகரமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவன்துணை புரிவாராக.

**ஜெ.குமாரதேவன் (தலைவர்)**
**ஆசிரியர் கழகம்.**

### அதிபரின் உள்ளத்திலிருந்து......

எமது கல்லூரியில் விஞ்ஞானப் பட்டதாரியான பேராயிரம் பிள்ளை இளமுருகன் ஆசிரியர் அவர்கள் விஞ்ஞான ஆசிரியராக மட்டுமன்றி தொழில்நுட்பக் கல்வியையும் மாணவர்களுக்கு செயல்முறை மூலம் கற்பித்தவர். இதனால் மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்டவர். தனது எண்ணங்களை துணிச்சலுடன் எடுத்துக்கூறும் ஆற்றல் படைத்தவர். இவர் மாணவர்களின் ஒழுக்க நலனில் அக்கறை மிகக்வர். மாணவர்களின் காலைப் பிரார்த்தனையை ஒழுங்காக்கி உரிய நேரத்தில் முடிக்கதக்கதற்கான செயலினைச் செய்தவர். துடிப்பு மிக்க இவர் தனது ஓய்வுக்காலத்தை வீணாக்காது வாழ்நாள் வரையும் சமூகத்தொண்டனாக வாழ விரும்பி சட்டக் கல்லூரியில் தன்னை இணைத்துக் கொண்டு ஓய்வினைப் பெறுகின்றார். அவரது உயர்கல்வி மேம்பட இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

**அதிபர்.**
**வே.ஞானகாந்தன்.**

### மாணவர்களின் உள்ளங்கவர்ந்த ஆசிரியர்


எமது கல்லூரியில் கடந்த ஏழு ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணிபுரிந்து தனது எதிர்காலத் தேவைக்காக ஓய்வுபெற்றுச் செல்லும் பே.இளமுருகன் ஆசிரியர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். மிடுக்கான நடை, நேர்கொண்ட பார்வை அன்புடன் கலந்த கண்டிப்பு, கதைகள் மூலம் கற்பிக்கும் உத்தி மாணவர்களைக் கவர்ந்தன. இவர் எமது கல்லூரியில் விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும் தொழில் முன்னிலைப் பாடங்களையும் கற்பித்து மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாணவர்களின் ஒழுக்கக்கட்டுப்பாட்டுக்கு உறுதுணையாக விளங்கியவர். இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர். நாகலிங்கம் இல்ல ஆண்கள் அணிநடைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து எமது இல்லம் வெற்றிபெற அரும்பாடுபட்டவர். அத்துடன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் கற்றல் வழிகாட்டிகளைப் பெற்றுக்கொடுத்து பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டியவர்.

இவருடைய ஓய்வுக்காலம் எண்ணியகருமம் கைகூடவும் தனது குடும்பத்துடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுவாழ எல்லாம்வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் அருள் புரிவாராக.

**திருமதி சுசீலா திருச்செல்வம் (உப அதிபர்)**

**ஆசிரியர் கழகம்- யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(C/16786)(10.6.3)



# நீளும் எச்சரிக்கைப் பட்டியல்

சென்னை மற்றும் கொல்கத்தா அணிகள் பங்குபற்றிய சம்பியன் லீக் இறுதியாட்டத்தில் கொல்கத்தா அணி சார்பாக பந்து வீசிய சூரியகுமார் யாதவின் பந்து வீச்சுக் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டு எச்சரிக் கப்பட்ட வீரர்களின் எச்சரிக்கைப் பட்டி யலில் இவரும் இணைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சம்பியன் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை சம்பியனானது. இதில் கொல்கத்தா அணி சார்பில் பகுதிநேர சுழற் பந்து வீச்சாளராக செயற்பட்ட சூரியகுமார் யாதவ் முறைகேடாகப் பந்து வீசியதாகப் போட்டி நடுவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். களத்தில் இருந்த நடுவர்கள் ராட் டக்கர், குமார் தர்மசேன, மூன்றாவது நடுவர் எஸ்.ரவி ஆகியோர். ஆட்டத்தின் காணொலிகளை மீளாய்வு செய்த ததில், சூரியகுமார் அனுமதிக்கப்பட்ட அளவை விட முழங்கையை மடக்கியது தெரிய வந்துள்ளது. எனவே, அவரது பெயர் எச்சரிக்கைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள் ளதாக சம்பியன் லீக் நிர்வாகம் அறிக்கை விடுத்துள்ளது: சம்பியன் லீக் ரி- 20 இன் சந்தேகத்துக்குரிய முறேகேடான பந்து வீச்சுக் கொள்கையின் படி, பி.சி.சி.ஐயின் சந்தேக பந்துவீச்சு நடவடிக்கை குழுவிடம், இந்த முறைப் பாடு கொண்டு செல்லப்படும். பி.சி.சி.ஐ. குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை, முறைப்பாட்டில் சிக்கிய பந்து வீச்சாளர் பந்து வீச இயலாது. வேண்டு மானால் துடுப்பாட்டத்தில் ஈடுபடலாம். சம்பியன் லீக் தொடரில் மட்டும் இதுவரை ஐந்து பந்து வீச்சாளர்கள் மீது முறைப்பாடு தெரிவிக்கப்பட் டுள்ளது. இதற்கு முன்னதாக கொல்கத்தா அணி யின் சுனில் நரைன், டொல்பின்ஸ் வீரர்கள் பிரனீ லன் சுப்ரேயன், அட்னன் ரசல், லாகூர் லயன்ஸ் அணியின் மொகமட் ஹபீஸ் ஆகியோரது பந்து வீச்சுக் குறித்து புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்களில் நரைன் இரண்டாவது தடவையாக வும் எச்சரிக்கப்பட்டதை அடுத்து சென்னை அணிக் கெதிரான இறுதியாட்டத்தில் பந்து வீசத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 15 வயதிற்குட்ட ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 48.65 மீற்றர் தூரம் எறிந்து யா/நெல்லியடி மத்திய கல் லூரியைச் சேர்ந்த மாணவன் வி.மதுரன் முதலாம் இடத்தைப் பெற் றார். (ரி- 422)

## அறிவித்தல்
## ஹாட்லிக் கல்லூரி
## பருத்தித்துறை

### தரம் 6 அனுமதி

எமது கல்லூரியில் தரம் 6 வகுப்பிற்கான அனுமதிக்கான விண்ணப்பங்கள் 04.10. 2014 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி 21.10.2014 ஆகும். விண்ணப்பப்படிவங் களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### மாணவர் விடுதி

எமது கல்லூரியில் புதிதாக மாணவர் களுக்கான விடுதி அமைக்கப்பட்டுள்ளது. மாணவர் விடுதியில் தங்குவதற்கான விண்ணப்பங்கள் 05.10.2014 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படும் . எமது காரியால யத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளவும்.

த.மிருகுந்தன்
அதிபர்

## சென்.மைக்கல் உதைபந்தாட்ட தொடர் யூனியன், ஞானமுருகன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.7

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுப்போட் டித் தொடரின் ஆட் டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங் களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங் கள் வருமாறு :

ஆனைக் கோட்டை யூனியன் விளையாட் டுக்கழக அணிக்கும் புத்தூர் விக்னேஸ் வரா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் இரண்டு அணி யினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற் றுக் கொள்ள ஆட்டம் சமநிலையில் முடி வடைந்தது. ஆட்டத் தின் வெற்றி தோல்வி காண்பதற்காக சம னிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட் டது. இதில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மயி லங்காடு ஞானமுரு கன் விளையாட்டுக் கழகஅணிக்கும்எல்லா ளன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத் தில் மயிலங்காடு ஞானமுருகன் விளை யாட்டுக்கழக அணி 4:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## கண்ணீர் அஞ்சலி

### தங்கவேலு லோகநாதன்

(யாழ். இரும்பக பணியாளர்)



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், பணியாளர்களும்.
யாழ். இரும்புத் தொழிலகம்
85, பிறவுண் வீதி, கொக்குவில்.
(53003)
(10)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.04.1944

மறைவு
27.09.2004

### தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

திதி: சதுர்த்தசி

எம் அன்பு அப்பா
பத்தாண்டு கடந்து சென்றாலும்
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த காலங்கள்
மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றன
காலத்தின் செயல்களால் கண் சிமிட்டும்
நொடிக்குள் எங்களை விட்டுச் சென்றுவிட்டீர்கள்
காலங்கள் கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனதில் தொடரும்

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் சுப்ரமணியம் விஜயபாலன்

பிறப்பு
25 . 07 . 1952

இறப்பு
07 . 09 . 2014



கடந்த 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதமடைந்த எங்கள் அன்புச் சகோதரனின் வீட்டுக்கிருத்தியம் நாளை (08.10.2014) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு இணுவில் மேற்கில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால்,

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

117, செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்



### திருமதி சொர்ணலட்சுமி தாமோதரம்பிள்ளை

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் வடக்கில் வசித்தவருமாகிய திருமதி சொர்ணலட்சுமி தாமோதரம்பிள்ளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (ஆசிரியர்)- தங்கம்மா (ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தாமோத ரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பீதாம்பரம்(ஆசிரியர்) மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்ற குமாரசுவாமி (இளைப்பாறிய PWD ஓவசியர்) மற்றும் பொன்னம்பலவாணர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சோமசுந்தரம்(இளைப்பாறிய ஆசிரியர்) காலஞ் சென்ற வர்களான சிவக்கொழுந்து , Dr நல்லையா, கமலநாயகி மற்றும் மனோகரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் தெய்வநாயகி, சிவசெந்திநாதன்(கனடா), சேந்தநாயகி, சர்வநாயகி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கருணாகரன் பிரியா(கனடா), சந்திரதாஸ்(ராதா), ரவிச்சந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குகபிரஷாந்(HNB) விக்ரம், ஆதித்தன், பிருத்துவி(கனடா), தர்ஷிகா-சதீஸ், டனீஷன் , சுஜன், துஷாந், சங்கீத், ராகேஷ்(சுவிஸ்) ஆகியோரின் அன்புபேர்த்தியும் விபிஷாவின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.10.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு எருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு
உரும்பிராய்.

T.P: 0214923294

தகவல்:
கருணாகரன்(கருணை)
(மருமகன்) (சி16798)



# சீன ஓபனில் பட்டம் வென்றனர் ஜோகோவிச், ஷரபோவா

சீன ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் பிரிவில் செர்பியாவின் ஜோகோவிச்சும், மகளிர் பிரிவில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் பட்டம் வென்றனர்.

சீனாவின் பீஜிங் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற



ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிச், செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சை எதிர்கொண்டார். போட்டி முழுவதும் ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6:0, 6:2 என்ற நேர் செற்களில் பெர்டிச்சை இலகுவாக வெற்றி கொண்டார்.

மகளிர் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில், தரவரிசையில் நான்காவது இடத்தில் உள்ள மரியா ஷரபோவா, கடும் போராட்டத்துக்குப் பின்னர் செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவாவை வீழ்த்தினார்.

முதல் செற்றை 6:4 என்ற ரீதியில் கைப்பற்றிய ஷரபோவா, இரண்டாவது செற்றை 2:6 என இழந்து. ஆட்டத்தில் சறுக்கினார். சவாலான மூன்றாவது செற்றில் 6:3 என்ற கணக்கில் குவிட்டோவாவை ஷரபோவா வீழ்த்தி பட்டத்தை வென்றார். பிரெஞ்சு ஓபனுக்குப் பின்னர் ஷரபோவா வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். இதன்மூலம், தரவரி சையில் அவர் மேலும் இரண்டு இடங்கள் முன்னேற வாய்ப்புள்ளது. (ரி)

## உலகத்தரம் வாய்ந்த ஆட்டம்



சம்பியன் லீக் வெற்றிக் கிண்ணத்தை சென்னை அணி கைப்பற்ற காரணமாக இருந்த அந்த அணியின் அதிரடி வீரர் சுரேஷ் ரெய்னா, இறுதியாட்டத்தில் ஆடிய ஆட்டம் உலகத்தரம் வாய்ந்தது என்று அந்த அணியின் வீரர்களான மக்கலம் மற்றும் டு பிளசிஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த சம்பியன் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் கொல்கத்தாவை தோற்கடித்த சென்னை கிண்ணத்தை வென்றது. இதில் அதிரடியாக ஆடிய ரெய்னா 62 பந்துகளில் 6 நான்குகள், 8 ஆறுகளுடன் 109 ஓட்டங்களை ஆட்டமிழக் காமல் குவித்து வெற்றிக்கு வித்திட்டார்.

இந்தநிலையில் ரெய்னாவின் ஆட்டம் பற்றிக் கருத்து தெரிவித்த அந்த அணியின்தொடக்கவீரர்மக்கலம், சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் உலகத்தரம் வாய்ந்ததாக இருந்தது. அதனால் தான் அவர் 20 ஓவர் கிரிக்கெட்டில் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக திகழ்கிறார் என்றார். இதே வேளை - அந்த அணியின் மத்திய வரிசை வீரர் டு பிளசிஸ் தெரிவிக்கையில்; சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் அருமையாக இருந்தது. எனது வாழ்க்கையில் நான் பார்த்ததில் அனேகமாக இதைத் தான் சிறந்த 20 ஓவர் துடுப்பாட்டமாக நினைக்கிறேன் - என்றார்.

## முடிந்தது சத்திரசிகிச்சை

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவுக்கு இடது காலில் ஏற்பட்டிருந்த உபாதைக்கான சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

இடது கால் தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் அவதிப்பட்டு வந்த மலிங்க உடனடியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காக கடந்த மாதம் அவர் ஆஸ்திரேலியாவுக்கு பயண மானார். அங்கு இவருக்கான சத்திர சிகிச்சைகள் வெற்றி கரமாக முடிந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. சத்திர சிகிச்சையின் பின்னர் மலிங்கதனது மனைவி மற்றும் இலங்கை கிரிக் கெட் அணியின் உடற்சிகிச்சை நிபுணர், சத்திரசிகிச்சை அளித்த வைத்தியர் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. தற்போது சத்திரசிகிச்சை முடிந்துள்ள போதிலும், அவரால் 16



வாரங்களுக்கு ஓய்வு எடுக்கவேண்டியுள்ளதால், குறித்த காலப் பகுதியில் ஆட்டங்களிலோ, பயிற்சிகளிலோ பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 2015 உலக கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே அவரால் பயிற்சிகளில் ஈடுபட முடியும் என்று தெரியவருகிறது. எனவே உலககிண்ணத்தொடரில் அவர் பங்கேற்பது தொடர்ந்தும் சந்தேகமாகவே உள்ளது. (ரி)

# தேசிய அணியில் யாழ். வீரன் ஞானரூபன்



இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த செபமாலை ஞானரூபன் என்ற யாழ்.பல்கலைக்கழக மாணவன் இடம்பிடித்துள்ளார். 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தெற்காசிய போட்டிகளில் பங்கேற்கவுள்ள 23 பேரைக் கொண்ட இலங்கை உதை பந்தாட்ட அணியிலேயே ஞானரூபன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனான ஞானரூபன் தற்போது யாழ். பல்கலைகழக அணி, இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், யாழ் மாவட்ட அணி, வட மாகாண அணி என்பற்றில் விளையாடி வருவதுடன் தனது திறமைகளையும் வெளிப்படுத்தி வருகிறார்.

தேசிய அணியில் இடம்பிடிப்பதைக் கனவாகக் கொண்டிருந்த இவர், ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தேசிய அணிக்கான தெரிவில் 32 வீரர்களில் 26 ஆவது வீரராக இடம் பெற்றமையால், தேசிய அணியில் இடம்பிடிக்க முடியவில்லை. எனினும் தனது திறமையை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்த ஞானரூபனுக்கு, அநுராதபுரத்தின் முன்னணி உதை பந்துக் கழகமான அநுராதபுரம் சொலிற் கழகத்தில் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது. கிடைத்த வாய்ப்பை கனகச்சிதமாக பயன்படுத்திக் கொண்ட ஞானரூபன் சொலிற் கழகத்தின் அழைப்பை ஏற்று அந்த அணிக்காக விளையாடுவதற்கு களமிறங்கினார். அங்கும் தனது திறமைகளை வெளிக்காட்டிய அவர் தொடர்ந்தும் தேசிய அணிக்கான கனவுடனேயே இருந்து வந்துள்ளதுடன், தனது கனவை நனவாக்குவதற்காக கடுமையான பயிற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் தற்போது இலங்கை அணிக்கான 23 பேர் கொண்ட கால்பந்தாட்ட அணியின் ஒரு வீரராக ஞானரூபன் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் 2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கவுள்ள இலங்கை தேசிய அணியில் ஞானரூபன் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் முல்லைத்தீவு மத்திய கல்லூரியைச் சேர்ந்த வைகுந்தவாசன் லோகிதன் 1.85 மீற்றர் உயரம் பாய்ந்து 19 வயதுப் பிரிவில் நிறவர்ண விருதைப் பெற்றுக் கொண்டதுடன், தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். (ரி- 86)

## திக்கம் உதைபந்தாட்டத் தொடர் நியூட்டன், நவஜீவன்ஸ் வென்றன

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்றன சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும், சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல்பாதியின் 6 ஆவது நிமிடத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தின் நிரோசன் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார். 1:0 என்ற கோல் கணக்கில் ஆட் டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் தமது ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்திய நியூட்டன் அணியினர் 35 ஆவது, 40 ஆவது மற்றும் 50 ஆவது நிமிடங்களில் தொடர்ச்சியாக கோல்களைப் போட 3:1 என்ற கோல் அடிப்படையில் நியூட்டன் அணியினர் வெற்றி பெற்றனர். அவ்வணி சார்பாக ரஜீவ் ஒரு கோலையும், தார்மீகன் 2 கோல்களையும் போட்டனர். அடுத்து மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இவ்வாட்டம் ஆரம்பமாகியதும் இரு அணியினரும் அசத்தலாக விளையாட பந்து இரு அணிகளினதும் கோல் பிரதேசங்களையும் மாறி மாறிச் சென்று வந்தது. இந்தச் சூழ்நிலையில் 22 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி சார்பாக உசானந் அற்புதமான கோல் ஒன்றைப் போட்டார்.

அதுவே அவ்வணியின் வெற்றிக் கோலாகவும் அமைந்தது. தொடர்ந்து இரு அணியினரும் மேலதிக கோல் எதனையும் போடாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் நவ ஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (ரி-108)

# இன்றைய ஆட்டங்கள்

கரணவாய், ஒக். 7

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ரி-108)

* * *

கரணவாய், ஒக். 7

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு;

காலை 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கணேசானந்தா விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கலைவாணி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வத்திராயன் மத்தி விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி-108)






# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 07.10.2014

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள்.

ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும்சிறப்பும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ் ஆலயமானது துன்னாலை, புலோலி வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல், வெள்ளை மணற்பரப்பு, பசுமை கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரிய தாகும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி.303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி.556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சிய டையத் தொடங்கியபோது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி விளங்கியது. திரு.ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட்டில் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், அவர்கள் குடியேறிய பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும் தெரியவருகின்றது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்ததாகவும், எனவே அவன் பெயரைக் குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லிபுரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு கடவுள் பக்தியும்,செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்தாள் அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டு வந்தாள். இக் காலத்தில் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்து வந்தார். இவ்வேளை இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறிது தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அவள் மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சங்கு, சக்கரம் முதலியவற்றைக் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீக பலனை எய்தியமை எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவிட்டு மறைந்தது.

இலவல்லி மச்சமாய், மாகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப்பட்ட ச்க்கரத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லியின் ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் ஆதலால் வல்லிபுர ஆழ்வார் எனப் பெயர் பெற்று சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடைபெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறுகின்றது. அதே நேரம் வைஷ்ணவர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்திர தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப்படுவார்.புராதன மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காணலாம். இவ் ஆலயத்தில் நாக தோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரியங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியதை வேண்டியவர்களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.



















குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான அனைத்துப் பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கோகில்ஸ் பேபி நீட்ஸ்**

(வடமராட்சியில் குழந்தை, கர்ப்பிணித் தாய்மார்களின் தோழன்)
இல.65, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 3545 /077 666 1805



**Beauty** Makeup center

Bridal Makeup
Hair Dressing
Facials and
Structure Cakes

Main Street, Point Pedro. T.P. 021 226 4394 | 077 652 9249



**ATF அருண்**
**புடைவையகம் & அழகுமாடம்**

சாறி, சல்வார், ஆண்களுக்கான
சேட், ரீசேட் மற்றும்
சிறுவர்களுக்கான
சகல ஆடைவகைகள்

Arun Tex
&
Fancy House

பிரதான வீதி, நெல்லியடி.
021 226 2857



தேரேறி வரும் வல்லிபுர மாயவனின் அருள்
அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

**SARAVANA TEX**

நவநாகரிக ஆடைகள்,நங்கையர்களுக்கான புத்தம் புதிய சாறிவகைகள், சல்வார் கமிஸ், சிறுவர் முதல் பெரியோர்களுக்கான றெடிமேற் ஆடைகள் மற்றும் பட்டுவேட்டி, சால்வைகள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**சரவணா**
**புடைவையகம்**

171, பிரதான வீதி, நெல்லியடி, (சம்பத் வங்கி அருகில்)
தொ.பே.: 021 226 2992



**PRIYANKA**
DigitalColourLab&Studio
Pointpedro Road,Nelliyady. 0094 21 226 2737
X-Treme Prints KodakExpress Digital Solutions NORITSU

15நிமிடங்களில்
NIC, Passport, Postal, Licence,
Visa, Studio Sitting
படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

Digital Photo Printing.
Album Designing, Album Making.
Photo Frames Making.
Chrystal Frame Making.
Cool, Hot, UV, 3D Lemination.
Indoor & Outdoor Photography.



உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்.பிரதான **ஹொண்டா வேர்ல்ட்** காட்சியறை மற்றும் நெல்லியடி **ஹொண்டா வேர்ல்ட்** காட்சியறை இணைந்து நடத்தும்
**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு -2014**
★ முதல் பரிசு HONDA Activa -i மோட்டார் சைக்கிள்
★ 10 பெறுமதியான ஆறுதல் பரிசுகள்.

10,000/= விலைக் கழிவு

விவேகம் உள்ளவர்களின் நம்பிக்கையான ஒரே தெரிவு
HONDA

ஜப்பான் உயர்தர தொழில் நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை விநியோகிக்கும் Stafford Motor.co (Pvt.)Ltd. இன் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்:
நிபந்தனைகளுக்குட்பட்டது.

**HONDA WORLD**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
077 0387444 / 021 226 4416

**HONDA WORLD**
214, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 0387 111 / 021 222 3316



Real Italian
**Vinmeen Pizza**

சிறிய நிகழ்வுகளுக்கான வரவேற்பு
மண்டபம் 60 ஆசன
வசதிகளுடன் உண்டு.

Vinmeen
RESTAURANT & BAKERY
Delivery Time : 11.00 a.m to 8.30 p.m

மங்களகரமான நிகழ்வுகளுக்குத்
தேவையான உணவுகளை
ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்

No.83, MAIN STREET, NELLIADI,KARAVEDDY
Tel 021 226 1051.



Easy Solutions
**EASY SOLUTIONS**
www.easysolutions.lk

கணினி விற்பனை திருத்தம்
லப்டொப் விற்பனை திருத்தம்
இணைய தள வழவமைப்பு
இணைய விளம்பரம்
டொமைன் சேவர் இடவசதி
மென்பொருள் வழவமைப்பு
நெற்வேர்க்கிங்
அன்ரிவைரஸ் தீர்வுகள்

MMV Road, Nelliady TP : 021 226 1120 , 0774386599



தேர் ஏறிவரும் கோபாலன் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக

**SUKAM MEDI CARE**
**சுகம் மெடி கெயர்**
பதிவு இல. வட/வ/வி.ப/704
வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்
Consulting Centre of Medical Specialists

ஆதார வைத்தியசாலை முன்பாக, மந்திகை,புலோலி.
"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
Base Hospital View Manthikai,Puloly.
T.P: 021 320 1565/ Mob: 071 901 1680



**Mobile & Lap Mart**
- Unlocking
- Spare Parts
- All kind of Cellular Phones Sales
- Software & Hardware Solutions
- Lap Accessories & Lap Repair

Main Street Nelliady
T.P: 021 226 1414

**மகோற்சவம் சிறப்புற வாழ்த்துக்கள்.**



வருடா வருடம் மகோற்சவம் நடைபெறுகின்றது. அதனால் மக்களும் மாயவனின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். தேர்த்திருவிழா என்றதுமே பக்தர்கள் நாலாதிசையிலும் இருந்து முந்தியடித்துக் கொண்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் வேண்டி ஓடி வருகின்றனர். மாயவனும் தேரேறி வீதியுலா வந்து பக்தர்கள் கேட்டவரம் அருள்கின்றான்.

வல்லிபுரமாயவன் தேரிலே வீதியுலா வரும் கண்கொள்ளாக் காட்சியை நேரில் கண்டுகளிக்க இயலாதவர்கள் எம்பெருமானை நினைவு கூர்ந்து அவனருளைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை. எனவே இச் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.மாயவன்வேண்டிய நேரத்தில் வேண்டிய அவதாரங்களை எடுத்து அடியவர்களை அண்மித்துச் சென்று அவர்களைக் காப்பாற்றி அருள் பாலிப்பவர். மஹோற்சவம் இனிதே நிறைவுறவும் பக்தர்கள் பயன் பெறவும் எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

இ.அன்னலிங்கம்.J.P
முகாமை அறங்காவலர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்.

**பிரதம குருமார்களின் நல்லாசிகள், நல்வாழ்த்துக்கள்**



இன்றையதினம் எல்லாம் வல்ல மாயவன் தாழ்பணிந்து பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் மிகப் புனிதம் வாய்ந்ததான இரதோற்சவ தினமாகும். கடந்த புரட்.மீ. 07ஆம் நாள் கொடியேற்ற துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இனிதே நடைபெற்று, இன்று சங்காரத் தொழிலைக் குறிக்கின்றதான தேர்த்திருவிழா வாகும். அடியவர்களின் பழுதுயர்களைந்து ஆன்ம ஈடேற்றத்துக் காக பாவங்களை, ஆணவம்,கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அழித்து மக்களைக் காக்கும் இறைவனின் தொழிலாகும். எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுரச் சக்கரரூப மாயவன் திருத்தேரிலேறிவந்து அடியார்படுதுயர் களையும் இந்நாளில் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக சமாதானமாக வாழ ஸ்ரீ வல்லிபுர மாயவனைப் பிரார்த்தித்து தமிழ் மக்கள் விரும்பியதைப் பெற்று நல்வாழ்வு பெற அவனை வேண்டி மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் பெரும் உவகையுடன் கூறிக் கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ ச.சு. சுதர்சனக்குரு.(J.P), பிரம்மஸ்ரீ ச.சு.புருஷோத்தமக்குரு.(J.P),
பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக்குரு.
பிரதான குருமார்கள், ஸ்ரீ ஆழ்வார் பீடம், ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் கோயில்,துன்னாலை, புலோலி.

உங்கள் கட்டடங்களை
நீண்டகாலப் பாவனையுடன் அழகாக வைத்திருக்க
ரோக்கியோ சிமெந்து, பெயின்ற் வகைகள் மற்றும் அனைத்து வகையான கட்டடப் பொருள்கள் மற்றும் சூரியலாக் பெயின்ற், சீற் வகைகளை ஒரே கூரையின் கீழ் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
எமரல்ட்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ். வீதி, உடுப்பிட்டி. தொ.பே.:021 226 3468

வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.
சஸ்வின் உணவகம்
காலை,இரவு சிற்றுண்டி வகைகளும், மதியம் புரியாணி, பிறைட் ரைஸ், கொத்துரொட்டி உணவு வகைகளும், தயாரித்து சிறந்த முறையில் வழங்கப்படும்.
விசேட நிகழ்வுகளுக்காக அனைத்து உணவு வகைகளும் ஓடர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
நியூ சஸ்வின் உணவகம்
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
0217917455
சஸ்வின் உணவகம்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.
0217917454

சகல விதமான அச்சு வேலைகளும் சிறந்த முறையில் குறிப்பிட்ட தவணையில் செய்து கொடுக்கப்படும்.
தீபன்
உரிமையாளர் சி.தீபானந்
பதிப்பகம்
தொ.இல
077 652 0315
வி.எம்.றோட், பருத்தித்துறை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
theepanoffsetprinters@gmail.com

RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை - புலோலி.
பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள்,
எஸ்லோன் பி.வி.சி பைப் வகைகள்,
கட்டடப் பொருள்கள், விவசாய மருந்து வகைகள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள் மற்றும்
மின்சாரப் பொருள்கள் என்பன
மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.
021 226 2696
077 869 5418

Mr.Concrete
ISO 9001 : 2008
Manufacturers of,
Concrete blocks
Hollow blocks
Curve blocks
Columns
Paving stones
Fence posts
Safety posts
Flower pots.
Tel : 0217222333 , 0212262777
Web : www.mrconcrete.lK
e.mail : mrconcretelk@gmail.com
Hotline : 0776126089
Factory - Kodikamam Road. Puloly.

அனைத்து மருந்து வகைகளுக்கும்
பால்மா வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்.
நெல்லியடி
N.M.M.V.Road, மெடிக்கல்ஸ்
Nelliady.
021 226 2975

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
அழகிய தங்க நகைகள் என்றதும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
பவானி நகை மாடம்
ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்.
ம.ம.வித்தியாலய வீதி,
நெல்லியடி.
தொ.பே.:
077 322 3060 / 021 492 0648

தேர் ஏறிவரும் சக்கரத்தாழ்வாரின் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக.
NITHARSHAN CREAM HOUSE
WEDDING CAR
SERVICES
ஐஸ்கிறீம்,சிற்றுண்டி ஆகிய-வற்றை எம்மிடம் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
Nitharshan Cream House
Bus stand. Point Pedro.
T.P : 077 621 4224

உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள். பெயின்ற் வகைகள். PVCபைப். மாபிள் வகைகள். என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள். எலக்றிக் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.

**மனோகரன் ஹாட்வெயார்**

CEMENT

சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே.: 021 226 4192

சகல விதமான கட்டட உபகரணங்களுக்கும் பெயின்ற் வகை களுக்கும், மின்சார உபகரணங்களுக்கும் நாடவேண்டிய இடம்.

**IEYNGARA KALANCHIYAM**

Main Street, Point Pedro.

077 190 7478

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்

**Green Leaf Cream House**

N.M.M.V.Road, Nelliady, Karaveday.

T.P: 077 377 3197

**SBD செல்லாச்சி புத்தகசாலை**

அப்பியாசப் புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பலவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

(7.6.3) பிரதான வீதி, பருத்தித்துறை. T.P : 077 312 6894

தேரேறி வரும் மாயவனின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆடை வகைகள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்கள், பரிசுப் பொருள்கள், அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

போட்டோ கொப்பி சேவையும் மலிவு விலையில் செய்து கொடுக்கப்படும்.

**சாயிராம் மதர் & பேபி நீட்ஸ்**

(மந்திகை வைத்தியசாலைக்கு அருகில்)

Hospital Road, Manthikai.

T.P.: 021 300 1790

தேர் ஏறிவரும் மாயவன் அருள் அனைவருக்கும் கிடைக்குக.

**கோபாலா கொமினிகேசன்**

உள்ளூர், வெளியூர், தொலைத் தொடர்பு சேவைகள், மற்றும் சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளுக்குமான Card வகைகள் மற்றும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் விற்பனை செய்யுமிடம்.

மந்திகை, சாவகச்சேரி வீதி, புலோலி.

***MAHY** beauty an Corner*

அனைத்து அழகு சாதனப் பொருள்களும்,
Ladies Hair Cutting, Straightning,
Rebounding, Perming,
Hair Colouring, Ironing,
Hot Oil Massage,
Henna treatment

உங்கள் விழாக்கள் எதுவாயினும் சிறந்த முறையில் அலங்கரித்துக் கொள்ளலாம்.

Ladies Beauty Items,
Eye brow shapping,
Full Face Threading, Facials,
Waxing, Face Bleaching,
Manicure & Pedicure,
Pimple Treatment

1st Mile Post, Point Pedro. T.P: 077 624 4880

தேரேறி வரும் மாயவன் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.



**போட்டோ அல்பத்துறையின் முன்னோடிகள்**




இலங்கையிலே முதன் முறையாக அதி நவீன யப்பான் தயாரிப்பில் உருவான படப்பிரதியாக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தி காலத்தால் கலர் மாறாத, அழியாத, கிழியாத, பாரம் குறைந்த அல்பங்களை 100 வருட உத்தரவாதத்துடன் எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்

**தவம் போட்டோ கலர் லாப்**

362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## லஞ்ச ஊழல் தின கருத்தரங்கு இன்றையதினம் நடைபெறாது

உலக லஞ்ச ஊழல் தினத்தை முன்னிட்டு லஞ்ச ஊழல்களை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் தடுப்பு திணைக்களத் தலைவர் டி.ஜி பாலபட்டபண்டிக் மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் தர்மவர்த்தன தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணத்தில் விசேட கருத்தரங்கை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

## வாழைச்சேனை பகுதியில் வயோதிபப் பெண் படுகொலை

மட்டக்களப்பு, ஒக்.7

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள கோழிக்கடை வீதியில் வயோதிபப் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி கோழிக்கடை வீதியில் தனியாக வசித்து வந்த றம்ழான் கலீமத்தும்மா (வயது 67) என்ற வயோதிபப் பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மூதாட்டி தனியாக வாழ்ந்துள்ளதோடு வாழ்வாதாரத்துக்காக இடியப்பம், அப்பம் போன்ற உணவுகளைத் தயாரித்து விற்பனை செய்து வந்துள்ளதோடு மீதப்பட்ட நேரத்தில் பன்புல், பாய் போன்றவற்றையும் பின்னி விற்பனை செய்து வருமானத்தை ஈட்டி வந்துள்ளார்.

ஞாயிறு மாலை அவரது வீட்டுக்கு இடியப்பம் வாங்கச் சென்ற சிறுமி மேற்படி மூதாட்டியின் வீட்டில் அவர் கழுத்து வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர் இதுகுறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளில் ஈடுபட்டனர். (வ)

## சிறுமிகள் மீதான வன்புணர்வு 1046 சம்பவங்கள் பதிவாகின

### 2014இன் முதல் எட்டு மாதங்களில்

கொழும்பு, ஒக்.7

இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் நாடு முழுவதிலுமுள்ள தொகுதிகள் மட்டத்தில் சிறுமிகள் தொடர்பில் 1,046 வன்புணர்வுச் சம்பவங் கள் பதியப்பட்டிருப்பதாக பொலிஸ்தரப்பு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவங்களில் 788 சம்பவங்கள் 16 வயதுக்கு குறைந்தோரின் காதல் தொடர்புகள் காரணமாக இடம்பெற்ற பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் என்பதோடு 213 சம்பவங்கள் பலவந்தமாக பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பாலியல் வன்புணர்வுகளாகும்.

16-18வயதுக்கு இடைப்பட்டோர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள 45 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்க ளும் இவற்றில் அடங்கும்.

2011,2012,2013 ஆண்டுகளில் பதிவாகியுள்ள சிறுமிகள், பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள பாலியல் வன்புணர்வுகளின் மொத்த எண்ணிக்கை 4,993 என்றும் பொலிஸ் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

அவற்றுள் 3,708 சம்பவங்களும் 16 வயதுக்குக் குறைந்த அதேவேளை காதல் தொடர்புகள் காரணமாக இணக்கத்துடன் நிகழ்ந்த பெண் வன்புணர்வுகளேயாகும். அந்த மூன்றாண்டுகளுள் 16-18 வயதுகளுக்கு இடையிட்ட வயதிலுள்ள 229 பேர் வன்புணர்வுகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும் பதியப்பட்டுள்ளது. (வ-22)

## திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் சாதனை



திருமலை, ஒக்.7

2014 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21, 26 ஆம் திகதி களில் தென்கொரியாவில் இடம்பெற்ற கொரியா சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்கு பற்றி அதிவிசேட சித்தி பெற்ற திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் எம்.ஏ.எம். அவ்ஹாம் என்பவருக்கு புனித சூசையப்பர் கல்லூரியில் அண்மையில் பாராட்டு விழா கல்லூரி அதிபர் வணபிதா. அன்ரனி பொன்சியன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ஆ.அனஸ், பிரதம விருந்தினராகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கல்லூரி கணித வினாடி வினாப் போட்டியில் ஆங்கில மொழிப் பிரிவில் 2010, 2011, 2012, 2013 ஆகிய 4 ஆண்டுகள் தொடர்ச்சியாக மாகாண மட்டத்தில் முதலாம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தேசிய மட்ட கணித வினாடிவினா போட்டி ஆரம்பித்த காலம் தொடக்கம் இக் கல்லூரிமாண வர்கள் கிழக்கு மாகாண அணியில்தொடர்ந்து பங்கு பற்றி சாதனை படைத்துள்ளனர். (வ)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர்தின விழா



களுவாஞ்சிக்குடி, ஒக்.7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தின விழா, மலையகக் கல்வியை கருத்தில் கொண்டு இம்முறை பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்டது.

சர்வதேச கல்வியகத்தின் அனுசரணையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி. ரி. சகாதேவ ராஜா தலைமையில் விழா நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக ஊவா மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி. வை. கலையரசி கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக பண்டாரவளை முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நடராசா, பண்டாரவளை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மதியழகன், பதுளை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. கருணாகரன், பசறை தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் பி. ஆறுமுகம் அகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு கிழக்கு உட் படநாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் சங்கத்தின் அசிரியர்கள் அடங்கலாக 400 இற்கு மேற்பட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிபர்கள், ஆசிரியர்கள், சேவைக்கால பயிற்சி ஆலோசகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தலைமையுரையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி. ரி. சகாதேவராஜாவும், வாழ்த்துரையை சங்கத்தின் பொதுச் செயலாளர். சரா. புவனேஸ்வரன்.மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோரும்நிகழ்த்தினர்.

நிகழ்வில் வரவேற்பு நடனம் மற்றும் நாட்டிய நாடகம் கவிதை நாடகம் போன்ற பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (வ)

## காட்டு யானைகளின் தொல்லை இழப்பீடு வழங்கப்படுவதில்லை

### நற்பிட்டிமுனை மக்கள் குற்றச்சாட்டு

அம்பாறை, ஒக்.7

அம்பாறை, நற்பிட்டிமுனை பிரதேசத்தில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் புகுந்த காட்டு யானைகள் பல வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளன.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

காட்டு யானைகளின் அட்டகாசங்களால் தமக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு எவ்வித நட்டஈடும் கொடுக்கப்படுவதில்லை என்று நற்பிட்டி முனை பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது பிரதேசத்துக்குள் புகும் யானைகளை விரட்டியடிக்க யானை வெடிகளையாவது அதிகாரிகள் வழங்க வேண்டும் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தமது பிரதேசத்துக்குள் புகும் யானைகளை விரட்டியடிக்க யானை வெடிகளையாவது அதிகாரிகள் வழங்க வேண்டும் என்று நற்பிட்டி முனை பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நற்பிட்டிமுனை பிரதேச மக்கள் யானைகளால் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்து அம்பாறை மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்ததாவது:

பிரதேசவாசிகள் தமது கிராம உத்தியோகத்தரின் ஊடாக யானை வெடிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவற்றை வழங்க நாம் தயாராகவுள்ளோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெ.நோர்வே விஞ்ஞானிகளுக்கு



2014 ஆம்ஆண்டுக்கானமருத்துவம் மற்றும் உடற் கூறியல் துறைக்கான நோபல் பரிசு அமெரிக்கா, நோர்வே நாடுகளைச் சேர்ந்த மூவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மூளை திசுக்கள் குறித்த கண்டுபிடிப்புக்காக அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜான் ஓ கீஃப், நோர்வேயைச் சேர்ந்த மே பிரிட் மோசர், எட்வர் ஐ. மோசல் தம்பதியருக்கு இவ் விருது அளிக்கப்பட்டுள்ளது.

நாம் எங்கே இருக்கிறோம் என்பதை எப்படி எமது மூளை அடையாளம் காண்கிறது? ஒரு இடத்தில் இருந்து இன்னொரு புதிய இடத்திற்கு எப்படி எம்மால் சரியாகச் செல்ல முடிகிறது? அதே பாதையில் அடுத்த முறை செல்லும்போது எப்படி மூளை அதை நினைவில் வைத்துக் கொள் கிறது.

செல்போன்களில் இருக்கும் ஜி.பி.எஸ். போல் மூளையில் செயற்படும் அந்த திசு எது? என்பவற்றை துல்லியமாக கண்டு பிடித்து சாதனை புரிந்ததற்காகவே, அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் ஓ கீஃப். நோர்வேயைச் சேர்ந்த மருத்துவ தம்பதிகள் மே பிரிட் மோசர், எட்வர் ஐ. மோசலுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. (வ)

## 2015இல் கிழக்கில் விசேடவிவசாய வலயங்கள்

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி விசேட விவசாய வலயங்களை எதிர்வரும் 2015ஆம் ஆண்டில்உருவாக்கஅரசுநடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுமார் 3000 ஏக்கர் நிலப்பரப்பை பயன்படுத்தி இவ் விசேட விவசாய வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் ஊடாக கிழக்கில் வாழும் சுமார் 80 வீதமான விவசாயக் குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் புதிய திட்டத்தினூடாக விவசாயிகளுக்கான வியாபார மற்றும் தொழில் வாய்ப்புக்களும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

# 30 வருடப் போருக்கான காரணம் அரசுக்கு இன்னும் தெரியவில்லை

*ஹசனலி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக். 7
இந்த நாட்டில்30 வருட காலப் போர் நடந்து முடிந்தும் ஏன் இந்தப் போர் நடந்தது என்பது பற்றி அரசுக்கு தெரியாமலுள்ளது. காரணமறிந்து சரியான தீர்வுகளைக் காணாத வரை இந்த நாடு சுடுகாடாக மாறுமென்பதில் சந்தேகமில்லை: இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹஸனலி எச்சரிக்கை விடுத்தார்.



நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவை அமைப்பு நடத்தும் நெனசல அறிவகத்தில் கணினிப் பயிற்சியைப் பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ்வழங்கும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் உரையாற்றுகையில் -
இந்த நாட்டில் முப்பது வருட காலப் போர் நடந்து முடிந்தும், ஏன் இந்த போர் நடந்ததென்பது அரசுக்குத் தெரியாமலுள்ளது. ஏன் இந்தப் போர் நடந்தது? எப்படிப் போர் ஆரம்பித்தது என்ற பிரச்சினைகளைத் தேடி அதற்கான சரியான காரணங்களைக் கண்டு, அக்காரணங்களுக்கு சரியான தீர்வைக் காணாவிட்டால் இந்த நாடு சுடுகாடாக மாறுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.
இன்று இந்த நாட்டில் சமூகங்களை வழிநடத்த வேண்டிய விழுமியங்கள் யாவும் கெட்டுப்போயுள்ளன. இனவாதம், அரசு, அரசியலுள்ள சில அமைச்சர்கள் - சில அரசியல் கட்சிகள் என சமூகத்தை வழிநடத்தவேண்டிய விழுமியங்கள் அனைத்தும் கெட்டுப்போயுள்ளன. இதை அரசு புரிந்தும் புரியாமல் நடந்துகொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் பீதியடையும்வகையில்மோசமான இனவாத போக்குக் கக்கும் நாடாக இந்தநாடுஇன்றுள்ளது. ஒரு முஸ்லிமைக் கண்டால் அவன் தலிபான் அல்லது அல்கெய்தா அமைப்பு என்பதும் ஒரு தமிழரைக் கண்டால் புலிகள் அமைப்பு என்பதும் இன்று இனவாதம் கக்குவோரின் வழக்கமாகிவிட்டது. ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் பேச்சு நடக்கப்போகிறது என்றாலே சிலருக்கு மட்டுமன்றிச் சில சிங்கள ஊடகங்களுக்கும் அடிவயிற்றைக் கலக்குகின்ற நிலைமை இன்று உள்ளது.
ஏதோ இணைந்து தேர்தலில் நிற்கப்போவதாகவும், தனி நாடு, தமிழ்நாடு கோரப்போவதாகவும், சிங்கள சமூகத்துக்கு எதிராக அணிதிரளப் போவதாகவும் கற்பனை செய்து கொள்கின்றனர். விஷமத்தனத்துடன் நோக்குகின்றனர். நாம் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஒரே பிராந்தியத்தில் வழங்கிறோம் பக்கத்து வீட்டுக்காரருடன் நாம் பேசினால் அது பிழையான விடயமாகுமா? திட்டமிட்ட சதியாகுமா?
இன்றைய நிலையில் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் இனத்துவேஷங்களைக் களைந்து விட்டு நாம் தமிழ் பேசும் மக்களென்றவரையறைக்குள் ஒற்றுமையாக சிந்தித்து இதய சுத்தியுடனும் வேறுபாடுகளை மறந்தும் ஒற்றுமைப்பட வேண்டும். இந்த ஒற்றுமை உறுதியாகவிருந்தால் மட்டும்தான், இப்பிராந்தியத்தின் மீது பிரயோகிக்கக்கூடிய, வெளியிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் - என்றார். (த)

# எபோலா வைரஸ் நோய் நாளுக்கு நாள் அதிகரிப்பு

*ஐ.நா அமைப்பு அச்சம்*

மேற்கு ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் உயிர்கொல்லி நோயான எபோலா வைரஸ் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அதற்குப் பரிகாரமொன்றைத் தேடுவது மருத்துவ ஆய்வாளர்களுக்குப் பெரும் சிரமமாகியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு அச்சம் வெளிப்படுத்தியுள்ளது.
இவ்விதம் அதிகரித்து வரும் இந்த வைரஸ் காற்றின் மூலமாகப் பரவிச் செல்ல ஆரம்பிக்குமானால் அது மனித குலத்தின் இறுதியான அழிவொன்றாகிவிடக் கூடுமெனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
இந்த எபோலா உயிர்கொல்லி ஆரம்பமான சந்தர்ப்பத்திலிருந்து இன்று வரை உயிரிழந்துள்ளோரின் தொகை 3 ஆயிரத்து 300 வரை உயர்வடைந்து சென்றுள்ளது.
ஐக்கிய நாடுகள் அமைப்பு இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், கிடைத்துள்ள அறிக்கைகளுக்கு அமைய, ஒவ்வொரு மணித்தியாலங்களுக்கும் ஐந்து பேர் எபோலா வைரஸின் தாக்கத்துக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கிறது. வைரஸ் காய்ச்சலொன்றான எபோலாவுக்கு சிறியோர், பெரியோர் என்ற பாகுபாடு இருப்பதில்லை. பத்துப் பேருக்கு எபோலா தாக்கம் ஏற்படுமானால் ஒன்பது பேரும் உயிரிழந்து விடுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (த-22)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

**வேலையாள் தேவை**
யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றினை பராமரித்துக் கொண்டு சமையல் செய்வதற்கு ஆண் வேலையாள் தேவை. தகுந்த சம்பளத்தடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.
வயது எல்லை 45 க்கு மேல் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 3796607

**காணி விற்பனைக்கு**
மல்லாகம் K.K.S வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0773121328, 0778866614

# கடந்த ஒன்பது மாத காலத்துக்குள் 1956 பாரதூரமான வாகன விபத்துக்கள்

*உயிரிழந்தோர் எண்ணிக்கை 1706*

கொழும்பு, ஒக். 7
இந்த ஆண்டின் கடந்த 9 மாத காலத்துக்குள் நாடு முழுவதுமாக இடம்பெற்றுள்ள பாரதூரமான வாகன விபத்துக்களின் எண்ணிக்கை ஆயிரத்து 956 வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸ்துறை அந்த வாகன விபத்துக்களினால் ஆயிரத்து 706 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் கூறியுள்ளது.
அந்த வாகன விபத்துக்களில் உயிரிழந்தோரில் ஆயிரத்து 443 ஆண்களும் 263 பெண்களும் அடங்குவதாக பொலிஸாரின் ஆய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.
தனியார் பஸ்கள் காரணமாக ஏற்பட்டுள்ள வாகனவிபத்துக்களின் எண்ணிக்கை 121 என்பதோடு அந்த பாரதூரமான விபத்துக்களினால் 130 போர் உயிரிழந்துள்ளதோடு அவர்களில் ஆண்கள் 111 பேரும், பெண்கள் 19 பேரும் அடங்குவர்.
கடந்த ஜனவரி மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 20 ஆம் திகதி வரை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் இடம்பெற்ற பாரதூரமான வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 33 ஆகும்.
சில தனியார் பஸ் சாரதிகள் ஒருவரையொருவர் முந்திச் செல்வதற்காகப் போட்டி போட்டு அசுர வேகத்தில் பஸ்களை செலுத்திச் செல்வதும் கவனக் குறைவாக வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறி வாகனங்களைச் செலுத் திச் செல்வதும் வாகன விபத்துக்களுக்குப் பிரதானமான காரணங் களாகியிருப்பதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (த-22)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதிய மாணவர்கள்,தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 11.10.2014
பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2.காலை 10.00-12.00
திங்கள், புதன் பிரிவுகள் ஆரம்பம் - 13.10.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

**மரண அறிவித்தல்**

**திருமதி இராசம்மா நவரத்தினம்**



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா நவரத்தினம் கடந்த (03.10.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், ஜெயரட்ணம் (கனடா), சுந்தரலிங்கம் (கொலண்ட்), இராஜேஸ்வரி (விசுவமடு), யோகேஸ்வரி (கோப்பாய்) காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், குண சிங்கம், தவராஜசூரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தருமரத்தினம், கனகலட்சுமி, யோகேஸ்வரி, கிருபைநாயகி, உஷாதேவி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியும், ரம்யா, ரமீபா, ரஞ்சித், சுஜாத்தா,சுஜித்தா, சுஜேத்தா, சுதீஸ், சுமித்திரா, ஜெயந்தன், தர்ஷினி, நிஷா, தருமரூபன்,விஜயரூபன், நாகநந்தினி, ஷௌரியா (ஆசிரியர், யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), மதன், மேனன், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்,
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2014) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.
(அன்றைய தினம் அஞ்சலி நிகழ்வு கோப்பாயில் அவரது மகளின் இல்லத்தில் நடைபெறும்.)
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னமார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
077 8215069

தகவல்:
த. தருமரத்தினம்
(மருமகன்)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.7
யாழ்.நகர், பெரியகடை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும், ஜே/80, ஜே/82 குடும்ப நல உதவியாளர்கள் இணைந்து நடத்தும் அனைத்துலக சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று கன்னாதிட்டி காளிகோயில் வில்வேஸ்வரி மாரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில், சிறுவர் நடனம், முதியோர் நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**After A/L What Next???**
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது
**Spoken English With Grammar - Quick Learning Course**
Duration: (1 1/2 Months)
- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.
**Diploma In English** Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.
**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)
**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.
We gurantee success rate 6.5 band and above
**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது.
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)
08.10.14 @ 9.00 am | 11.10.14 @ 8.00 am | 12.10.14 @ 11.00 am | 13.10.14 @ 3.00 pm
No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.